www.eelamview.com

விடுதலைப்புலிகள்

குரல் — 116 | வைகாசி — 2004 | அன்பளிப்பு — 12/=


- புயலின் மையத்தில் புயல்...
- ஒளியேற்றும் காலம்
- சிங்கள அரசியலின்...
- சிறுவர்கள் நலனும்...
- சந்திரிக்கா அம்மையாரின்...


# சமாதானத்தின் எதிர்காலம் சர்வதேசத்தின் கைகளில்!

**சமாதானப் பேச்சுவார்த்தையை நடைமுறைச் சாத்தியமாக்க சந்திரிகா அம்மையார், தனது முன்னைய கடும்போக்கைக் கைவிட்டு சிலபடிகள் கீழே இறங்கிவந்தார்.**

- **புலிகளை தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டார்.**
- **பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடர சம்மதம் தெரிவித்தார்.**
- **முன்னைய அரசுடன் செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டார்.**
- **புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவை பேச்சிற்கான அடிப்படையாக ஏற்றுக்கொண்டார்.**
- **புலிகளுடன் மட்டும்தான் பேச்சுவார்த்தை என்பதையும் ஏற்றுக்கொண்டார்.**



தமிழீழத் தேசியத்தலைவருடன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ்



தமிழீழத் தேசியத்தலைவருடன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி ராம்

அம்மையாரின் இந்த நிலைப்பாட்டு மாற்றம் காரணமாக சமாதானப்பேச்சு நம்பிக்கைக்குரியதாக மாறியது. ஆனால், சில நாட்களிலேயே அவர் புதிய நிபந்தனை ஒன்றை விதித்து மீண்டும் சமாதான நம்பிக்கையைக் குலைத்துள்ளார்.

இடைக்கால நிர்வாகத்திற்கான பேச்சு தொடர்ந்து கொண்டிருக்கும்போதே அதனுடன் இணைந்து நிரந்தரத் தீர்விற்கான பேச்சுக்களும் தொடங்கப்பட வேண்டும் என்பதே அந்தப் புதிய நிபந்தனையாகும்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அம்மையாரின் நிலைப்பாடு சரிபோன்று தோன்றும். ஆனால், கடந்தகால அனுபவங்கள் - நிகழ்கால அரசியல் யதார்த்தங்கள் என்பவற்றைச் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் அம்மையாரின் நிபந்தனை ஒரு சூழ்ச்சிகரமான அரசியலைக் கொண்டுள்ளது என்பது புலனாகும்.

இயல்புவாழ்க்கை - அபிவிருத்தி - மனிதாபிமானப் பணிகள் என்ற வரையறுக்கப்பட்ட விடயங்களைக் கையாளக்கூடிய ஒரு இடைக்கால நிருவாகத்தை அமைப்பதிலேயே சிங்கள அரசு தயாரில்லை. இதற்கே மாபெரும் அரசியல் எதிர்ப்புகள் - மிரட்டல்கள் தென்னிலங்கையில் எழுகின்றன.

அதேவேளை, அம்மையாரின் அரசாங்கமும் ஒரு சிறுபான்மை அரசாங்கமாக பலவீனமான நிலையில் உள்ளது. எந்த நேரத்திலும் அரசாங்கம் கவிழலாம் என்ற யதார்த்த நிலையே சிங்களத்தில் உள்ளது. இந்த நிலையற்ற அரசியற் சூழலில் தமிழர் தாயகம் - தமிழர் தேசியம் - தமிழர் தன்னாட்சி என்ற இறுதித் தீர்விற்கான தமிழரின் அரசியல் அபிலாசைகள் பற்றி விவாதிக்கக்கூடிய நிலை சிங்களத்து அரசியலில் இல்லை.

எனவே இரண்டு வகையான அரசியல் பிரச்சினைகளையும் ஒன்றாக விவாதிப்பது சமாதான முயற்சிக்கு ஆபத்தாகவே முடியும். ஆனால், இந்த ஆபத்தைப்பற்றி அம்மையார் அலட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில், அவரின் திட்டமே வேறு வகையானது. இடைக்கால நிர்வாகத்துடன் நிரந்தரத் தீர்வுக்கான பேச்சை இணைப்பது என்பது பேச்சுவார்த்தையை ஒருகட்டம் வரை இழுத்தடித்து அதன்பின் அதைக் குழப்பியடிப்பதையே நோக்கமாகக் கொண்டது. அம்மையாரின் திட்டத்தின்படி இடைக்காலத் தீர்வும் இல்லை. நிரந்தரத் தீர்வும் இல்லை என்பதே உண்மையாகும். இந்த உண்மையை மனதில் கொண்டே அம்மையாரின் ஆலோசனையை புலிகள் நிராகரித்தனர்.

அம்மையாரின் திட்டத்தின்படி பேச்சு குறித்த காலம் வரை இழுபடும்போது, டோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட பெருந்தொகை நிதி சிங்கள அரசுக்கு வழங்கப்பட்டுவிடும். பின்னர் அந்த நிதிவளத்தைப் பயன்படுத்தியே தமிழர்மீது மீண்டும் ஒரு போரை புத்தூக்கத்துடனும் - புதிய பலத்துடனும் தொடுப்பதே அவரின் திட்டம்.

புலிகளையும் ஏமாற்றி - உதவிவழங்கும் நாடுகளையும் ஏமாற்றி காரியம் சாதிக்க முனையும் காலாவதியாகிப்போன அரசியல் தந்திரத்தையே அம்மையார் இப்போதும் பயன்படுத்த முனைகிறார். இந்தச் சூழ்ச்சியை சர்வதேச சமூகம் குறிப்பாக உதவிவழங்கும் நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்.

அம்மையாரின் அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து புலிகள் இயக்கத்துடன் பரஸ்பர நல்லெண்ணச் செயற்பாடுகளில் ஈடுபடவே அது மறுக்கின்றது. ஒருபுறம் சமாதானச் செயற்பாடுகளுக்கு குழுக்களை அமைத்துக்கொண்டு மறுபுறத்தில் புலிகள் இயக்கத்திற்கெதிராக சர்வதேச பிரச்சாரங்களையும் அம்மையார் செய்வித்துக்கொண்டிருக்கிறார். புலிகள் இயக்கத்தை நேரடியாகவே சீண்டும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலைச் செயற்பாடுகளில் துணைப் படையினரை அம்மையார் ஈடுபடுத்துகின்றார். புலிகளை பலவீனப்படுத்துவது - தமிழர் தேசியத்தை சிதைப்பது - தமிழர் ஒற்றுமையைக் குலைப்பது என்ற பேரினவாதச் செயற்பாடுகளி

(தொடர்ச்சி 05 ஆம் பக்கம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# சிங்கள அரசின் படுகொலை அரசியல்

புலிகளின்குரல்

இந்த சமாதான அரசியல் காலத்தில் சிங்கள அரசு எதை நடைமுறைப்படுத்த விரும்புகின்றது?

நேர்மையான அரசியல் தீர்வையா! அல்லது, கோரமான சதி அரசியலையா!

இன்று, மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசபடைகளின் ஆதரவுடன் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டுவரும் படுகொலைகள் மேற்குறித்த கேள்விகளையே எழுப்புகின்றன.

புலிவீரர்கள் - புத்திஜீவிகள் ஊடகவியலாளர்கள் என்று முத்தளத்தில் தனது கொலை அரசியலை சிங்கள அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதுவரை ஒரு டசினுக்கும் மேற்பட்ட தேசப்பற்றாளர்கள் இதற்குப் பலியாகியுள்ளனர்.

தமிழரின் ஐக்கியமும் - தமிழ்த் தேசியமுமே இந்தக் கொலை அரசியலின் பிரதான குறியாகும். அதேவேளை, புலிகள் இயக்கத்தின் பொறுமையைக் குலைக்கும் நாசகாரத் திட்டமும் அதில் அடங்கியுள்ளது.

இந்தத் தரங்கெட்ட தந்திரோபாயங்களை உடனடியாக நிறுத்தும்படி புலிகள் இயக்கம் பல தடவைகள் அரசை எச்சரித்துள்ளது. ஆயினும், அரச தரப்பு அதற்குச் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை.

சூழ்ச்சிகளுக்கும் கொலைவெறிக்கும் பெயர்போன சிங்களத் தளபதிகளை கிழக்கு மாகாணத்திற்குப் புதிதாக நியமித்து தனது பழைய இராணுவக் கடும்போக்கையே சிங்கள அரசு இப்போதும் நடைமுறைப்படுத்த விரும்புகின்றது.

ஈழத்தமிழரின் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு இன்று தமிழ்மக்களிடையேயான ஒற்றுமை தளைத்தோங்கியுள்ளது. கடந்த இருபதுவருட காலத்திற்கும் மேலான ஆயுதப்போராட்டத்தின் மூலம் புலிகள் இயக்கம் வளர்த்தெடுத்த தமிழ்த் தேசியத்தின் எழுச்சிதான் இந்த இன ஒற்றுமைக்கு அடித்தளமாகவுள்ளது.

இவை சிங்களப் பேரினவாதத்தால் ஜீரணிக்கமுடியாத தமிழரின் அரசியல் அம்சங்களாகும். எந்த வகையிலாவது இவற்றைப் பலவீனப்படுத்த சிங்கள அரசு துடிக்கின்றது.

பீதியூட்டும் தொடர் கொலைவெறிச் செயல்கள்மூலம் தமிழ்ப் புத்திஜீவிகளையும் - தமிழ் ஊடகவியலாளர்களையும் தமிழர் போராட்ட அரசியலிலிருந்து தள்ளியிருக்கச் செய்விக்க சிங்கள அரசு முனைகின்றது. இதேவேளை துரோகி கருணாவின் பெயரைப் பயன்படுத்தி தமிழர் தேசியத்தை - தமிழர் ஒற்றுமையை சிதைக்கவும் சிங்கள அரசு திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

சிங்கள அரசின் இந்தச் சதி அரசியல் தற்போதைய சமாதான முன்னெடுப்பை சாகடிக்கும் அளவுக்கு கடுமை வாய்ந்தது. தமிழ் - சிங்கள தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை அரசியல் தடத்திலிருந்து இராணுவப் பாதைக்கு திசைதிருப்பிச் செல்லும் ஆபத்தையும் கொண்டது.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை சிதைக்க சிங்கள அரசுகள் எத்தனையோ சூழ்ச்சித் திட்டங்களை கடந்த காலங்களில், நடைமுறைப்படுத்திப் பார்த்தது. இறுதியில், அவை எல்லாவற்றிலும் படுதோல்விகளையே கண்டது.

இப்போதும் அப்படியானதொரு சூழ்ச்சி முயற்சியில் சிங்களம் இறங்கியுள்ளது. இதில் வெற்றிபெற சிங்களத்தால் முடியாது. இதை உணர்ந்து இத்தகைய கேவலமான சதி அரசியலை சிங்கள அரசு கைவிட வேண்டும் என்று புலிகள் இயக்கம் கேட்டுக் கொள்கின்றது.

இனிவரும் நாட்களில் இத்தகைய கொலைத்தாக்குதல்கள் தொடருமாயின் சமாதானப் பேச்சு என்பது அர்த்தமற்றுப்போகும்.

புலிகள் இயக்கம் தற்போதைய சமாதானச் சூழலை விரும்புகின்றது. இந்தச் சூழல், பேச்சுவார்த்தை என்ற அடுத்த கட்டத்திற்கு நகர்வதை, புலிகள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், சிங்கள அரசு இதை விரும்பாமல் சந்தர்ப்பவாத அரசியலிலும் - சதி அரசியலிலும் ஈடுபட்டால் அதன் விளைவுகளுக்கும் சிங்கள அரசே பொறுப்பேற்க வேண்டும். ●

## கௌரவிப்பு

04.06.2004 அன்று கிளிநொச்சியில் தமிழ் எழுத்துலகின் மூத்த பத்திரிகையாளர் திரு.எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) அவர்கள் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களினால் விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டார்.



ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத்துறையில், குறிப்பாக பத்தரிகையுலகில் பணியாற்றிய திரு.கோபாலரத்தினம் அவர்கள் தனது எழுத்துக்களினால் தமிழ்த் தேசியத்திற்கும், தமிழ் இனத்தின் எழுச்சிக்கும் மகத்தான சேவையாற்றியுள்ளார்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஈழத்தமிழரின் பத்திரிகைத்துறை வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய திரு.கோபாலரத்தினம் அவர்கள், எழுத்துலகம் ஆயுதமுனையின் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட, நெருக்கடியான காலகட்டங்களிலும் தனது எழுத்தாற்றலினால் உண்மை நிலையை மக்களின்முன் சூசகமாகப் புரியவைத்த அற்புதமான பத்திரிகையாளன்.

ஈழத்தின் கணிசமான நாளேடுகளின் ஆரம்ப வளர்ச்சியும் திரு.கோபாலரத்தினம் அவர்களின் பின்னணியுடனேயே சீர்மைபெற்றது என்பது மறுக்கமுடியாதது.

நிகழ்காலத்தை எதிர்காலத்துடன் இணைக்கும் தனது எழுத்து வல்லமையினால், உயிரோட்டமான படைப்புகளையும் அவற்றின் தலைப்புக்களையும் உருவாக்கும் ஆற்றலினால் எழுத்துலகில் ஒரு தனியிடத்தை தனக்கென அமைத்துக்கொண்டார். அதை தனது இனத்தின் விடுதலைக்கான எழுத்துக்களாக, தனது மக்களின் விழிப்புணர்வுக்கான எழுத்துக்களாக மாற்றியவர்.

பத்திரிகையுலகில், தனது எழுத்துக்களால் தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் இடையறாது அவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டிய தலைவர் அவர்கள் புலிச்சின்னம் பதித்த பரிசையும் அவருக்கு வழங்கி கௌரவித்தார். இந்த உன்னத நிகழ்வையெண்ணிப் பெருமகிழ்வுறும் தமிழீழ தேசமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் இனியும் அவர் தனது பத்திரிகைப் பணிமூலம் ஈழத்தமிழ் தேசியத்திற்கு உரமூட்டுவார் என வாழ்த்துகிறது.

*(01ம் பக்கத் தொடர்ச்சி...)*

லேயே அம்மையாரின் படையினர் ஆர்வம் காட்டுகின்றனர்.

அம்மையாரின் சொல்லையும் - செயலையும் சர்வதேச சமூகம் நன்றாக ஆராய்ந்து பார்த்து, அவருக்கு அரசியல் - பொருண்மிய அழுத்தங்களைக் கொடுத்து சமாதானப் பேச்சில் நேர்மையை கடைப்பிடிக்கச் செய்விக்க வேண்டியது சர்வதேசத்தின் தலையாய கடப்பாடாக உள்ளது. கடினமான - குழப்பகரமான சமாதானப் பேச்சுக்களைத் தவிர்த்து எளிமையான - படிப்படியான சமாதானப் பேச்சுக்களை இரு பகுதியினரும் நடாத்துவதே சமாதானப் பேச்சுக்களை வெற்றிபெறச் செய்யும். இந்த உண்மையை சர்வதேச சமூகம் அம்மையாருக்கு உறைக்கும்படி சொல்லவேண்டும்.

இல்லையேல், சர்வதேச சமூகத்தின் உதவியுடன் கடந்த மூன்றாண்டுகளாக போடப்பட்ட சமாதானத்திற்கான அத்திவாரம் தகர்ந்து போய்விடும். மீண்டும் இலங்கைத்தீவு இரத்தக் களரி மிகுந்த நாடாக மாறிவிடும்.

எனவே, போரா! சமாதானமா! என்ற கேள்விக்கான விடை, இன்றைய நிலையைப் பொறுத்தவகையில், உதவிவழங்கும் நாடுகளின் செயற்பாட்டிலேயே பெரிதும் தங்கியுள்ளது எனலாம். ●

www.eelamview.com

www.eelamview.com




# "புயலின் மையத்தில் புயல் இருப்பதில்லை"

"ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்கு தமது தேசிய இனத்தின் விடுதலைக்காக இராசதந்திரப்போரைக் கையாண்டு பாதுகாப்பதே பொருத்தமானது. அத்தகைய காலப்பகுதியில் உலகமாற்றம் மீண்டும் நிகழும். ஏனெனில் உரோம சாமிராச்சியம் போன்றோ அமெரிக்க சக்கராதிபத்தியம் நிலையானதும் தொடர்ச்சியானதுமான எழுச்சியை ஏற்படுத்த முடியாத உலகமய சூழலுக்குள் அகப்பட்டுள்ளது. உலக மயமாக்கத்தின் கீழ் ஏற்பட்டுவரும் **அதிர்ச்சி தரும் திடீர் மாற்றங்கள்** உலகத்தைச் சுருக்கியது போன்றே **கால அளவையும் வேகமாக சுருக்கி விடுகின்றது"**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வீச்சானது உண்மைகளைவிடக் கற்பனைகளையே உண்மைகளாக்கிவிடும் அற்புதங்களை நிகழ்த்தவல்லது. "அதிர்ச்சி தரும் திடீர் மாற்றங்கள்" இங்கும் கால அளவை சுருக்கி விடுகின்றன. தேர்தல்வரை எவ்வளவு துள்ளிக் குதித்தார்கள்? பாதுகாப்பிற்கு பங்கமென அரசாங்கமொன்றையே கலைத்தார்கள்? என்னென்னவெல்லாம் பேசினார்கள்? இப்போதோ வாயடங்கிப் போய்விட்டார்கள். பிராந்திய உலக அரசியல் அரங்கிலேற்படும் நுண்ணிய மாற்றங்கள் கண்டு திகைத்துப் போயுள்ளார்கள். இவை யாவற்றினையும் தொகுத்துப் பார்க்கும்பொழுது வரலாறு இப்பிராந்தியத்தில் புதிய மாற்றமொன்றை வேண்டிநிற்பதை புரியமுடிகின்றது. உலகநாடுகள் இராசதந்திர அணுகுமுறைகளுக்கு முதன்மையளித்து செயற்படும் இன்றைய வேளையில் விடுதலைப்புலிகள் தமது இருப்பினை, இராசதந்திர செயற்பாடுகளை உலக ஒழுங்கின் பொறிமுறைகளுக்கேற்ப **"உறுதிப்படுத்தியிருப்பது"** கண்டு கதிர்காமர், விமல் ஏன் சனாதிபதி கூட, கலங்கித்தான் போயிருக்கின்றார்கள். ஒரு இனத்தின் விடுதலை அதற்கு தலைமைதாங்கி போராடும் விடுதலையமைப்பு இவற்றின் பரிமாணங்களை புரியமுடியாது, இந்தியக் குடிமக்கள் மேல் குந்தியிருந்து குதிரையோட்டும் இந்தியாவை ஆளும் அதிகார வர்க்கம் படும்பாடோ சொல்லத்தரமன்று. ஆனால் வரலாற்றின் இயங்கு விதிக்கு முன்னால் இவையெல்லாம் அற்பம். இதனாலே எம்மக்கள் இப்போது இவர்களை நோக்கி வருமாறு கோருகின்றார்கள். **"பழியினை தவிர்த்துக் கொள்ளுங்கள் குருதி வடியும் ஆன்மாவோடு விடிவிற்குப் போராடும் இனத்தின் தவிர்க்கமுடியாத வெற்றியைத் தடுத்தவர் என்கிற வரலாற்றுப்பழி உங்கள்மேல் விழாது தவிர்த்துக்கொள்ளுங்கள்"**





இவ்வாறு எம்மக்கள் விண்ணப்பிப்பதற்கான காரணங்கள் மிக வெளிப்படையானவை. யாராவது தாமே வாந்தியெடுத்ததை வாரி விழுங்குவார்களா? இப்போது கதிர்காமர், விமல், சோமவன்ச ஏன் அம்மையார் உட்பட அதைத்தான் சிங்களத்தில் செய்கின்றார்கள். முதலில் அம்மையாரினதும் அவரது கூட்டாளி கதிர்காமரினதும் கதையைப் பாருங்கள். உலகெங்கும் ஓடி புலிகளை புறம்தள்ளப் பிறந்தவராக கருதிய கதிர்காமர் புலிகள் விடயத்தில் அமெரிக்கா நீக்குப்போக்காக நடப்பது கண்டு என்ன கூறினார்? ஈராக்கில் அமெரிக்கா தலையீடு செய்திருப்பதால் அங்கு நிலைமைகள் விரைவில் சீரடைந்தபின் புலிகள் **"நன்றாக கவனிக்கப்படுவார்கள்"** என அவர் கருதினார். ஆனால் இப்போதோ கதிர்காமரின் கடவுள் மீதே சூழும் பழிகண்டு அவர் விறைத்துப் போயிருக்கவேண்டும். **ஊடகங்கள், மனித உரிமை பட்டயங்கள் இவற்றினைச் சரியான விகிதத்தில் இணைக்கும்போது பிறப்பவை பயங்கரவாதம் சனநாயக விரோதம்** என்பது அமெரிக்க வாய்பாடு. இப்போது அதே வாய்பாடு அமெரிக்கா மீதே பாய்ந்து விட்டது. ஜெனிவா சட்டவிதிகளை எவ்வாறு அமெரிக்கா மீறியது என்பதை அமெரிக்க ஊடகங்கள் அக்குவேறு ஆணிவேறாக பிய்த்துக் காட்டியபோது அமெரிக்க மேலாளர்கள் மன்னிப்பு,



மன்னிப்பு என முனங்குகிறார்கள். **தீர்ப்புக்கள் திணிக்கப்பட முடியாது. அவை திருத்தப்பட வேண்டும்.** இதுவே இன்றைய உலக ஒழுங்கின் உச்சியில் ஒலிக்கும் குரல். இதனையே புலிகளும் இணைந்து ஒலிக்கின்றார்கள்.

இக்கட்டத்தில் ஒரு தகவலை இங்கு இணைக்க விரும்புகின்றோம். சென்ற ஞாயிறு (16.5.2004) சண்டே ரைம்ஸ் ஏட்டின் நடுப்பக்கத்திலிருந்து இது பெறப்பட்டது. வெளிநாட்டமைச்சராக கனதியாக பொறுப்பேற்றவுடன் கதிர்காமரை உடன் சீனா சென்று "நன்றி, நன்றி, செய்தவற்றிற்கெல்லாம் நன்றி"எனக் கூறுமாறு சனாதிபதி பணித்தார். போருக்கு இதுவரை தந்துதவிய ஆயுத தளபாடங்களுக்கு இலகு தவணையில் எவ்வித கட்டுப்பாடுமின்றி அள்ளியள்ளிக் கொடுத்த பெருந்தன்மைக்கு, இன்னமும் பெரும்தொகைப் பணம் சீன அரசின் உத்தியோக ஆயுத விற்பனை நிறுவனமான நொறின்கோ (NORINCO)விற்கு செலுத்தும் நிலையிலும் புதிதாக ஆயுதம் தருமாறு கோரவும் வாய்ப்புத் தந்தமைக்கு நன்றிகூற மூக்குக் கண்ணாடியை தளர்த்தி கண்களை இடுக்கிப் பார்த்தவண்ணம் கதிர்காமர் பறந்தார். சண்டே ரைம்சில் வராத இன்னொரு தகவலும் கொழும்பில் கசிந்தது. நாற்பதாயிரம் கோடியை வைத்து 'சித்து' காட்டும் மேற்குலக அழுத்தத்தைத் தவிர்க்க பெருமளவு நிதியுதவியும் சீனாவிடம் கேட்கப்பட்டதாம். அடுத்து கதிர்காமர் தரிப்பிடம் புதுதில்லி. பாரதிய சனதா பதவிக்கு வருவது நிச்சயமென்கிற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இப்பயணம் **நாசமே** விளைவித்ததாக சண்டே ரைம்ஸ் எழுதியது. புலிகளை விரட்ட, மிரட்ட பாதுகாப்பு உடன்பாடு (இதற்கான நகல் அவசரம் அவசரமாக கொழும்பில் ஆயத்தமாக்கப்பட்டு தூதுவர் 'சென்' ஊடாக அனுப்பப்பட இருந்ததாம்) மேலும், மிரட்ட "முழு அளவில்" பேச்சுக்களில் இந்தியா ஈடுபடல் இதுவே கதிர்காமர் அடையவேண்டிய இலக்கு. ஆனால் யத்வந்த் சின்காவே கதிர்காமரின் அதிக உற்சாகம் கண்டு சற்று திகைத்துப்போய் "அதுவென்ன முழு அளவு" என விளக்கம் கோரவேண்டியதாயிற்று. ஆனால் இப்போது சின்கா தனது தொகுதியிலே தோல்வியடைந்தது வேறுகதை.

அடுத்த தரிப்பிடம் வாசிங்டன். கதிர்காமரின் இப்பயணம் அவரது அழிவுப் பயணமாயிற்று. சமநிலை தவறி, இராசதந்திர நியமங்கள் மீறி தலைவியின் சங்கடநிலை புரியாது "மேதாவித்தனமாக" கதிர்காமர் உதிர்த்த கருத்துக்கள் அவருக்கே உலைவைத்தது. கதிர்காமரோடு முரண்பட்ட தனிப்பட்ட முறையிலும் அவரோடு உடன்படாத கருத்துநிலை கொண்ட ஜெயந்த தனபாலவை அம்மையார் அமைதிச் செயலகத்தின் அதிபதியாக்கிவிட்டார். தனபால உலகப் புகழ்பெற்றவர், ஐ.நா வின் உதவிச் செயலர் தகுதிக்கு நிகரான பதவிகள் வகித்தவர். அவரின் வருகை நிச்சயம் வெளிநாட்டுக் கொள்கை விவகாரத்தில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்துமென்பதும் இந்நியமனம் கதிர்காமருக்கு பிடித்தமானதல்லவென்பதும் உலகறிந்த உண்மை. **எப்போதுமே இறுதியாக சிரிப்பதையே விரும்பும் அமைதியுடனும் பொறுமையுடனும் தேசியத்தலைவர்** நடப்பதைப் பார்க்கும்போது வரலாற்றின் வலிய மொழியொன்றினை நினைவிற் கொள்வார். **"நீ சலுகைகளுக்காக உனதுரிமைகளை விட்டுக்கொடுப்பாயானால் இறுதியில் இரண்டையுமே இழப்பாய்"**

வரலாற்றில் இயங்கியல் விதிகளை சரிவர புரிந்துகொள்ளாமையால் ஒரு புரட்சியை வெறும் இளைஞர் கிளர்ச்சியாக்கி அதனையும் வன்முறைக் குழப்பமாக்கி இறுதியில் வேறு வழியின்றி சனநாயகத் தளத்தில் குதித்த ஜே.வி.பி இன்னொரு பாரிய வரலாற்றுத் தவறினை விடப்போகின்றதா? இதுவே இன்றைய வினா. வேறு வழியின்றியே சனாதிபதியின் புலிகள் தொடர்பான அணுகுமுறையை ஆதரிக்கின்றோம் என நந்தன கூறுவதும், அதே வேளை விமல் போன்றோர் வீராப்பாக புலியெதிர்ப்பு வசனங்களைக் கூறுவதும் எதனைக் குறிக்கின்றது? கபடத்தனத்தோடும் வேறு வழியின்றியும் பேச்சுக்களுக்கு சிங்களத்தரப்பு வருவது இவர்களுக்கு புரியாதா? சன்டே ரைம்ஸ் ஏட்டின்(16.5) நடுப்பக்கக் கட்டுரையின் இப்பந்தியைத் தன்னும் இவர்கள் வாசிக்காமலா இருந்திருப்பார்கள்? "எதற்காக சனாதிபதி இக் குத்துக்கரணம் அடிக்கின்றார்? பதில் மிக இலகுவானது. எல்லாமே பணத்திற்குத்தான். ஏப்ரல் 2ஆம் திகதிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற பணமில்லை. கூட்டுத்தாபனங்கள் அரசாங்க சபைகளில் மாதாந்த வேதனம் வழங்கவே பணமில்லை. மின்சார சபையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நிதிதேடி அரசாங்க வங்கிகளில் ஏறி இறங்குகின்றன. மேமாத இறுதியில்கூட பேச்சுக்களை தொடங்க அரசாங்கம் ஆயத்தமாகவிருந்தது. ஏனெனில் யூன் 3ஆம் திகதி பிரசல்ஸில் நிதியுதவி வழங்கும் நாடுகளில் நான்கின் கூட்டமொன்று நடைபெறவுள்ளது." எனவே "எல்லாமே பணத்திற்குத்தான்" என்பதை அம்மையார் செஞ்சட்டைத் தோழர்களுக்கு விளக்காமலா இருந்திருப்பார்? அப்படியிருந்தும் எதற்காக இந்த அலட்டல்?

வரலாற்றின் கண்ணிவெடிகளில் இப்போது ஜே.வி.பி சிக்கியுள்ளது. ஜே.வி.பி தனது உத்திகளின்படி ஆளுங் கட்சியாக வரவேண்டுமாயின் ஒரு முன்னோடியான நிருவாக செயற்பாட்டினையும், மக்கள் நலன்கருதிய திட்டங்களையும் நிறைவேற்றிக் காட்டவேண்டும். அவ்வாறு காட்டுவதாயின் அதற்கும் நிதியுதவி வேண்டும். அதனையும் சருவதேசம் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கவேண்டுமாயின் இத்தீவில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஆரோக்கியமான பாதையில் அடியெடுத்து வைக்கவேண்டும். இதுவே வரலாறு விதைத்துள்ள முதற்கண்ணி. இந்நிலையில் விமல் வீரவன்ச சொல்கிறார், சாத்தான்களின் கூட்டான புலிகள், நோர்வே தரப்பு, ரணிலின் முன்னணி எங்களை எந்த உத்தியைப் பயன்படுத்தி பொறிக்குள் சிக்கவைக்க முயன்றனரோ

(தொடர்ச்சி 15ம் பக்கம்)







க.வே.பாலகுமாரன்



www.eelamview.com


அருளாளன்

# சைப்பிரஸ்

## துன்பம் தொடர்கதையாகிறது


கி.மு.3800ஆம் ஆண்டில் ஏதோ ஒரு நாள். மத்திய தரைக்கடல் என்ற வாவியிலே நீந்திக் கொண்டிருக்கும் மீனாகத் தோன்றும் சைப்பிரஸ் தீவில் நிலவிய புதிய கற்கால பண்பாட்டை அன்றைக்கு நிகழ்ந்த பூகம்பம் அழித்துவிட்டது. ஆனால் அதற்குப் பின் அண்ணளவாக கி.மு.3500ஆம் ஆண்டளவில் அங்கு உருவாகிய மக்கள் கூட்டத்தினர் புதியவர்களின் வரவு எதுவும் நிகழ்ந்ததற்கான அறிகுறிகளைக் காட்டாதவர்களாகவே இருந்தனர். கி.மு.4ஆம் ஆயிரமாண்டுக் காலப்பகுதியைச் சேர்ந்ததும், எறிமி (ERIMI)யில் கண்டுபிடிக்கப் பட்டதுமான களஞ்சியப்படுத்தும் சாடி (PY - THOS)யும் கிசோணேகாவில் (KISSO NERGA) கண்டுபிடிக்கப்பட்ட களிமண் குடியிருப்புகளும் இதனைப் போதிய அளவில் உறுதிப்படுத்துபவையாகவே இருக்கின்றன. கி.மு.2500 - 2300க்கு இடைப்பட்ட காலத்திலே சாக்கோலித்திக் (CHALCOLI - THIC -செம்பு-கற்காலம்) பண்பாடு உருவாகியது. இந்தக் காலப்பகுதியைச் சேர்ந்த தூய செம்பினாலான உளி, கொழுக்கிகள், நகைகள் முதலியனவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இங்கு கண்டுபிடிக்கப் பட்ட முத்திரையும், வாழ்விடங்கள் ஒரே சீரான அளவில் இல்லாததும், இக்காலப்பகுதிகளில் சொத்துரிமைகள் நடைமுறையில் இருந்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றன.

மத்தியதரைக் கடலிலே துருக்கிக்கு தெற்காக அமைந்துள்ள சைப்பிரஸ் தீவிலே முதன் முதலாக கால்பதித்த அன்னியர்களாக ஆங்கிலேய இராணுவத்தினரே இருந்தனர். 1878, யூலை 8, 9ஆம் திகதிகளில் கரையிறங்கிய அவர்கள் பாமாகுஸ்ரா ஊடாக யூலை 12ஆம் திகதி தலைநகர் நிக்கோசியா வந்தனர். சைப்பிரசை மிக அமைதியான முறையில் அவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டனர். முதலாவது பிரித்தானிய உயர் ஆணையாளரான சேர் கானற் வூள்ஸ்லி (SIR GARNETT WOOLSLEY) 1878, யூலை 22ஆம் திகதி லார்நாகா வந்துசேர்ந்தார். சர்வதேச நோக்கிலே, இஸ்தான்புல்லில் செய்துகொள்ளப்பட்ட ஆங்கில - துருக்கிய உடன்பாட்டின்படி பெரிய பிரித்தானியாவானது, இத்தீவினுடைய கட்டுப்பாட்டையும் நிர்வாகத்தையும் கையேற்பதாகவே அது அமைந்தது. எனினும் சட்டப்படியான மேலாதிக்கம் துருக்கி சுல்தான் வசமே விடப்பட்டிருந்தது. 1914ஆம் ஆண்டில் பிரித்தானிய பேரரசின் ஒரு பகுதியாக சைப்பிரஸ் இணைத்துக் கொள்ளப்படும்வரை இந்த சர்வதேச ரீதியான தகுநிலை தொடர்ந்தது. துருக்கிய அதிகாரிகளுடன் ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக சைப்பிரஸ் வாசிகள் 1914வரை ஓட்டோமான் பிரசைகளாகவே கருதப் பட்டனர். 1880ஆம் ஆண்டின்பின் அதுவரை வெளி விவகார அமைச்சின் கீழிருந்த சைப்பிரஸ் தொடர்பான விவகாரங்கள் லண்டனில் இருந்த குடியேற்ற அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. பிரித்தானிய ஆக்கிரமிப்பின் பின் சைப்பிரசின் உள்ளக நிர்வாகங்கள் மறுசீரமைக்கப்பட்டன. நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந்த உயர் ஆணையாளர் பிரித்தானிய முதுநிலை நிர்வாக அதிகாரிகளின் துணையுடன் ஆட்சியை நடத்தினார். பிரித்தானிய உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்டிருந்த நிறைவேற்றுச் செயற்குழுவுக்கு ஆலோசனை வழங்குவோரின் தகுநிலையே இருந்தது. சைப்பிரசின் வரலாற்றில் பிரித்தானிய ஆக்கிரமிப்பு கொண்டுவந்த மிகக் குறிப்பிடத்தக்க மாற்றமாக சட்டவாக்க அவை ஒன்றை நிறுவியதன்மூலம் ஏதோ ஒருவகை நாடாளுமன்ற முறையை அறிமுகப்படுத்தியது இருக்கிறது.




இந்தத் தீவை தமக்குக் கையளித்ததற்கென துருக்கி சுல்தானுக்கு தாம் செலுத்திக் கொண்டிருந்த நட்டஈட்டை ஈடுசெய்வதற்கென சைப்பிரஸ் மக்கள் மீது கடுமையான வரிகளை பிரித்தானியர் விதித்ததானது பிரித்தானியரின் ஆக்கிரமிப்பு ஆரம்பமான காலப்பகுதிகளிலிருந்தே, சைப்பிரஸ் மக்கள் தொடர்ச்சியாகக் காட்டிவந்த அரசியல் ரீதியான எதிர்ப்புகளுக்கு காரணமாக அமைந்தது. 1878இல் செய்துகொள்ளப்பட்ட துருக்கிய - ஆங்கிலேயே உடன்பாட்டின் ஏற்பாடுகளின்படி சைப்பிரஸ் தீவானது பிரித்தானிய ஆக்கிரமிப்பின் கீழிருந்தாலும், துருக்கிய சுல்தானுக்கு திறை செலுத்தவேண்டியிருந்தது. துருக்கிய ஆக்கிரமிப்பின் கடைசி 5 வருடங்களினதும் சராசரி மேலதிக வருமானத்துக்கு சமமாக, இந்த நட்ட ஈடானது 92,799 பவுண் 11ஷில்லிஸ் 3 பென்ஸ் எனக் கணிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு சைப்பிரஸ் பிரசையும் ஆண், பெண், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி 10ஷில்லிங்குகள் (அரைப் பவுண்) வரி செலுத்தவேண்டியிருந்தது. அந்தக் காலத்து சைப்பிரஸ் மக்களின் வருவாய் மற்றும் கொள்வனவுத்திறன் அடிப்படையில், மிகவும் உயர்ந்த தொகையாக இது இருந்தது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகைகள் துருக்கிய திறைசேரிக்கு வழங்கப்படவில்லை. 1855ஆம் ஆண்டிலே ஓட்டோமான் அரசுக்கு ஆங்கில, பிரெஞ்சுக்காரர்களால் வழங்கப்பட்ட கடனை ஓட்டோமான் அரசு திருப்பிச் செலுத்த மறுத்துவிட்டதால் அக்கடனுக்கு பிணை நின்ற ஆங்கில, பிரெஞ்சு அரசுகளின் சார்பில், சைப்பிரஸ் மக்களிடம் பெறப்பட்ட வரிகள் மேற்படி கடன் வழங்கியோருக்கு வழங்கப்பட்டன. மேற்படி கடனோடு எந்த தொடர்பும் இல்லாத சைப்பிரஸ் மக்கள் இதனால் பெருந்துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தது.

பிரித்தானிய ஆக்கிரமிப்பை தொடர்ந்து வந்த நான்கு தசாப்தங்களிலான குடிசனத்தொகை அபிவிருத்தியானது நவீன சைப்பிரஸின் குடிசனத்தொகை போக்குகளை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.


Greek Cypriot leade

பொதுவாக சைப்பிரசின் குடிசனத் தொகை, ஒரு வளர்ச்சிப் போக்கைக் காட்டினாலும், துருக்கிய சைப்பிரஸ் மக்களின் தொகையில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியானது, ஆங்கிலேய ஆக்கிரமிப்பின் பின் சில துருக்கிய சைப்பிரஸ் மக்கள் துருக்கிக்கு புலம் பெயர்ந்தமையால் ஏற்பட்டதாகும். பிரித்தானிய ஆட்சியின் முதல் 35 வருடங்களின்போது தீவின் உட்கட்டுமாணம் மற்றும் பொருண்மிய வாழ்வில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களைவிட பிரித்தானிய நிர்வாகமானது (வீதிகள் அமைத்தது, சதுப்பு நிலங்களை உலர வைத்தது, மின் வழங்கியது, மீள் காடுவளர்ப்பு என்ற வகையில்) சைப்பிரஸ் மக்களின் சமூக வாழ்க்கை முறையிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது. 1928ஆம் ஆண்டில் ஓட்டோமான் குற்றவியல் கோவை மாற்றீடு செய்யப்பட்டது. 1935ஆம் ஆண்டின் பிரித்தானிய பொதுச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு 1946ஆம் ஆண்டில் அசையாத சொத்துக்கள் தொடர்பான முக்கிய சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. பொதுவாகவே பிரித்தானிய நீதிமன்றங்கள் நீதியானவையாயும் பக்கச் சார்பற்றவையாயும் இருந்தமையால் மக்களின் மரியாதையைப் பெற்றுக் கொண்டவையாக இருந்தன.


1821ஆம் ஆண்டில் கிரேக்க புரட்சி நிகழ்ந்து கிரேக்க அரசு உருவாக்கப்பட்டதும், கிரேக்கத்தோடு பொதுவான கலாச்சார மற்றும் மத ரீதியான தொடர்புகளைக் கொண்டிருந்த கிரேக்க சைப்பிரஸ் வாசிகள் கிரேக்கத்தோடு இணைந்துகொள்ளும் எண்ணப்போக்கை வளர்த்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இது துருக்கிய ஆக்கிரமிப்புக் காலத்திலும் பின் பிரித்தானிய ஆட்சிக் காலத்திலும் வளர்ந்தது. துருக்கி 1ஆம் உலகப்போரில் ஜேர்மனிக்கு ஆதரவாகப் போரிட்டதைத் தொடர்ந்து 1914, நவம்பர் 5ஆம் திகதி சைப்பிரஸ் தீவு பிரித்தானிய பேரரசோடு இணைத்துக்கொள்ளப்பட்டது. 'கிரேக்கத்துடனான இணைப்பு'க்கு எதிரான நிலைப் பாட்டை எப்போதும் கைக்கொண்ட பிரித்தானியா இணைப்புப் பற்றிய பேச்சு எழும்போதெல்லாம் துருக்கிய சைப்பிரஸ் வாசிகளின் பிரசன்னத்தை, முன்னணிக்கு கொண்டுவந்தது. 1903ஆம் ஆண்டில் கிரேக்க சைப்பிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் இணைப்புக்கு ஆதரவாக வாக்களித்தபோது துருக்கிய சைப்பிரஸ் உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது ஒதுங்கியிருந்தனர். 1ஆம் உலகப் போரின்போது கிரேக்கம் நேசநாடுகளுக்கு ஆதரவாக போர்ப்பிரகடனம் செய்தால், சைப்பிரசை கிரேக்கத்திடம் கையளிக்கத் தயாராக இருப்பதாக பிரித்தானியா அறிவித்தது. ஆனால் கிரேக்க அரசர் ஜேர்மனிய பரம்பரையில் வந்தவர் என்பதால், இந்த விருப்பக் குறிப்பு கிரேக்க அரசால் மறுக்கப்பட்டது. கிரேக்க சைப்பிரஸ் வாசிகளின் தேசியவாத உணர்வுகளை அடக்கும் வகையிலான நிலைப்பாட்டைக் கைக்கொண்டதன் பெறுபேறாக 1931, ஒக்டோபரில் வெடித்த இரத்தக் களரியான கிளர்ச்சியானது கடுமைமுறை மூலம் ஒடுக்கப்பட்டதோடு அனைத்து சைப்பிரஸ் வாசிகள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

1938 - 48 காலப்பகுதிகளில், கிரேக்க, துருக்கிய தொழிலாளர்கள் இணைந்து 8 மணிநேர வேலைகோரி போராட்டத்தில் இறங்கினார்கள்.

1947ஆம் ஆண்டில், சுயாட்சி வழங்கும் அரசியலமைப்பு மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கவென பிரித்தானிய ஆளுனர் வின்ஸர் பிரபுவால் கிரேக்க, துருக்கிய சைப்பிரஸ் வாசிகள் பங்குகொண்ட கூட்டம் கூட்டப்பட்டது. கிரேக்கத்துடனான இணைப்புக்கான கதவை இந்த ஏற்பாடு பூட்டிவிடும் என்பதால் கிரேக்கர்களும், இது உண்மையான சுயாட்சி இல்லை என்பதால் துருக்கியரும் மேற்படி யோசனையை நிராகரித்துவிட்டனர்.

இரண்டு உலகப் போர்களிலும் பிரிட்டனது தரப்பில் போரிட்ட கிரேக்கர்கள், கிரேக்கத்தோடு தங்களை இணைந்துகொள்ள பிரித்தானியா அனுமதிக்க வேண்டுமென்று கோரினார்கள். ஆனால் அப்போதும் "பேரரசுக் கனவில்" மூழ்கியிருந்த பிரித்தானியா அதனை அடியோடு மறுத்துவிட்டது. கிரேக்க - துருக்கிய சைப்பிரஸ் வாசிகளுக்கிடையேயான பேதங்களை அவர்களை "பிரித்து ஆளும்" தந்திரோபாயத்துக்காக பிரித்தானியா பயன்படுத்தியது. துருக்கிய தரப்பில் 'வொல்கன்'(VOLKAN) மற்றும் அதைத்தொடர்ந்து TMT(துருக்கிய எதிர்ப்பியக்க அமைப்பு) ஆகியவை 'சைப்பிரஸ் துருக்கியருக்கே' என்ற கோசத்துடன் களமிறங்கின. கிரேக்க தரப்பில் EOKA அமைப்பு களமிறங்கியது. இவர்களுக்கிடையேயான மோதல்கள் உக்கிரமடைந்தபோது, நிக்கோசியாவில் ஒரு பிரிக்கும் கோட்டை பிரித்தானியர் உருவாக்கிவிட்டனர். TMTஇன் பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக துருக்கிய சைப்பிரஸ் மக்கள் தொழிற்சங்க இயக்கத்திலிருந்து விலகியதோடு கிரேக்க சைப்பிரஸ் இன உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்து தங்களை முற்றாக துண்டித்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

1958இல் இந்த இரு சமூகங்களுக்குமிடையே பிரச்சினைகளை காரணம் காட்டி "இரண்டு சமூகங்களும் ஒன்றாக அமைதியாக வாழ்வது சாத்தியமில்லை" என்று பிரித்தானியர் வாதிட முயன்றனர். உண்மையைச் சொல்லப்போனால் 'மக்மில்லன் திட்டம்' எனப்பட்ட பிரிவினைத் திட்டமொன்றும் 1958இல் வகுக்கப்பட்டது. இதனால் ஏற்படக்கூடிய அபாயங்களை உணர்ந்துகொண்ட கிரேக்க சைப்பிரஸ் மக்கள் சுதந்திர சைப்பிரஸ் அமைப்பதை ஏற்றுக்கொண்டனர். இப்படியாக 1959, பெப்ரவரி 19ஆம் திகதி, பிரித்தானியா, கிரேக்கம், 1923ல் சைப்பிரஸ் மீதான அனைத்து உரிமைகளையும் இழந்திருந்தாலும், மீண்டும் பிரித்தானியாவால் சைப்பிரஸ் விவகாரங்களில் பயன்விளைவோடு தொடர்புபடுத்தப் பட்ட துருக்கி, சைப்பிரசின் கிரேக்க, துருக்கிய சமூகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர், சுதந்திர சைப்பிரஸ் நாட்டை உருவாக்கும் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். இந்த உடன்பாட்டின்படி கிரேக்க சைப்பிரஸ் இன ஜனாதிபதியும் துருக்கிய சைப்பிரஸ் இன உபஜனாதிபதியும் தெரிவுசெய்யப்படவிருந்தனர். இவர்கள் அந்தந்தச் சமூகங்களால் வேறுவேறாக தெரிவுசெய்யப்படவிருந்தனர் இந்த இருவரும் கூட்டு நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருக்கும் வெளிவிவகாரம், பாதுகாப்பு விவகாரங்களில் வேறுவேறாக இரத்துச்செய்யும் (VETO) அதிகாரங்களை கொண்டிருப்பதற்குமான ஏற்பாடுகள் இந்த உடன்பாட்டில் இருந்தன. பிரதிநிதிகள் சபைக்கு 35 கிரேக்க சைப்பிரஸ் இனத்தவர்களும் 15 துருக்கிய சைப்பிரஸ் இனத்தவர்களும் தங்கள் தங்கள் சமூகங்களால் தெரிவுசெய்யப் படவிருந்தனர்.


Turkish Cypriot leader

துருக்கிய சைப்பிரஸ்காரரான கலாநிதிகூக்குக் 1959, டிசம்பர் 3ஆம் திகதி போட்டியில்லாமல் சைப்பிரசின் முதலாவது உப ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். அதிமேற்றி ராணியார் மக்காரியோஸ் (ARCH BISHOP MAKARIOS) இற்கும் ஜோண் கிளெறைட்ஸ், கியூசீ (JOHN CLERI - DES QC) க்குமிடையே ஜனாதிபதி பதவிக்கு போட்டி ஏற்பட்டு 1959, டிசம்பர் 13அம் திகதி நடந்த தேர்தலில் சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதியாக மக்காரியோஸ் தேர்வுசெய்யப்பட்டார். பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களை தேர்வு செய்யவதற்கான தேர்தல் 1960, ஓகஸ்ட் 01ஆம் திகதி இடம்பெற்றது. 1960, ஓகஸ்ற் 16ஆம் திகதி அதிகார கைமாற்றம் நிறைவுசெய்யப்பட்டு கிழக்கு மத்தியதரைக் கடலில் இரு சமூகங்களைக்கொண்ட புதிய குடியரசொன்று உதயமாகியது. 82வருட பிரித்தானிய ஆட்சியையும் அது முடிவுக்குக் கொண்டுவந்தது.

இந்த புதிய குடியரசின் சமூகங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு 3 வருடங்களில் சீர் குலைந்து போனது. இதற்கு கிரேக்க சைப்பிரஸ் காரர்கள் அரசியலமைப்பையே குறை கூறினார்கள். இந்த அரசியலமைப்பை, டென்ராஸ் (DENTAS), கிளெறைட்ஸ் ஆகியோர் தலைமையிலான திறமை மிக்க சட்டவாளர்கள், துருக்கி, கிரேக்கத்தின் சட்ட ஆலோசகர்கள் முதலியோருடன் ஒரு நடுநிலை (சுவிஸ்) ஆலோசகரான பேராசிரியர் பிறைடல் ஆகியோரின் கடுமையான உழைப்பு உருவாக்கியிருந்தது.

இந்த அமைப்பு ஆரம்பத்திலிருந்தே, அழிவுக்குரியதாகவே இருந்தது. ஏனெனில், இந்த அரசியலமைப்பை, இறுதியான, தீர்வாக மக்காரியோஸ் கருதவில்லை. கிரேக்கத்துடனான இணைப்பிலேயே அவர் குறியாக இருந்தார். புதிய குடியரசு உருவாகிய நாளன்றே, "சுதந்திரம் என்பது EOKA இன் இலக்குமல்ல நோக்கமுமல்ல. தேசிய இலக்கை

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

www.eelamview.com

# ஒளியேற்றும் காலம்

"தமிழீழ விடுதலைப் புலிகள்" என்ற பெயரில் ஈழத்தமிழர்களின் ஆயுதப்போராட்ட அமைப்பு பிரகடனம் செய்யப்பட்டு இப்போது இருபத்தெட்டு ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கின்றன.

தனது பதினாறு வயதில், சிங்களப் பேரினவாதிகளின் தமிழர்கள் மீதான வன்கொடுமை கண்டு போராடப் புறப்பட்ட தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்கள், ஆரம்பத்தில் ஒரு அமைப்பைக் கட்டிவளர்க்கும் கனவைக் கொண்டிருக்கவில்லை. தனது இனத்தின்மீது வன்முறையைப் பிரயோகிக்கும் பேரினவாதத்தின் மீது ஏதோவொரு வகையில் பதிலடி கொடுக்கவேண்டும் என்ற உணர்வே அவருள் இருந்தது. அன்றைய காலகட்டத்தில் அவரைப்போலவே இன்னும் பல இளைஞர்கள் அத்தகைய உணர்வுகொண்டு செயலாற்றினார்கள்.

சிறிதுகாலத்தில் அந்த இளைஞர்களிடையே ஒரு தொடர்புநிலை ஏற்பட்டது. "தமிழர் மாணவர் பேரவை" என்ற பெயரின்கீழ் அவர்கள் அணிதிரண்டனர். ஆனால் அந்த அமைப்பும் அதன் தலைமையும் கொண்டிருந்த பலவீனங்கள் அதைச் செயலற்றதாக்கின. தலைவர் பிரபாகரன் அவர்களின் மனதில் தனியானதொரு அமைப்பைக் கட்டி வளர்க்கும் சிந்தனையை அவை ஏற்படுத்தின. அவ்வாறு உருவாக்கப்பட்ட "புதிய தமிழ்ப் புலிகள்" ஒரு தொடர்ச்சியான தலைமறைவு வாழ்வின்மூலம் (கடுமையான சவால்களை முகம்கொண்டு) உறுதியாகப் போட்ட அத்திவாரத்தின் மூலமே "தமிழீழ விடுதலைப்புலிகள்" என்ற விடுதலை இயக்கம் பிரகடனம் செய்யப்பட்டது.



விடுதலை அன்றேல் வாழ்வதற்கு வேறு வழியே இல்லை என்ற நிலைக்குள் தள்ளப்பட்டிருந்த ஈழத் தமிழினத்தின் மத்தியில் அன்றைய காலங்களில் விடுதலைக்காக எனக் கூறிகொண்டு அமைப்புகளும் தலைவர்களும் புற்றீசல்கள்போல வெளிக்கிளம்பினார்கள். ஆனால், தலைவர் பிரபாகரன் அவர்கள் கொண்டிருந்த உண்மையும், தூய்மையும், அசாதாரண ஆற்றலும் அவரை ஈழத் தமிழினத்தின் தனிப்பெரும் தலைவராகவும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை ஒரு அசைக்கமுடியாத பேரியக்கமாகவும் காலத்தால் நிலைபெறச் செய்தது.


ஆரம்பத்தில் ஒரு கெரில்லா இயக்கமாக துரோகிகளை எதிர்கொண்டு, பொலிசாரைத் தாக்கி, இராணுவத்தினரை ஈடாடச் செய்து, அதன் பின்னர் பிராந்திய வல்லரசான இந்தியாவையே தோற்கடித்து வெற்றிப் படிகளில் ஏறத்தொடங்கிய விடுதலைப்போராட்டம், இன்று முப்படைகளையும் கொண்ட ஒரு மரபுவழிப் படையாக, உலகத்தின் முன் ஒரு அங்கீகாரத்திற்குரிய அமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது.

இத்தகைய நிலைக்கு உயர்ந்து, தமிழினத்திற்கு ஒரு பலம்வாய்ந்த பாதுகாப்புக் கவசமாக உருப்பெறுவதற்காக விடுதலைப்புலிகள் அமைப்பு எதிர்கொண்ட சவால்களும், நெருக்கடிகளும் அசாதாரணமானவை. இவ்வமைப்பை முளையிலேயே கருக்க முனைந்ததிலிருந்து இற்றைவரை அவை நீட்சிபெற்றுச் செல்கின்றன.

ஆரம்பத்தில், மென்முறைப் போராட்டங்கள் காலாவதியாகிவிட்ட நிலையில், ஆயுதமேந்திப் போராடி தியாகம் செய்யத் தயாரில்லாத தமிழ் மிதவாதத் தலைவர்கள் முதலாவது தடைகளாகினர். "சிறு பிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது" என்றும் "கைத்துப்பாக்கியுடன் தமிழீழம் காணக் கனவு காண்கிறார்கள்" என்றும் கூறி தமது சுயநலனுக்காகத் தமது சமூக அந்தஸ்த்தைக்கொண்டு, போராட்டத்தை அழிப்பதற்காக அவர்கள் இடையறாது முயற்சித்தபோதும், தலைவர் அவர்களின் இடையறாத முயற்சியினால் போராட்டம் பலப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டது.

இதன்பின்னர் "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்று பிரகடனம் செய்து தனது இராணுவ இயந்திரத்தை விடுத்லைப்புலிகள் அமைப்பின்மீது முழுமையாக இயங்கச்செய்து அதைத் துடைத்தெறிந்துவிட முனைந்ததொரு காலம் வந்தது. அந்த முயற்சியின் தோல்வியில்தான் "ஆயிரம் சாரம் கட்டிய பையன்கள்தான் இருக்கிறார்கள். ஒரு சிகரட் பற்றி முடிப்பதற்குள் அவர்களின் கதையை முடித்துவிடுவோம்" என்ற இறுமாப்புடன் வந்த இந்தியப் படைகளின் காலம் வந்தது.

அப்போதெல்லாம் விடுதலைப்புலிகளின் சாவுச்செய்தி பலராலும் முழுமையாகவே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. "ஒருதுளி பேனா மையினை மட்டும் சிந்தியதன்மூலம் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் குருதி சிந்திச் செய்து முடிக்கவேண்டிய பணியை இந்தியர்களிடம் ஒப்படைத்துவிட்டோம்" எனத் தனது இராசதந்திர ஆற்றலை எண்ணிச் சிங்களதேசம் பெருமை கொண்டிருந்தது. ஆனால், இந்தக் காலத்தை வெற்றி கொண்டதன் விளைவாக காடுகளுள் இருந்து நன்கு பயிற்றப்பட்ட, சீருடையும் நவீன ஆயுதங்களும் தரித்த விடுதலைப்புலிப் போராளிகள் தமிழர் தாயகம் எங்கும் பிரகாசமான நட்சத்திரங்களாக வியாபித்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளை ஒரு பெரும் சக்தியாக அங்கீகரித்து சிங்களதேசம் பேச்சுக்கு அழைக்கும் நிலையும் உருவானது.




பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்றுப்போன நிலையில், இரண்டாம் கட்ட ஈழப்போர் மூண்டது. இப்போர்க்காலத்தின் ஆரம்பத்தில் சர்வதேச உலக ஒழுங்கில் ஏற்பட்ட திடீர் மாற்றம் விடுதலை அமைப்புகளின் வளர்ச்சிப் போக்கை மோசமாகப் பாதிக்கவல்ல சூழலை உருவாக்கியது. அப்போதிருந்த ஏனைய விடுதலைப் போராட்டங்கள் பலவீனப்பட்டும், அழிந்தும் போனபோது விடுதலைப் புலிகளும் அழிவைநோக்கிச் செல்லப்போகிறார்கள் என உலகின் முக்கிய தரப்பினர் எதிர்பார்த்திருந்தார்கள். "இருபதாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பெற்றதொரு விடுதலைப் போராட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்படப்போகிறது" என்பதாக அவர்களின் ஆய்வும் இருந்தது. இக்காலப்பகுதியில் சர்வதேசச் சூழலை யதார்த்தமாக விளங்கிக்கொண்டு, எப்போதும் சொந்தக் காலிலேயே நிற்பது என்ற தனது கொள்கையின் விளைவாக எமது போராட்டத்தைச் சர்வதேசச் சதியி



(தொடர்ச்சி 12ம் பக்கம்)


www.eelamview.com

www.eelamview.com





# சிங்கள- அரசியலின் அரசியலுக்கு ஏமாறும் வெளிநாடுகளும் அஞ்சும் தமிழ்மக்களும்

சாரணன்

இலங்கை விவகாரத்தைக் கையாண்டு வந்த ஜீ.பார்த்தசாரதியை களத்திலிருந்து அகற்றுமாறு இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜேவர்த்தன இந்தியப் பிரதமராயிருந்த திரு.ராஜீவ்காந்தியிடம் கோரினார். அப்படியே அவர் அகற்றப்பட்டதுடன் ஜே.ஆர் க்கு பிடித்தமான ரொமேஸ் பண்டாரி களம் புகுந்தார்.

ஜீ.பார்த்தசாரதியை களத்திலிருந்து அகற்றுமாறு ஜே.ஆர் கோரியபோது அவர் அதற்கு வெளிப்படையாகக் கூறிக் கொண்ட காரணம் பார்த்தசாரதி ஒரு தமிழனாக இருப்பதால் அவர் இலங்கைத் தமிழருக்கு சாதகமாக செயற்படுவார் என்பது.

இலங்கை விவகாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டு அதுபற்றி அதிகம் அறிந்துகொண்டிருந்த நோர்வே அரசுப் பிரதிநிதி திரு.சொல்கெய்மை இலங்கை இனப்பிரச்சினை காலத்தில் அவர்வகித்த முதன்மை ஸ்தானத்தில் இருந்து அகற்றிவிடுமாறு இலங்கை ஜனாதிபதி திருமதி.சந்திரிகா குமாரணதுங்க நோர்வே அரசை கேட்டுக் கொண்டார். அதன்படி அவ் ஸ்தானம் கைமாறியது.

அவரை அவ்வாறு மாற்றவேண்டும் என்று கோரியதற்காக சந்திரிகா கூறிக்கொண்ட காரணம் அவர் விடுதலைப்புலிகளுக்கு சாதகமானவர் என்ற குற்றச்சாட்டாகும்.

இங்கு மேற்படி இரு விவகாரங்களிலும் இருவேறு விளக்கங்கள் இருப்பினும் அதில் ஒரு நோக்கமே இருந்தது. அதாவது இலங்கையின் இன விவகாரத்தில் தொடர்ந்து ஈடுபடுமொருவர் தன் அனுபவத்திற்கு ஊடாக சிங்களத் தலைவர்கள் ஏமாற்றிச்செல்வதை புரிந்துவிடுகிறார். அதாவது ஆரம்பகாலத்தில் சிங்களத் தலைவர்கள் துடிப்புடன் பெரு நம்பிக்கையளிப்பவராய் காட்சியளித்து அதன் மூலம் அவர்களைத் தம்பக்கம் வென்றெடுத்துவிட்டு இறுதியில் பிரச்சினையை கை நழுவ விட்டுவிட்டு வேறு சம்பந்தா சம்பந்தமில்லாத புது விடயங்களைப் பற்றி கதைக்கத் தொடங்கிவிடுவார்கள் என்பதே.

அல்லது அதிக கூர்மதி உள்ள ஒருவன் விரைவில் சிங்களத் தலைவர்களின் ஏமாற்றுக்களை புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டால் ஏதோ ஒரு சாக்குப் போக்கைச் சொல்லி அவரை களத்திலிருந்து அகற்றிவிடுவது அவர்களது இராஜதந்திர பாரம்பரியத்தில் ஒரு முறையாகும்.

எப்போதும் சிங்களத் தலைவர்களுக்கு ஒன்றுதெரியும். வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கை இனவிவகாரத்தில் ஈடுபடும்பொழுது இராஜதந்திரிகளுக்கே உரிய உத்தியோக தோரணையின் நிமித்தம் அவர்களின் இலங்கைக்கான பதவிக்காலம் ஒரு குறுங்காலத்தையே கொண்டது. அத்தகைய ஒரு குறுங்காலத்திற்குள் அவர்களைத் தமது அரச வளத்துக்கூடாக, அரசமைப்பிற்குரிய பலத்துக்கூடாகக் கவர்ந்துகொள்வது ஒருவகையில் சாத்தியமாகும். அதற்கிடையில் அவரின் காலம் முடிவடைந்து விடுகிறது. அவர் தனது அனுபவத்துக்கூடாக உண்மையை அறியமுன்பு அவரின் அந்த அனுபவத்துக்குரிய அனுபவச் சங்கிலி அறுந்துவிடுகிறது. பின் வேறொரு புதியவர். அவருக்கு வேறுபல புதிய வாக்குறுதிகள், பல புதிய சோடனைக் கதைகள் என அவை வேறொரு ஆரம்பத்துக்குப் போய்விடுகிறது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் சார்பில் இந்திய உயர்ஸ்தானிகராக இருந்து ஜே.எம்.டிக்ஷிற் பெரிதும் செயற்பட்டார். அவர் அதிக அனுபவம் வாய்ந்தவர் என்று, இந்திய இராஜதந்திர வட்டாரத்தில் பாராட்டப்பட்டவரும் கூட. அவர் இலங்கை விவகாரத்தைக் கையாண்டு அதில் தோல்விகண்ட பின்பு பின் வருமாறான கருத்தை ASSIGNMENT COLOMBO என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். "இந்தியாவை செயற்பாடற்ற நிலையில் வைத்திருப்பதற்காக இனப்பிரச்சினைக்கான தீர்வை தான் செயற்படுத்துவதாக பாசாங்கு செய்தார்" என்று ஜே.ஆர் ஐ குறைகூறும் திரு.டிக்ஷிற் தான் ஜே.ஆர் இன் அரசியல் நேர்மையைப் பற்றியும் தீர்வு விவகாரத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டைப் பற்றியும் மிகை மதிப்பீடு செய்துவிட்டதாகக்கூறி அவ்வாறு தனது பிழையான கணிப்பீட்டுக்காக தான் பாவமன்னிப்பு கேட்பதாகவும் கூறியுள்ளார்.

ஒரு டிக்ஷிற்றின் காலத்துக்குள் டிக்ஷிற்றை ஒரு சிங்களத் தலைவரான ஜே.ஆர் ஏமாற்றிவிட்டார் என்ற அனுபவம் அவருக்குக் கிடைத்து விட்டது. ஆனால் அவருக்கு அந்த அனுபவம் கிடைத்து அவர் உண்மையை உணரும் வரையான காலத்துக்குள் தமிழ்மக்களின் தலைகள் உருண்டன.

சர்வதேச சமூகத்தையும் சர்வதேச நிறுவனங்களையும் வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் ஏமாற்றுவதென்பது சிங்கள இராஜதந்திரத்தின் முதலாவது பாடம். இப்போது ஜனாதிபதி சந்திரிகா சமாதானத்திற்கான நடவடிக்கையில் முன்முயற்சியில் ஈடுபடுவதாக ஓர் பெருந் தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. இவர் 94ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததை அடுத்து இப்படிச் சில தோரணைகளைச் செய்தார். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் யாப்புச் சீர்திருத்தம், அதற்கான நிபுணர்களுடன் கலந்துரையாடல், நிபுணர் குழுக்களைச் சந்தித்தல், நிபுணர் குழுக்களை நியமித்தல், ஊடகங்களில் இவற்றைப் பரபரப்பாக்குதல், இவற்றுக்காக இயக்கம் நடத்துதல் (முன்பு வெண்தாமரை இயக்கம்) என இப்படியொரு தோரணையிருக்கும். இப்போது யாப்புச் சீர்திருத்தம் பற்றி பத்து அறிவியல்சார் நிபுணர்கள் கூடி ஆராய்வதாக ஓர் பரபரப்பான செய்தி. இதுபற்றி கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பேட்டிகள் என அதன் பரபரப்பு நீள்கிறது. இவற்றைப் பார்க்கும் ஒரு புதியவனுக்கு அல்லது அன்னிய தேசத்தவனுக்கு சமாதானத்தின் மீது ஒரு செயற்பாடு தொடங்கிவிட்டது என்ற மாயை தோன்றும்.

விசாரணை ஆணைக்குழு, அறிஞர் குழாத்து உரையாடல்கள், அவர்களுடனான சந்திப்புக்கள் என்பவற்றைப் பார்க்கும்போது, அவற்றுக்கு கொடுக்கப்படும் ஊடக முக்கியத்துவங்களைப் பார்க்கும் போது டி.எஸ்.சேனநாயக்கா கையாண்ட ஒரு தந்திரம் நினைவுக்கு வருகிறது.

திரு.சிறிகாந்தா என்பவர் டி.எஸ். சேனநாயக்காவின் நிரந்தர செயலாளராய் இருந்தவர். டி.எஸ்.சேனநாயக்கா உடனான தனது அனுபவங்கள் சிலவற்றை ஒருமுறை என்னுடன் பகிர்ந்துகொண்டார்.

ஒன்று - ஒரு விடயத்தை செய்வதுதான் என்று தீர்மானித்துவிட்டால் அவ்விடயத்தை செய்வதிலேயே தொடங்கவேண்டும்.

இரண்டு - ஒரு விடயத்தை செய்யத்தான் வேண்டும். அதில் வரக்கூடிய சிக்கல்களுக்கு பொறுப்பேற்கவேண்டிய பிரச்சினை இருக்குமேனின் மிகக் குறைந்த உறுப்பினர்களைக்கொண்ட விசாரணை ஆணைக்குழுவை ஆரம்பித்து அதன்மூலம் அதை செயற்படுத்தத் தொடங்கவேண்டும். பிரச்சினை ஏற்படுமிடத்து சாக்குப் போக்கை விசாரணைக்குழுவின் மேல் போட்டு விடலாம் என்பதே இதன் நோக்கம்.

மூன்று - செயற்படுத்தவே கூடாது எனத் தீர்மானிக்கும் விடயம் ஒன்று ஓர் பெரும் அரசியல் கோரிக்கையாக முன்னெழுந்துவிடுமிடத்து அதற்காக அதிக உறுப்பினர்களைக்கொண்ட எதிரும் புதிருமான கருத்துக்களை உடைய உறுப்பினர்களுடன் கூடிய விசாரணை ஆணைக்குழுவை ஆரம்பிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட விசாரணை ஆணைக்குழு ஒரு முடிவுக்கு வரமாட்டாது. ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையில் தான் அவ் ஆணைக்குழுவை நியமிக்கவும் வேண்டும். அந்த ஆணைக்குழுவைக் காட்டியே பிரச்சினையை காலம் கடத்திவிடலாம் என்பதோடு அந்த ஆணைக்குழுவின் செயற்பாடே அரசியலை நகர்த்த போதுமானதாக உள்ளது என்ற நிலைப்பாட்டை டி.எஸ் கொண்டிருந்தார் என்று அவர் கூறினார்.

இந்த மூன்றாவது வகைப்பட்ட நோக்குநிலையில்தான் தமிழ்மக்கள் சம்பந்தப்பட்ட விசாரணைக் குழுக்களையோ அல்லது அதை ஒத்த குழுக்களையோ, அல்லது செயற்படுவதாக தோரணை காட்டக்கூடிய நிபுணத்துவ அமைப்புக்களையோ சிங்கள ஆட்சியாளர்கள் முன்நிறுத்திப் பார்க்கிறார்கள்.

மேற்படி சந்திரிகாவின் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய தோரணைகள் இப்படிப்பட்ட வகையைச் சார்ந்தது. இலங்கையில் பதவிக்குவரும் எந்தவொரு கட்சியாலும் எதிர்க்கட்சியின் சம்மதமின்றி, ஆதரவுமின்றி ஒருபோதும் யாப்பை சீர்திருத்த முடியாது. கட்சிநோக்குநிலை அரசியல் கலாசாரம் வளர்ந்த இலங்கையில் கட்சி நோக்குநிலையில்தான் யாப்பு சீர்திருத்தம் நோக்கப்படுமே தவிர வேறுவழியில் இல்லை. இந்நிலையில் யாப்பு சீர்திருத்தம் சாத்தியமில்லை. ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வை யாப்பு சீர்திருத்தத்தோடு இணைத்துக் காட்டி ஒரு தோரணை பண்ணுவது பிரதானமாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காகத்தான். அத்துடன் காலபோக வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் ஏமாற்றுவதற்காகவே.

ஆனால் தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் சிங்கள ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான ஏமாற்றைத் தெரிந்து கொண்டவர்கள் என்பதால் அவர்கள் சிங்களவர் எவரையும் நம்புவதில்லை. ஈழத் தமிழ்மக்களின் வீடுகளில், வாசிகசாலைகளில், சனசமூக நிலையங்களில், இவை போன்ற பொது இடங்களில் சிங்களத் தலைவர்களின் உருவப்படங்களை ஒருபோதும் காணமுடியாது. இது ஒருநாளில் தொடங்கி உருவப்படம் அகற்றும் நடவடிக்கைக்கூடாக நடந்தேறியதல்ல. தமிழ்மக்களின் மனங்களில் சிங்களத் தலைவர்கள் இடம்பிடிக்கவில்லை. அதனால் அவர்களின் படம் வைக்கப்படவில்லை. சிங்களத் தலைவர்களின் நடவடிக்கைமூலம் தமிழ்மக்கள் அவர்களின்மீது நம்பிக்கை அற்றதின் வெளிப்பாடாக இது நடந்தேறியது.

தமிழ்மண்ணில் **IPKF** க்கு முன் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ், அண்ணாத்துரை போன்றோரின் உருவப்படங்களை அனேகரின் வீடுகளிலும் வாசிகசாலை, சனசமூக நிலையங்கள் போன்ற இடங்களிலும் வைத்திருந்தனர். ஆனால் **IPKF** இன் பின் இப்படங்கள் மிகப்பெருமளவு அருகிப்போய்விட்டன. தமிழ்மக்கள் தாம் ஏமாற்றமடையும்போது தம்மியல்பில் இப்படிச் செயற்படுவதைக் காணலாம். இந்தியத் தலைவர்களின் படங்களை அகற்ற எந்த ஒரு இயக்கமும் நடத்தப்படவில்லை. மக்கள் சமூக மாற்றத்தின் தொடராகவே அதனை கைவிட்டனர்.

சிங்களத் தலைவர்களின் செயல்களினால், தமிழர்களிற்கெதிரான போலித்தனமான செயல்களினால் அவர்கள் மீது தமிழ்மக்கள் வெறுப்படைந்தனர் என்பதே உண்மை. இந்த நம்பிக்கைகளினூடாகத்தான் தமிழ்மக்களின் சிந்தனைப் போக்குள்ளது. இது ஒரு தற்செயல் அல்ல வரலாற்று வளர்ச்சியின் வெளிப்போக்கு.

(தொடர்ச்சி-11ம் பக்கம்)







www.eelamview.com

www.eelamview.com

# நாம் றஞ்சனை பார்க்கவேணும்

அது தமிழீழத்தின் எல்லைமாவட்டம். மிக அழகான பச்சைப்பசேல் என்ற வயல் வெளிகளையும் அதன் எல்லையில் எம் வீரமறவர்களை வளர்க்கும் அடர்த்தியான பெரும் கானகத்தையும் பல புலிவீரர்களை ஈன்றெடுத்த அழகிய தமிழ் கிராமங்களையும் கொண்டதுதான் அம்பாறை மாவட்டம்.

அந்தக் கானகம் எமக்கு பரிச்சயமானதாக இருந்தாலும் புதிதாகச் செல்பவர்களுக்குப் பயம் நிறைந்திருக்கும். அக்காட்டினுள் இருக்கும் புலிகளின் பாசறையில் பகல் வேளைகளில்கூட சூரியனைக் காணமுடியாது. எத்திசையில் இருக்கின்றோம் என்பது தெரியாது. அத்தோடு பல மிருகங்களின் வெவ்வேறு பட்ட மிகப் பயங்கரமான சத்தங்கள். மொத்தத்தில் தனியாகச் செல்வதென்பதே சிலருக்கு முடியாத காரியம். ஏனெனில் திசைமாறி வேறெங்கோ சென்றுவிடுவோம். மிருகங்கள் தாக்கும் என்ற அச்சம். இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பமான 90ஆம் ஆண்டின் கடைசிப்பகுதியில் நாங்கள் மட்டக்களப்பில் இருந்து அக்கானகத்தில் உள்ள எமது முகாம் ஒன்றிற்குப் பணி நிமித்தம் சென்றிருந்தோம். ஒருநாள் நன்றாக சேட் கை உயர்த்தி மடிக்கப்பட்டு முகம் முழுதாக மழிக்கப்பட்டு (முகச்சவரம்) M.16 துப்பாக்கியின் குழல் (பரல்) ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் சாதாரண உயரம் கொண்ட அழகான புலிவீரன் தனியாக எங்கோ இருந்து கானகத்தின் நடுவில் அமைந்திருந்த எமது முகாமிற்கு வந்தான். அங்கு அவன் எம்மைநோக்கி வருகின்றான். எம்மில் சிலருக்கு அவனைத் தெரியாது. அப்போது எமக்குப் பக்கத்தில் வந்தபின் அருகில் இருந்த போராளி 'வணக்கம் றஞ்சண்ணை' என்று சொல்ல நாங்கள் பெயரை அறிந்துகொண்டோம். பின் எங்களது பெயர்களைக் கேட்டு அறிமுகமாகி பின்னர் சந்திப்போம் எனச் சிரித்தவாறு சொல்லிவிட்டு விடைபெற்றான்.

அதன் பின்னர்தான் நாங்கள் இவர் யார் என்று எமக்குப் பக்கத்தில் இருந்த போராளியிடம் விசாரித்தோம். அப்போராளி அவரைப்பற்றிச் சொன்னார். இவர்தான் முன்னுக்கு நிற்கும் அணியின் பொறுப்பாளர் என்று. (அங்கு முன்னுக்கு என்பது அக்காட்டின் எல்லை. எதிரியின் முகாம்களை அண்மித்த பிரதேசம்) அப்பவுந்தான் நாங்கள் அவனை ஆரம்பத்தில் தெரிந்து கொண்டோம். ஆனால் முன்னுக்கு நிற்கும் அணியின் பணி அங்கு கடினமானது. வேவுக்குச் செல்வது, எதிரி காட்டுக்குள் வராமல் தடுப்பது, உணவுப் பொருட்கள் எடுக்கச் செல்லும் போராளிகளுக்கு பாதை காட்டுவது என இன்னோரன்ன பணிகள். அதில் அங்கு உணவுப் பொருட்கள் எடுக்கச் செல்வதென்பதைச் சாதாரணமாகச் சொல்லமுடியாது. எதிரியோடு சண்டை பிடிப்பதைவிடக் கடினமானது.

ஏனெனில் எதிரியின் பிரதேசத்திற்குள் வாழும் எமது மக்களிடம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரிக்கும் பொருட்களை பல இடங்களில் இருந்து எடுத்து அதை ஓர் இரவுக்குள் எமது பிரதேசத்திற்குள் கொண்டுவர வேண்டும். அதன்பின்தான் கானகத்தில் உள்ள எமது முகாமிற்குக் கொண்டுசென்று சமைத்து உண்ணுதல், களஞ்சியப்படுத்தல் போன்ற தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட பணிகள்தான் றஞ்சனுக்கு அப்போது வழங்கப்பட்டிருந்தன. அதன் நிமித்தம் நாங்கள் அவரின் இடத்திற்குச் செல்வோம். அப்போதுதான் அவருடைய நட்பு எமக்குத் தெரிந்தது.

பழகுவதற்கு இனிமையான இவனிடம் ஒரு வைராக்கியத்தைக் கண்டோம். எந்நேரமும் எதிரியைக் கொல்லவேண்டும் என்றுதான் சொல்வான். இவன் சும்மா இருந்த நாட்களை நான் அறியவேயில்லை. அப்படிப்பட்டவன்தான் றஞ்சன்.

றஞ்சனின் குடும்பம் ஓர் அளவான குடும்பம். அம்பாறை மாவட்டத்தின் பழம்பெரும் ஊர்களில் ஒன்றான தம்பிலுவிலில் உள்ள செல்லத்துரை தம்பதிகளிற்கு இரண்டாவது மகனாகப் பிறந்த இவனது இயற்பெயர் பிரபாகரன். இவனுக்கு ஒரு சகோதரன். இவன் 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பில் வீரச்சாவடைந்துவிட்டான். (2ம் லெப். போசப்) அடுத்து இன்னுமொரு சகோதரி இருக்கிறாள். அளவான அந்தக் குடும்பத்தில் இரண்டாவதாகப் பிறந்த இவன், குடும்பநிலை காரணமாக சில வருடங்களில் கல்வியை நிறுத்திவிட்டுத் தனது தந்தைக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டான். சிறுவயதிலேயே மிகவும் துடிப்புள்ளவனாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்குள்ளவனாகவும் விளங்கினான். அக்காலகட்டத்தில்தான் விடுதலைப்போராட்டம் முனைப்புப்பெற்று தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. சிங்களப் பேரினவாதப் படைகளின் தமிழ்மக்கள் அழிப்புப் படையான விசேட அதிரடிப்படையினர் (எஸ்.ரி.எவ்) எண்பதுகளின் நடுப்பகுதியில் பல தமிழர்களைக் கொன்றழித்துக் கொண்டிருந்தனர். அதன் தாக்கம்தான் இவனைப் போராட்டத்தின் பால் ஈர்த்தது. 1986இன் பிற்பகுதியில் தன்னையும் தனது பதினாறு வயதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைத்துக்கொண்டான்.

அம்பாறை இரண்டாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சிபெற்ற இவன் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும்போதே அங்கு நடந்த இராணுவத்திற்கெதிரான பல நடவடிக்கைகளில் பங்கு கொண்ட இவனது திறமையைக் கண்ட இவனது பயிற்சியாசிரியரும், அப்போதைய அம்பாறை மாவட்டத்தின் தளபதியுமான அன்ரனி அவர்கள் தனது உதவியாளனாகத் தேர்ந்தெடுத்து நடவடிக்கைகள் பலவற்றில் பங்குகொள்ள வைத்தார். அதில் இவனது திறமை பன்மடங்கானது.

இவர்களது பயிற்சி முடிந்த சிறிது காலத்தின் பின் இந்திய அமைதிப்படை எமது மண்ணுக்கு வந்தது. பின் அமைதிப்படையினர் ஆக்கிரமிப்புப் படையாக மாறினர். அதில் இவன் தளபதி அன்ரனியோடு இந்தியப் படையுடனான அம்பாறை மாவட்டத்தின் அனைத்துத் தாக்குதலிலும் பங்குகொண்டு பெரும் அனுபவம்பெற்ற புலிவீரனாக மிளிரத் தொடங்கினான். இவன் 1990இன் முற்பகுதியில் தேசியத் தலைவர் அவர்களின் அழைப்பின் பேரில் தளபதி அன்ரனி அவர்கள் வடதமிழீழம் வந்தபோது அவருடன் கூடவே வந்து, 'இதயபூமியில்' தலைவரைச் சந்தித்து மீண்டும் தென் தமிழீழம் வந்துசேர்ந்தான். அக்காலகட்டத்தில் தென் தமிழீழப் போராளிகள் கணிசமானவர்கள் தலைவரைக் காண்பது அரிது. அப்படி தலைவரை ஒருமுறையாவது பார்த்துவிட்டு வீரச்சாவடைந்தால் நிம்மதியாக இருக்கும் என்று கதைத்த பல போராளிகள் அவ்வாசை நிறைவேறாமலேயே வீரச்சாவடைந்திருக்கிறார்கள். அதிலும் றஞ்சன் போன்ற ஒருசில போராளிகள் பார்த்துவிட்டு வந்து தலைவரைப்பற்றிச் சொல்லும் கதைகள் அலாதியாக இருக்கும். மீண்டும் தென் தமிழீழம் வந்த றஞ்சன் அப்போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் துணைத் தளபதியாக இருந்த லெப்.கேணல் நிகன் அவர்களுடன் ஒரு அணிப் பொறுப்பாளராக நிற்கும் போதுதான் இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பமானது. அக்காலகட்டத்தில் மட்டக்களப்பில் நடந்த அனைத்துத் தாக்குதல்களிலும் ஈடுபட்டு வெற்றிகள் பலவற்றிற்கும் உறுதுணையாக நின்றான்.

1990இன் பிற்பகுதியில் அன்ரனி அம்பாறை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டான். அப்போதுதான் நான் முன்பு சொன்னதைப்போன்று முன்னணிக் குழுவின் பொறுப்பாளராக அப்போதைய அம்பாறை மாவட்டத் தளபதி ராம் அவர்களால் நியமிக்கப்பட்டான். சுமார் ஒன்றரை வருடத்திற்கு மேலாக ஒரு துணிச்சல்காரனாக அங்கு அதே பணியை திறம்படச் செய்தான். ஒரு விடயம், அங்கு உணவெடுத்து வருவதுதான் கடினமான பணியென்று முன்பு சொன்னேன். அப்படியான பணிக்காக நாங்கள் செல்லும்போது இவன்தான் முன்னே கிளியருக்குச் செல்வான். எப்போதுமே அவரவர்களுக்குக் கொடுக்கும் பணிகளைச் சரியாகச் செய்யவேண்டும் என்று எப்போதும் கதைக்கும் இவன், சாப்பிடுவதென்றால் கூட எல்லோரும் சாப்பிட்டுவிட்டார்களா? என்று கேட்டுவிட்டுத்தான், தான் சாப்பிடச்செல்வான். போராளிகளுக்கு உணவு கொடுப்பதில் ஒரு தந்தையைப்போல ஏதாவது மிருகங்கள் சுட்டு இறைச்சியோ, அல்லது குளங்களில் தனியாகச்சென்று மீன் பிடித்தோ நல்ல கறியோடுதான் உணவு கொடுப்பான். அப்படியாக இவனது பண்புகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கவேண்டும் என்று சொல்பவன் இயங்கிக் கொண்டிருந்தவன். அம்பாறையில் அந்த இறுக்கமான காலகட்டத்தில் இவனது பணி அளப்பெரியது என்றுதான் சொல்லவேண்டும்.

மீண்டும் 1992ஆம் நடுப்பகுதியில் மட்டக்களப்பிற்கு அழைக்கப்பட்டு ஒரு அணியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அக்காலகட்டம் மட்டக்களப்பில் எதிரி, எங்கு கால் எடுத்துவைத்தாலும் இழப்பில்லாமல் முகாமிற்கு திரும்பியதுமில்லை, புலிகள் இலங்கை இராணுவத்தைக் கொன்று ஆயுதங்கள் கைப்பற்றாமல் தங்கள் பாசறைக்குத் திரும்பியதுமில்லை. அப்படிக் கைப்பற்றிய ஆயுதங்களால் மட்டக்களப்பில் புலிகள் பெருஞ் சேனையாக உருவாகினார்கள். ஆயுதத்தால் தன்னிறைவு பெற்ற புலி அணிகளால் எதிரி கதி கலங்கினான். முகாமைவிட்டு வெளியில் வருவதற்கு அஞ்சினான். அப்படியான புலிகளின் தாக்குதல்களால உணவுகூட எடுக்கச் செல்லாமல் இருந்த எதிரிமுகாம்கள் பல அக்காலகட்டத்தில் மூடிவிட்டுச் செல்லும் அளவிற்கு இருந்தது. உதாரணமாக 1992இன் கடைசிப் பகுதியில் மட்டக்களப்பு - வாகரைப்பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதில் றஞ்சன் பல தாக்குதல்களில் ஒரு அணிப்பொறுப்பாளராகச் செயற்பட்டான்.

அக்காலகட்டத்தில்தான் 1993இன் முற்பகுதியில் தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பில் மட்டு - அம்பாறை மாவட்டப் படையணியொன்று பெரும் திட்டமொன்றுடன் வட தமிழீழத்திற்கு அழைக்கப்பட்டது. அப்படையணிக்கு தலைவர் அவர்களினால் ஜெயந்தன் படையணி என்ற பெயர் சூட்டப்பட்டு பயிற்சிகள் நடந்தது. அப்போது இவன் ஒரு கொம்பனிப் பொறுப்பாளராக இருந்தான். எவ் வேலையைக் கொடுத்தாலும் வேகமாகச் செய்துமுடிக்கும் இவனது அணியைப் பயிற்சியிலும் திறமையாகத்தான் செயற்படவைத்தான். அதனால் 'தவளை' நடவடிக்கைக்கான தாக்குதல் திட்டத்தில் இவனுக்குமொரு பகுதி கொடுக்கப்பட்டு பயிற்சிகள் நடந்தது. பயிற்சியின்போது தனது போராளிகள் சோர்வடையக்கூடாது என்பதில் கவனமெடுத்தான். எமது படையணியில் உள்ள போராளிகள் அனைவரும் சண்டையில் அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும் வட தமிழீழத்தில் தலைவரால் புகுத்தப்பட்டிருந்த பெரும் போரியல் நுணுக்கங்களின் அடிப்படையில் போரிட்ட அனுபவம் இல்லாதே இருந்தது. அத்துடன் பல படையணிகளுடன் சேர்ந்து பிடிக்கும் முதல் சண்டையும், பெயர் சூட்டப்பட்டபின் படையணியின் முதல் சண்டையும் என்பதால் எந்த நேரமும் எமது

(10ம் பக்கம் பார்க்க)



லெப்.கேணல் றஞ்சன் / மாருதியன்
செல்லத்துரை பிரபாகரன்
தம்பிலுவில், 02ம் குறிச்சி, அம்பாறை.
பிறப்பு - 28.02.1971
வீரச்சாவு - 27.08.1995







www.eelamview.com

www.eelamview.com

**மக்களின் ஆதரவுடன் மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூகச் சீரமைப்புக்களே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.**

-தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

# சிறுவர் நலனும் உலக சமுதாயமும்

சிறுவர்கள்தான் எமது நாட்டின் உண்மையான தேசிய வளம். இன்றைய சிறார்கள் நாளைய பிரசைகள் என்பது இதன் உட்பொருள். சிறுவர் நலனில் அக்கறை காட்டாத எந்தவொரு நாடும் மேம்பட வாய்ப்பில்லை. விமானத் தாக்குதல்களும், பொருளாதாரத் தடைகளும், தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும் எமது இளஞ் சந்ததியினரின் வாழ்வையும் வளர்ச்சியையும் குன்றச் செய்துள்ளன. இதைத் தடுப்பதற்காக நாம் ஒரு தசாப்தத்திற்கு மேலாக காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை போன்ற சிறுவர் நலன்பேணும் நிலையங்களை நடத்துவதோடு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியோடு சிறுவர்களைப் பேணிக் காக்கும் சிறுவர்காப்பு நிலையங்களையும் நடாத்தி வருகின்றோம். அங்கெல்லாம் கல்வியுடன் கவின்கலைகளையும் புகட்டுவதோடு உணவு, உடை, உறையுளும் வழங்குகிறோம்.

உலகச் சிறுவர்கள் நலனில் தீவிர அக்கறை காட்டிவரும் ஐநா 1946இல் சிறுவர் நிதியம் என்ற அமைப்பை உருவாக்கியது. UNITED NATIONS CHILDREN'S FUND என்றும் UNICEF (யூனிசெப்) என்றும் இந்த நிதியம் அழைக்கப்படுகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழும் சிறுவர்களுக்கு உணவு, மருந்துப்பொருள்கள், ஆடைகள் வழங்குவதையே தனது பிரதான பணியாகக் கொண்டுள்ளது. இப்போது யூனிசெப் பணிகள் பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. வளர்ச்சி அடையாத நாட்டுச் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், நோய்த்தடுப்பு, என்பவற்றில் யூனிசெப் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. தனது திட்டங்களை நிறைவேற்றும் நோக்கில் அது உலக சுகாதார நிறுவனம், ஐநாவின் பொருளாதார மற்றும் சமுதாயக் கவுன்சில் உணவு விவசாய நிறுவனம், உலக உணவுத்திட்டம் போன்ற உலகளாவிய பொது அமைப்புகளுடன் இணைந்து செயற்படுகின்றது.

உலகச் சிறுவர் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களில் வாழ்கின்றனர். இவர்கள் உணவுப் பற்றாக்குறை, அடிப்படை வசதிகளின்மை, நோய்கள் என்பனவற்றால் அல்லற்படுகின்றனர். அகதி முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் சிறுவர்கள் இன்னும் கூடுதலான அவலத்தை எதிர்கொள்கின்றனர். போர் நடக்கும் நாடுகளில் பெண்களும் சிறுவர்களும் திட்டமிட்டுத் தாக்கப்படுகின்றனர். சிறுவர்கள் உயிராபத்தை விளைவிக்கும் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவற்றையெல்லாம் அறிந்தும் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு யூனிசெப் அமைப்பிடம் பொருத்தமான பொருளாதார மற்றும் நிர்வாக வசதிகள் இல்லாத காரணத்தால் அதனால் உருப்படியாக ஒன்றும் செய்யமுடியவில்லை.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் அரை நிமிடத்திற்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மலேரியா ஆட்கொல்லியினால் சிசுமரணம் ஏற்படுகின்றது. வருடமொன்றுக்கு முப்பது இலட்சம் உயிர்கள் உலக மட்டத்தில் மலேரியா நோயினால் பறிக்கப்படுவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கையில் சிறுவர்கள் உயிரிழப்புத்தான் கூடுதலாகக் காணப்படுகின்றது. ஆபிரிக்காவின் தெற்கு சகாரா நாடுகளில் ஆட்கொல்லி நோய்களின் பட்டியலில் மலேரியா முதலிடம் வகிக்கின்றது. திருமணமாகாத மிகவும் வயது குறைந்த சிறுமிகள் பெறும் குழந்தைகளில் பெரும்பாலானவை பிறந்தவுடனேயே இறக்கின்றன. அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகளிலும் இது நடைபெறுகின்றது. தாயும் பிள்ளையும் ஏறத்தாழ ஒரே வயதினராக இருக்கிறார்கள். இது தான் இறப்பிற்குக் காரணம் என்று இத்துறையில் பணியாற்றும் தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன.

மேற்கத்திய பாலியல் கலாசாரம் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், மூன்றாம் உலக நாடுகளிலும் பரவியுள்ளது. இதுவொரு சர்வதேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்தியா, இலங்கை, மாலைதீவுகள், தாய்வான், கம்போடியா, பிலிப்பின்ஸ் போன்ற நாடுகளில் உல்லாசப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சிறுவர் விபசாரம் அரசுகளின் மறைமுக ஆதரவுடன் வளர்ச்சி அடைந்துள்ளது. உதாரணத்திற்கு இந்தியாவின் கோவாவை எடுத்துக்கொண்டால், இன்றர்போல் நிறுவனத்தின் அறிக்கைப்படி கோவா சிறுவர் விபசாரத்தின் கேந்திர மையமாக இடம்பெறுகின்றது. அந்நிய செலாவணியே கதி என்று கோவா அரசு கிடக்கையில், அப்பகுதியில் பணியாற்றும் தொண்டு நிறுவனங்களும், யூனிசெப் போன்ற அமைப்புக்களும் பாராமுகமாக இருக்கின்றன.





தொழிலாளர்களாக வாழ்க்கை நடத்தும் சிறுவர்கள் என்ற தலைப்பின்கீழ் பின்வரும் தரவுகளை சிறுவர் நலன்காக்கும் அமைப்புக்கள் திரட்டியுள்ளன.

5 தொடக்கம் 14 வயதுக்கு உட்பட்ட கூலிவேலை செய்யும் சிறுவர் எண்ணிக்கை. (இதில் இருபாலாரும் அடங்குவர்) - 250 மில்லியன்.

உயிராபத்தை விளைவிக்கும் தொழில்களில் ஈடுபடும் 12 வயதுக்குக் குறைந்த சிறுவர் எண்ணிக்கை. (இதில் இருபாலாரும் அடங்குவர்) - 50மில்லியன்.

அமெரிக்காவில் நாட்கூலிகளாகப் பணியாற்றும் சிறுவர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சம். இவர்கள் நாளொன்றுக்கு 12 மணிநேரம் கட்டாய பணியாற்றுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் அமெரிக்காவின் வர்த்தக அடிப்படையில் இயங்கும் விவசாயப் பண்ணைகளில் காணப்படுகின்றனர்.

அமெரிக்காவில் திருட்டுக் குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டு வயது கூடியவர்களுடன் அடைக்கப்படும் சிறுவர்கள் எண்ணிக்கை, வருடமொன்றுக்கு ஒரு இலட்சம்.

நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்காக அமெரிக்காவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட 18வயதிலும் குறைந்தோர் எண்ணிக்கை, 2000 ஆண்டில் 04.

எகிப்தின் பருத்தி விவசாய நிலங்களில் கையால் பூச்சி, புழு பொறுக்குவதற்காக அமர்த்தப்பட்ட சிறுவர்கள் எண்ணிக்கை

1.5மில்லியன்.

இந்தியாவின் குடி அடிமைகள் முறையின்கீழ் தந்தையோடு சிறுவர்களும் அடிமைகளாகின்றனர். சட்டப்படி குடி அடிமைகள் முறை நிறுத்தப்பட்டுள்ளதாயினும் (BOND ED LABOUR SYSTEM (ABOLITION) ACT OF 1976) இன்று வரை அது நீடிக்கின்றது. பீகார் மாநிலத்தில் மிகவும் பரவலாகவும் வெளிப்படையாகவும் காணப்படுகின்றது.

பாகிஸ்தானின் கம்பளம் நெசவுத் தொழில், இந்தியாவின் சிவகாசி தீப்பெட்டி மற்றும் சீனவெடித் தொழிற்சாலைகளில் பெருமளவு சிறுவர்கள் குறைந்த ஊதியத்திற்கு கூடியநேரம் வேலைசெய்கின்றனர்.

நைக்(NIKE) எனப்படும் விளையாட்டுப் பொருள்களையும் ஆடைகளையும் விற்பனை செய்யும் பாரிய பல்நாட்டு வர்த்தக நிறுவனம் தெற்கு ஆசிய நாடுகளில் தனது விற்பனைப் பொருள்களைத் தயாரிக்கின்றது. இத்தொழிற்சாலைகளில் கூடுதலாகச் சிறுவர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். ஐ.நா நிறைவேற்றிய சிறுவர்கள் உரிமைச் சட்டத்தை அமெரிக்கா, சோமாலியா தவிர்ந்த உலகநாடுகள் யாவும் அங்கீகரித்துள்ளன. ஐஎல்ஓ எனப்படும் சர்வதேச தொழில் நிறுவனமும் தடைச் சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இருப்பினும் வயது குறைந்தவர்களை பணிக்கமர்த்தும் நடைமுறை தொடர்கின்றது.

சிறுவர்களைப் போருக்கு இணைத்தல் சம்பந்தமான விவகாரத்தில் யூனிசெப் நிறுவனம் தீவிர கவனம் செலுத்துகின்றது. மேற்குறிப்பிட்ட விடயங்களில் காட்டாத கரிசனையை அது போருக்கு இணைத்தல் தொடர்பாகக் காட்டும் தீவிரம் பலத்த சந்தேகங்களைக் கிளப்புகின்றது. நேர்மையான கரிசனை என்கின்ற எல்லையைக் கடந்து, அரசியல் மற்றும் பிரசாரத் தந்திரோபாய உள்நோக்குடன் அது வெளிப்படுகின்றது. யூனிசெப் வல்லரசுகளின் கைப்பாவையாக மாறியதோடு சில குறிப்பிட்ட நாடுகள் அல்லது அமைப்புகளை விமர்சிக்கும் நிறுவனமாக இடம்பெறுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இதுபற்றி விரிவாக ஆராய்வோம்.

பிரித்தானியாவும் அமெரிக்காவும் தமது படைகளில் 18வயதுக்கும் குறைந்தவர்களை இணைப்பதோடு போர்க்களமும் அனுப்புகின்றன. இப்போது நடந்து கொண்டிருக்கும் ஈராக் போரில் இருநாட்டுச் சிறுவர்களும் பங்குபற்றுகின்றனர். பிராண்டன் ஹுவி (BRANDON HEWIE) என்ற அமெரிக்கப் படையாள் ஈராக் போர்முனையில் இருந்து தப்பியோடி கனடா நாட்டில் அகதியாகத் தஞ்சம் கோரியுள்ளார். அவருக்கு இப்போது வயது 19. அவர் 2001ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தில் இணைந்தார். அகதி அந்தஸ்துக் கோரும் மனுவில் வறுமை காரணமாகவே தான் இராணுவத்தில் இணைந்ததாக பிராண்டன் கூறுகிறார். தான் படிக்க விரும்பினாலும் தனது ஆசையை நிறைவேற்ற தந்தையிடம் பணம் இல்லை என்று கூறும் அவர் இராணுவத்தில் இணைந்தால் இலவசமாகப் படிக்கலாம் என்ற நம்பிக்கை தனக்கு இருந்ததாகக் கூறுகிறார். கமரோன் என்ற இன்னுமொரு அமெரிக்கப் படையாளும் கனடாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ளார். இவருடைய வயது பற்றிப் பிரச்சினை இல்லை.

ஒக்ரோபர் 2001இல் தனது 98ம் வயதில் இறந்த அமெரிக்க செனேற் சபைத் தலைவர் மைக் மான்ஸ் பீல்ட் (MIKE MANS FIELD) அமெரிக்கக் கடற்படையில் இணையும்போது 14 வயதினராக இருந்தார் (1917). இவர் பிற்காலத்தில் ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவராகவும் கடமையாற்றினார். இப்படிப் பல உதாரணங்கள் உண்டு. அமெரிக்காவின் முதலாவது அட்மிரலான டேவிற் பராகுட் (DAVID G.FARRAGUT) தனது 9ம் வயதில் கடற்படைப் பயிற்சியைத் தொடங்கினார். இவர் தனது 11ம் வயதில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஈடுபட்ட போரில் நேரடியாகப் பங்குபற்றினார். அடுத்த வருடம் தனது 12ம் வயதில் இவர் கடற்படைக் கட்டளை அதிகாரியாகப் பதவி உயர்ந்தார். பிரிட்டிஷ் கடற்படையிடம் இருந்து பராகுட் ஒரு கப்பலை 1812ம் ஆண்டுப் போரில் கைப்பற்றினார். அந்தப் போர்க் கப்பலுக்கு இவர் தலைமை அதிகாரியானார். அமெரிக்கக் கடற்படையில் அட்மிரல் பதவி இதற்கு முன்பு இருந்ததில்லை. இவருக்காகவே இப்பதவி உருவாக்கப்பட்டது.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் கடேற் என்று அழைக்கப்படும் (CADET) இராணுவப் பயிற்சி வழங்கப்படுகின்றது. அமெரிக்க கடற்படைப் பயிற்சி மாணவனாக 13 தொடக்கம் 17 வயதுக்கு இடைப்பட்டோர் இணையலாம். இவர்களுக்கு சீருடையும் வழங்கப்படுகின்றது. கனடாவின் கடேற் பயிற்சித்திட்டம் 12 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்டோருக்கு கிடைக்கின்றது. இவர்கள் கனேடிய இராணுவத்தின் உறுப்பினர் அல்லவென்று கனேடிய அரசு வலியுறுத்திக் கூறுகின்றது. கனடாவின் கடேற் மாணவர்கள் கடல், தரை, விமானப் பயிற்சியைப் பெறுகின்றனர்.

இந்தியாவில் 1948ஆம் ஆண்டு தொடக்கம் என்.சி.சி என்று அழைக்கப்படும் தேசிய கடேற் அணி (NATIONAL CADET CORPS.NCC) உயர்கல்வி வழங்கும் கல்லூரிகள் தோறும் காணப்படுகின்றது. 1965, 1971 பாகிஸ்தான் போர்களில் இந்திய கடேற் அணியினர் சிறந்த பணியாற்றினர். ஆயுதத் தொழிற்சாலைகளில் உதவியாளர்களாகவும், களமுனைக்கு ஆயுத தளபாடங்களை விநியோகிப்பவர்களாகவும் இவர்கள் செயற்பட்டனர். நாட்டிற்குள் ஊடுருவிய பாகிஸ்தான் படையினரைக் கைது செய்வதிலும் இவர்கள் வெற்றிகண்டனர். இரண்டாவது பாதுகாப்பு



www.eelamview.com

www.eelamview.com

அரண் என்று என்சிசி அணியினர் அழைக்கப் படுகின்றனர். அண்மைக்காலமாக இவர்களுக்கு வழங்கப்பட்ட இராணுவப்பயிற்சி மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. சமூகசேவை, இளைஞர் விவகாரங்கள் போன்றவற்றில் கூடுதல் பயிற்சி வழங்கப்படுகின்றது.

போர் என்பது அரசியலின் பிறிதோர் வடிவம், அது அரசியலின் நீட்சி என்ற தத்துவத்தை முன்வைத்த ஜெனரல் குளோ சேவிற்ஸ் (CARL VON CLAU SEWITZ) (1780-1831) தனது பன்னிரண்டாம் வயதில் சீருடை தரித்து போரில் ஈடுபடத் தொடங்கியவர். இவர் ஜேர்மன் நாட்டவர். நெப்போலியனுக்கு எதிரான போர் நடவடிக்கைகள் யாவற்றிலும் இவர் பங்குபற்றினார். இவர் இறந்தபின் 1833இல் VOM KRIEGE என்ற ஜேர்மன் மொழி நூல் பிரசுரமாகியது. போரியல் பற்றிய குளோசேவிற்சின் இந்நூல் 19, 20 நூற்றாண்டுப் போரியல் சிந்தனை மற்றும் நடைமுறைகளில் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. முழு அளவு யுத்தம் (TOTAL WAR) என்ற இவருடைய தத்துவம் இன்றைய போர்முறையில் எல்லா நாடுகளாலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. லெனின், ஹிற்லர், மாவோ, போன்றோரின் போரியல் சிந்தனைகளில் குளோசேவிற்சின் தாக்கம் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஜப்பான்மீது அணுகுண்டு வீசிய அமெரிக்காவையும் இத்தத்துவம் ஆட்கொண்டுள்ளது.

சென்ற வருடம் (2003) நவம்பர் விடுதலைப் புலிகளின் நல்லெண்ணத் தூதுக்குழு தென் ஆபிரிக்கா சென்ற அதே விமானத்தில் சிறிலங்காவின் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் டிரோன் பர்நான்டோ பயணித்தார். அவரும் தென் ஆபிரிக்கா வந்தார். அது ஐநா செயலாளர் நாயகம் பதவி என்ற மாய மானை அவர் தேடியலைந்த காலம். இருப்பினும் புலிகள் மீது ஒரு தாக்குதலை நடத்தாமல் அவரால் இருக்க முடியவில்லை. புலிகள் தமது படைகளில் சிறுவர்களை இணைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை அங்கு நடத்திய மேடைப் பேச்சுக்களில் அவர் முன்வைத்தார். ஆனால் அது சிறிதளவேனும் எடுபடவில்லை. அவருடைய உரையைக் கேட்டோர்கள் அவருக்கு முன்னால் வாய்விட்டுச் சிரித்தனர். வெள்ளை நிறவெறி அரசுக்கு எதிரான கறுப்பினத்தவரின் விடுதலைப் போரில் கறுப்பினச் சிறுவர்கள் பெரும் பங்களிப்புச் செய்தனர். கையில் கல்லும் தடியும் கொண்டு போராடிய சிறுவர்களை வெள்ளைப் பொலிசாரும் இராணுவத்தினரும் குறிவைத்துச்





தமிழர் பகுதிகள் மீது சிங்கள முப்படையினரும் கொடிய தாக்குதல்களை மேற்கொண்டபோது பெரும்பாலும் நிராயுதபாணிகளான சிவிலியன்களே கொல்லப்பட்டனர். பள்ளிக்கூடங்கள், பொது இடங்கள், மக்கள் திரளும் வைபவங்களைக் குறிவைத்து குண்டுவீச்சு நடத்தியபோது பள்ளிச் சிறுவர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

சுட்டனர். அறுநூறுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் இவ்வாறு கொல்லப்பட்டனர்.

தமிழர் பகுதிகள் மீது சிங்கள முப்படையினரும் கொடிய தாக்குதல்களை மேற்கொண்டபோது பெரும்பாலும் நிராயுத பாணிகளான சிவிலியன்களே கொல்லப்பட்டனர். பள்ளிக்கூடங்கள், பொது இடங்கள், மக்கள் திரளும் வைபவங்களைக் குறிவைத்து குண்டு வீச்சு நடத்தியபோது பள்ளிச் சிறுவர்கள் பலர் கொல்லப்பட்டனர். யாழ்குடாநாட்டை இறுக்கமான முற்றுகைக்கு உட்படுத்திய எதிரி, கிளாலி ஏரியூடாகப் பயணித்தவர்களைத் தனது கடற்படையைக் கொண்டு தாக்கினான். இதில் சிறுவர்களும் அடங்குவர். செம்மணி மனிதப் புதைகுழிகளில் சிறுவர்களின் சடலங்களும் கிடக்கின்றன. இதையெல்லாம் பார்த்த தமிழ் இளைஞர்கள் அணி அணியாகப் புலிப்படையிற் சேர்ந்தனர். தமிழர் பலம் உயர்ந்தது. எதிரியின் தோல்வி நிட்சயமாகியது.

இதைப் பொறுக்காத சிங்கள அரசு தனது வெளிவிவகார அமைச்சர் ஊடாக எமக்கெதிரான பிரசாரப் போரை முடுக்கி விட்டது. சிறுவர்களைப் படையில் சேர்க்கிறார்கள் என்ற பலத்த குரல் 1998 முற்பகுதியில் தோன்றியது. "இப்பிரச்சினையைக் கவனிப்பதற்காக ஐநாவின் ஒரு சிவில் அதிகாரியை வரவழைத்துள்ளேன்" என்று லக்ஷ்மன் கதிர்காமர் ஏப்ரல் 1998ல் பிரகடனம் செய்தார். ஐநாவின் செயலாளர் நாயகம் பதவிக்கு கோபி அனானுடன் போட்டியிட்டுத் தோல்வி கண்ட ஒலாரா ஒற்றுனு செயலாளர் நாயகத்தின் சிறுவர்களுக்கும் போர்ப் பிணக்குகளுக்குமான விசேட பிரதிநிதியாக மே 3-9 நாட்களில் (1998) இலங்கை வந்தார். இவர் ஓக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். கதிர்காமரும் அதே இடத்தில் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த ஒற்றுனு, சர்வதேச சிறுவர் உரிமைகளுக்கான உடன்பாட்டின் (CONVENTION ON THE RIGHTS OF THE CHILD) சரத்துக்களுக்கமைவாக நடக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். அவர்களும் இதற்கு ஒத்துக்கொண்டனர். இந்த உடன்பாட்டைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

(01) 1949இல் செய்யப்பட்ட 04 ஜெனிவா உடன்பாடுகளுடன் 1977இல் சேர்க்கப்பட்ட மேலதிக ஆவணத்தின் (ADDITIONAL PROTOCOL) பிரிவு 77(2)இன் பிரகாரம் படையில் இணைப் பதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 15 ஆகும்.

(02) இதைத் தொடர்ந்து 1989ல் செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் உரிமைகளுக்கான உடன்படிக்கையின் பிரிவு 38 "அரசுகள் 15வயதிற்குக் குறைந்த சிறுவர்களைப் பகை முரண்பாடுகளில் நேரடியாக ஈடுபடாது இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும்" என்று கூறுகின்றது.

இந்த உடன்படிக்கைப்படி சிறுவர் என வரையறுக்கப்படுபவர்கள் 18 வயதுக்குக் குறைந்தவர்களாவர். ஆனால் படையில் இணைத்தலுக்கு மாத்திரம் 15வயதை அது எல்லையாக நிர்ணயம் செய்கின்றது. இந்த உடன்பாட்டில் அமெரிக்காவும் சோமாலியா வும் கைச்சாத்திடாத காரணத்தால் யூனிசெப் அமைப்பின் போக்கு வித்தியாசமாக இருக்கின்றது. ஐநாவைத் தனது வெளிவிவகாரக் கொள்கையின் அங்கமாக்கும் நோக்கத்தை அமெரிக்கா கொண் டுள்ளதால் யூனிசெப் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இயங்குவதாகக் கூறலாம்.

(03) மே 25, 2000ல் செயற்படத் தொடங்கிய சிறுவர் உரிமைகளுக்கான உடன்பாட்டின் மாற்றீடான ஆவணம் (OPTIONAL PROTOCOL TO THE CONVENTION ON THE RIGHTS OF THE CHILD) 18 வயதடையாத போர்வீரர்களை நேரடிப்போரில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறு அரசுகளைக் கேட்கின்றது. 18 வயதுக்குக் கீழ் எவரையும் கட்டாயப்படுத்திச் சேர்க்க வேண்டாம் என்று அது அரசுகளைக் கேட்கின்றது.

அதேவேளையில் 18வயதுக்குக் கீழ் படையில் இணைக்கப்படும்போது அங்கு கட்டாயமற்ற, பெற்றோரிற்கு அறிவிக்கப்பட்ட, சம்பந்தப்பட்ட சிறுவ னுக்கு இதன் கனம் தெளிவாக விளங்கப் படுத்தப்பட்ட நிலை யில், விருப்பு அடிப் படையில் 18 வயது க்குக் கீழ், 15வயது க்கு மேல் இணைக் கும் நடைமுறை யைக் கடைப்பிடிக்கு மாறு மாற்றீடான ஆவணம் அரசுக ளைக் கேட்கின்றது.

(04) மாற்றீடான ஆவணத்தின் 4ம் பிரிவின்படி அரச படைகள் அல்லாத ஆயுதக் குழுக்கள் 18 வயதுக்குக்கீழ் எந்த அடிப்படையிலும் சிறுவர்களைப் போரிற்குச் சேர்க்கக் கூடாது என்றும் அதைத் தடுப்பதற்கான சட்டங்களை அரசுகள் கொண்டுவரவேண்டும் என்றும் கூறுகின்றது. 4ம் பிரிவை அமுல்படுத்துவதால் போரில் ஈடுபடும் பகுதியினரின் சட்டபூர்வ அந்தஸ்தை பாதிப்படையச் செய்யமுடியாது. அதாவது இதனால் ஆயுதக் குழுக்களுக்கு இதனூடாக அங்கீகாரம் கிடைக்காது.

இந்த மாற்றீடான ஆவணம் விதிக்கும் 18 வயதெல்லையானது தவிர்க்க முடியாததல்ல. இது மாற்றீடான ஆவணம் என்பதால் ஏற்றுக்கொள்வதும் விடுவதும் சம்பந்தப்பட்ட அரசின் தீர்மானத்தில் அடங்கியுள்ளது. வல்லரசுகள் தமக்கு வசதியான சட்ட ஓட்டைகளை ஏற்படுத்தியவாறு எம்மைப்போன்ற அரசு என்ற அந்தஸ்த்தை இன்றுவரை பெறாத அமைப்புக்களை விமர்சிக்க அவர்களால் முடிகின்றது. இந்த இடத்தில் நாம் ஒரு காத்திரமான வினாவை எழுப்பி விடை காணவேண்டிய தேவை எழுகின்றது.

விடுதலைப்புலிகள் ஆகிய நாம் 2000ஆம் ஆண்டிற்கான மாற்றீடான ஆவணத்தின் அடிப்படையிலா 18 வயதெல்லையை அனுசரித்து நடக்கிறோம். நாம் ஒலாரா ஒற்றுனுவிடம் 18 வயதெல்லையை ஒத்துக் கொள்வதாக வழங்கிய வாக்குறுதி எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது. நாம் 15 வயதுதான் எமது எல்லை என்ற அடிப்படையில் உறுதியாக நின்று நிர்வாக மட்டத்தில் செயற்படுவோமாயின் யூனிசெப் போன்ற அமைப்புக்கள் எம்மை விமர்சிக்க வாய்ப்பிருக்காது.

1989ஆம் ஆண்டிற்கான சிறுவர் உரிமைக்கான சர்வதேச உடன்பாட்டின்கீழ் (CONVENTION ON THE RIGHTS OF THE CHILD) எமது சிறார்களுக்குச் சேரவேண்டிய ஏராளம் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. ஆனால் சிறுவர்களின் பாதுகாவலன் என்று தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள யூனிசெப் இதில் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. மாறாகச் சிறுவர்களைப் படையில் இணைத்தல் என்ற ஒற்றை விடயத்தை மாத்திரம் தூக்கிப் பிடிக்கின்றது. எமது அமைப்பின் பலத்தைக் குறைப்பதோடு அபகீர்த்தியையும் ஏற்படுத்தும் யூனிசெப்பின் உள்நோக்கம் இதனால் வெளிப்படுகின்றது. யூனிசெப் முன்பே வரையப்பட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்றது.

எமது இளஞ் சந்ததியினரின் பொது உரிமைகளையும் அவர்களுக்குச் சட்டப்படி சேரவேண்டிய சிறப்புரிமைகளையும் 1989ஆம் ஆண்டின் சர்வதேச உடன்பாட்டின்கீழ் பெறுவதற்கு நாம் சர்வதேச மட்டத்தில் இயங்கும் வலுப்பெற்றதொரு நிறுவனத்தையும் பணிக்குழுவையும் உருவாக்கவேண்டும். உலகச் சிறுவர்கள் பற்றிய கருத்தரங்குகளில் எமது குரல் ஒலிக்கவேண்டும். யூனிசெப் போன்ற அமைப்புக்கள் எமது சிறுவர்களுக்காக விடும் கண்ணீர் போலியானது என்பதை நாம் சர்வதேச சமூகத்திற்கு நிரூபிக்கவேண்டும். சட்டம் பயின்ற, வாதிடும் திறன்மிக்க தமிழ் இளைஞர்கள் தாயகத்திற்குச் செய்யும் முதற் பணியாக ஏற்று இதைச் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம். ●

**கலாநிதி க.சோமஸ்கந்தன்.**


www.eelamview.com

www.eelamview.com

(7ம் பக்கத்தொடர்ச்சி)

படையணி யார்? என்பதை எதிரிக்குக் காட்டவேண்டும். நமது படையணிக்குத் தரப்பட்டிருக்கும் பகுதிகளை ஏனைய படையணிகளுக்கு முதல் பிடிக்கவேணும். தலைவர் நம்மை நம்பி எடுத்திருக்கின்றார். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றவேண்டும் என்றுதான் எந்த நேரமும் கதைப்பான்.

அதேபோல் தாக்குதல் நடந்தவேளை, தலைவரின் எதிர்பார்ப்பிற்கேற்ப தமது ஆற்றலை ஆரம்பத் தாக்குதலிலேயே நிரூபித்துக் காட்டினார்கள். அதில் ரஞ்சனும் ஒருவன், அவனுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை மிக வேகமாகவும் இழப்புக்கள் அதிகம் இல்லாமலும் பிடித்துவிட்டான். பின்னர் ஏனைய பகுதிகளுக்கு உதவிக்கு வரவா? எனக்கேட்டுச் சென்று அத்தாக்குதலின் மூலம் தனது திறமையை வெளிக்காட்டிய ரஞ்சன், ஒரு ஆடம்பரமில்லாத, அமைதியான, தீர்க்க சிந்தனையுள்ள, எதையும் மிக வேகமாகக் கிரகித்து அதற்கேற்ப செயற்படும் ஒரு தலைசிறந்த தளபதியாக ரஞ்சன் உருவானான்.

அது 1994இன் நடுப்பகுதி பூநகரி தவளை நடவடிக்கையில் பங்கு கொண்ட போராளிகளில் ஒரு தொகுதியினை தலைவர் அவர்களின் பணிப்பில் தளபதி ராம் அவர்களோடு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அதில் ரஞ்சன் அம்பாறை மாவட்டத்தின் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தான். அப்போது மட்டு-அம்பாறை மாவட்டத்தின் நிலைமை வேறுவிதமாக இருந்தது. எதிரியின் நடவடிக்கைகள் அதிகரித்திருந்தது. எங்கு பார்த்தாலும் எதிரியின் முகாம்கள், பதுங்கித் தாக்குதல்கள் என்று இறுக்கமான காலம்.

போராளிகள் எப்போதாவது கிடைக்கும் கஞ்சியைக் குடித்தே போராட்டத்தினை நடத்திக் கொண்டிருந்த வேளையது. அப்போதுதான் மட்டக்களப்பிற்கு அணி சென்றது. புலி அணிகள் அங்கு சென்றது ஒரு தாக்குதல் செய்யும் வரைக்கும் எதிரிக்குத் தெரியக்கூடாது என்பதால் மறைவாக இருந்தே தாக்குதல் திட்டத்திற்கான வேவு தொடக்கம் பயிற்சி வரைக்கும் இரகசியமாக இருந்தே செயற்படவேண்டியிருந்தது. அப்போது உணவுப்பொருட்கள் எடுத்துவருவதே கஸ்ரம். காரணம் நீண்டதூரம், எதிரியின் பதுங்கித் தாக்குதல் அணியின் நடவடிக்கை என்பனவற்றைக் கடந்து சென்றே கொண்டுவர வேண்டும். அதைக்கொண்டு ஒருநேரம் அல்லது இரண்டுநேரம் கஞ்சி குடித்துத்தான் அத்தாக்குதலுக்கான பயிற்சிகளை எடுத்தனர். அத்தாக்குதல் திட்டமானது மட்டு வாகரைப் பிரதேசத்தின் மையப்பகுதியும், புலிகளுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமுமான கட்டுமுறிவு என்னுமிடத்தில்தான் அம்முகாம் அமைந்திருந்தது. அம்முகாம் இலங்கை இராணுவத்தின் முன்னணிப் படையான (S.F) விசேட படையினரின் ஒரு பலம்வாய்ந்த முகாம். அம்முகாம் வெற்றிகரமாகத் தாக்கியழிக்கப்பட்டது. அதில் ரஞ்சனுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை செவ்வனே செய்துமுடித்து அத்தாக்குதலுக்கு வலுச்சேர்த்தான்.

அம்முகாம் தாக்குதலின் பின் தளபதி ராம் அவர்களால் ரஞ்சனுடன் ஒரு அணி அம்பாறை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டது. மட்டக்களப்பில் இருந்து அம்பாறைக்குச் செல்வதை சாதாரணமாகச் சொல்லமுடியாது. அப்படி அப்போது அங்கு செல்லும் பாதை எங்கும் எதிரியின் முகாம்களும், ரோந்து அணிகளின் நடவடிக்கைகளும் இருந்தது. அம்பாறை மாவட்டத்தில்தான் இலங்கையின் முன்னைய ஜனாதிபதியான ஜே.ஆர் ஜெயவர்த்தனவால் அவரது மகனின் தலைமையில் தமிழர்களை வேறுபாடின்றி அழித்து, தமிழர்களின் பாரம்பரிய வளமிக்க நிலங்களை அபகரித்து, சிங்களவர்களைக் குடியேற்றும் நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் விசேட அதிரடிப்படை (எஸ்.ரீ.எவ்) எனும் படையினர் இருந்தனர். இருக்கின்றனர். அங்குதான் 1994இன் நடுப்பகுதியில் புலிகளின் நடவடிக்கைகள் கணிசமாக குறைந்திருந்த காலகட்டத்தில்தான் அவ்வாண்டின் பிற்பகுதியில் ரஞ்சன் ஒரு சிறிய அணியோடு அம்பாறைக்குச் சென்றான். மட்டக்களப்பில் இருந்து வெளிக்கிடும்போது ஒரு வார்த்தை




எங்களிடம் சொன்னான் "ஒரு மாதத்திற்குள் 'எஸ்.ரீ.எவ்' ற்கு அடித்து ஆயுதம் எடுக்காமல் விட்டால் நான் வீரச்சாவடைந்துவிட்டேன் என்று நினைத்துக்கொள்ளுங்கள்." நாசுக்காக அதுவும் உறுதியாக எங்களில் சிலரிடம் இரகசியமாக அவன் சொல்லிவிட்டுச் சென்ற வார்த்தைகள் அவை. சொன்னதைச் செய்பவன் ரஞ்சன் என்பதால் அடிப்பான் என்பது எமக்குத் தெரியும். ஆனால் விரைவாகச்செய்யும் சூழல் அங்கு இல்லை என்பதால் நாங்கள் எல்லாம் அது கடினம் என நினைத்திருந்தோம். சொன்னதைப்போலவே ஒரு மாதத்திற்குள் பொத்துவில் ரொட்டைக்குளம் பகுதியில் ரோந்து சென்ற 'எஸ்.ரீ.எவ்' இனருக்கு அடித்து ஏழுபேரைக் கொன்று அவனிடம் இருந்து ஆயுதங்களையும் கைப்பற்றினான். அப்படி ஆரம்பித்த அவனது தாக்குதல்கள் அதற்கு அடுத்த மாதமே சிம்பிலாண்டுவ எனும் இடத்தில் அடுத்த தாக்குதலை மேற்கொண்டான். அதிலும் ஆயுதங்களைக் கைப்பற்றினான். அப்படியாக தீவிரமடைந்த அவனது தாக்குதல்களால் எதிரி கதிகலங்கி வெளியில் நடமாடுவதற்கே அஞ்சும் அளவிற்கு ரஞ்சனின் நாமம் எதிரியிடம் பிரபல்யமானது. அப்போது எங்கெல்லாம் எதிரிக்குத் தொல்லை கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் அவனது பாதம் பட்டது.

இவனிடம் ஒரு வித்தியாசமான பண்பை நாங்கள் கண்டோம். யார் அபிப்பிராயங்கள் சொன்னாலும் அதை ஏற்றுக்கொண்டு, அதில் சாத்தியமானவற்றை செய்வதும், சாதாரண போராளிகளிடமும் கருத்துக்கள் கேட்டு அதற்கேற்ப அதை பகுத்தறிந்து நல்லவற்றிற்கு போராளிகளைத் தட்டிக்கொடுத்து உற்சாகமூட்டி, போராளிகளை வளர்க்கும் தன்மையைக் கண்டோம்.

1995 இன் ஆரம்பத்தில் போர் நிறுத்தம் வந்தது. ரஞ்சனுக்கு ஓய்வில்லை, காரணம் அப்போதைய பேச்சுவார்த்தையை அவனால் நம்பமுடியாமல் இருந்தது. ஆதலால் போராளிகளோடு கதைக்கும்போது சிங்கள அரசு எமது உரிமையைத் தரப்போவதில்லை என்பதால் நாம் சும்மா இருக்கமுடியாது. எனவே பயிற்சி எடுக்கவேண்டும். எம்மை நாம் தயார்படுத்தவேண்டும். என ஓய்வில்லாமல் உழைத்தான். ஒரு சுவாரசியமான விடயத்தை இங்கு குறிப்பிடவேண்டும். போர் ஓய்வுநேரம் நாங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும்போது ஒரு 'எஸ்.ரீ.எவ்' படையினன் ரஞ்சனிடமே 'நாம ரஞ்சனைப் பார்க்கவேணும் காட்டுவீர்களா?' என்று கேட்டான். அதற்கு 'அவரை பார்க்கமுடியாது' என்றான். 'ஏன் வரமாட்டாரா?' என்று திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருந்தான். அப்போது பக்கத்தில் நின்ற போராளி, 'விடயத்தைச் சொல்லுங்கள் அவரிடம் கேட்டுவிட்டு வந்து சொல்கிறோம்' என்றான். அதற்கு அப்படையினன் 'எங்களுக்கு ரஞ்சன் அடிப்பதுதானே? கடும் ஆள்தானே. சண்டைவந்தால் எங்களுக்கு அடிக்க வேண்டாம் என்று சொல்லுங்கோ' என்றான். அப்படி ரஞ்சனின் தாக்குதலின் தாக்கம் ஒவ்வொரு படையாளையும் தாக்கியதைக் கண்டோம்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது. அப்போது ரஞ்சன் சொல்வான் எமது முதல் அடியால் சில முகாம்களை எதிரி அகற்றவேண்டும். அப்படி நமது அடி இருக்கவேண்டும் என்று. அதற்கேற்றாற்போல் ஒரு திட்டம் தீட்டினான். ஒரு ரோந்தில் வரும் படையினரில் ஒருவன்கூட மிஞ்சாமல் கொல்லப்படவேண்டும் என்று தாக்குதல் திட்டம் தயாரானது. அத்திட்டமானது மூன்று நாட்களுக்கு அவ்விடத்திலேயே பதுங்கியிருப்பது, எந்த நேரத்தில் வந்தாலும் அடிப்பது என்ற நோக்கோடு. ஏனெனில் அவன் சிலவேளைகளில் ரோந்து வராமல் விடலாம் என்பதால். ஆனால் நாங்கள் சென்று நிலையெடுத்திருந்த அன்றே அதாவது 08.05.1995 அன்று காலை 5.45மணி அளவில் வந்தான் எதிரி. தாக்குதல் தொடங்கியது. ரோந்துப்படை புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டது. ரஞ்சன் உள்ளே வழிநடத்தினான். வந்த படையில் ஒருவன்கூட மிஞ்சாமல் ரோந்துவந்த இருபது 'எஸ்.ரீ.எவ்' இனரும் கொல்லப்பட்டு ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. இது அப்போது வெற்றிகரமான தாக்குதல். அதில் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்பது ரஞ்சனது போர் வியூகத்தின் சிறப்பாகும். இத்தாக்குதல் கஞ்சிகுடிச்சாற்றுக்கும் காஞ்சிரங்குடாவிற்கும் இடையில் நடைபெற்றது. பின்னாளில் கஞ்சிகுடியாறு படைமுகாம் அகற்றப்பட்டதும் அவ்விடம் புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதற்கும் ரஞ்சனின் தாக்குதலே முக்கியமானது.

'ஹலோ ரஞ்சனண்ணை எங்க நிக்கிறியள்.' 'நான் மச்சான் தாண்டியடிக்கும் கோமாரிக்கும் இடையில நிக்கிறன். 'எஸ்.ரீ.எவ்' இற்கு தகவல் அனுப்பிவிட்டு ரோட்டில் நிற்கின்றேன். வந்தால் அடித்துவிட்டுவருவேன், அல்லது பின்னேரம் வருவேன். அங்கேயே நில்லுங்கோ சந்திப்போம்.' 'டேய் தம்பிமார் எழும்புங்கடா. இரண்டு மான் கொண்டுவந்திருக்கிறேன் உரியுங்கடா சமைப்பம்' என்பான். இப்படியாக எந்த நேரமும் சுறுசுறுப்பாக எதிரிக்கு எதிரான நடவடிக்கையிலும் போராளிகளிற்கு நல்ல உணவு கொடுக்கவேண்டும் என்ற பணியிலும் தீவிரமாகச் செயற்படுவான்.

ரஞ்சனின் இறுதி நடவடிக்கையாக அது இருக்கும் என்பதை நாம் கனவிலும் நினைக்கவில்லை. அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உணவுப்பொருள் கொண்டுவரும் கடினம் பற்றி முன்பே சொல்லிவிட்டேன். அதேபோன்று உணவுப்பொருள் எடுத்துவந்து முகாமிற்கு வராமல் வேறு ஒரு இடத்திற்குச் சென்று அங்கேயே தங்கி நின்று ஒரு தாக்குதல் செய்துவிட்டு வருவதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. அக்கரைப்பற்றிற்குப் போய் உணவுப் பொருள் எடுத்து வருவதற்கு 27.08.1995 அன்று இரவு இவர்களது அணி புறப்பட்டது. அங்கிருந்து அன்று இரவே தாங்கள் நிற்கவேண்டிய இடத்திற்குத் திரும்பவேண்டும். இல்லாவிடின் விடிந்துவிடும். விடிந்தால் எதிரி எம் மறைவிடத்தைக் கண்டுவிடுவான். கண்டால் தாக்குதல்திட்டம் பிழைத்துவிடும். அதனால் அன்றிரவு பொதிசுமந்து களைத்துப்போய் வந்த போராளிகளிற்கு ஓய்வில்லை. மிகவும் சோர்வோடு அங்கு வந்தவர்களுள் ரஞ்சனோடு சிலர்தான் உணவுப்பொதி சுமக்கவில்லை. காரணம் அவர்கள்தான் முன்னுக்கு கிளியர்பண்ணி வந்தனர். ஆகையினால் பொதிசுமந்து வந்த போராளிகளை உறங்கவிட்டுவிட்டு களைப்போடு வந்த போராளிகளிற்குச் சமைத்துக் கொடுப்பதற்காக அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அண்மையில் இருந்த குளத்தில் மீன் பிடிக்கச்சென்றான். அங்குதான் 28.08.1995 அன்று அவனின் தீவிரமான விடுதலைப்போராட்டப் பணி முடியவேண்டும் என்றிருந்ததுபோலும். எப்படியாக மண்ணை நேசித்தானோ அப்படிப் போராளிகளையும் நேசித்தான். தான் நேசிக்கும் அப்போராளிகளிற்கு உணவு கொடுப்பதற்குச் சென்றவேளை எதிரியின் எதிர்பாராத மோதலினால் இந்த மண்ணை முத்தமிட்டு வீரகாவியமானான். ஓயாமல் வீசிய புயல் அவன். இந்த மண்ணில் ஓய்ந்தான்.

"இந்த விடுதலைப்போரில் கூடுதலாக சாதிப்பான் என்று நான் யாரை எதிர்பார்க்கின்றேனோ அவன் விரைவாகவே சாதித்துவிட்டு வீரச்சாவடைகின்றான்" என்று ரஞ்சனது இழப்பின் பின் இயக்கத்தின் மூத்த தளபதி கலங்கிய கண்களோடு கூறியிருக்கின்றார் என்றால் ரஞ்சன் எனும் போராளியை வேறுயாரும் வேறு எந்த வார்த்தையாலும் சொல்லத் தேவையில்லை.

தயாமோகன்






www.eelamview.com

www.eelamview.com

# கல்முனைப் படுகொலை

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தென் தமிழீழ மக்கள் கொடுத்த விலை பெரியது. படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள், காணாமல் போதல்கள், பாலியல் வல்லுறவுகள் என தொடர்ந்த அவலங்கள் அம் மக்களை உறவிழந்தவர்களாக, அங்கவீனர்களாக ஆக்கியது. நிரந்தர அச்சத்தினுள்ளும் அது தந்த மன இறுக்கத்தினுள்ளும் வாழுமாறு



நிர்ப்பந்தித்தது. அச்சமூட்டி கைவிடுமாறு செய்யப்பட்ட தமது பூர்வீக நிலங்களை அன்னியரிடமும் அத்துமீறிக் குடியேறுபவரிடமும் விட்டு அகதிகளாக அலையுமாறு செய்தது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர் தாயகமான மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பேரினவாத அரச போரினைச் சாதகமாக வைத்துக்கொண்டு சீருடை தரித்த படையினரையும், காடையர்களையும் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான தமிழ் உறவுகளை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தது.

விடுதலைப் போராட்டத்தில் எமது மக்கள் கொடுத்த விலை மிகப் பெரியது. இவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இந்தக் கொடூரச் சம்பவம் என்றுமே மாறாத வடுக்களை ஒவ்வொரு தமிழர் மனங்களிலும் ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு நகரில் இருந்து 40கி.மீ தொலைவில் அமைந்திருந்தது கல்முனைக் கிராமம். கிராமம் என்று கூறுவதைவிட நகரம் என்றே கூறலாம். இக் கிராமத்தினைச் சூழ்ந்து பாண்டிருப்பு, கல்முனை, நற்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, பெரியநீலாவணை போன்ற கிராமங்கள் காணப்படுகின்றன. இக் கிராமங்களில் முஸ்லிம்களும் தமிழர்களும் வாழ்கின்றனர். 1990ஆம் ஆண்டு ஆனிமாதம் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை பாண்டிருப்பு, கல்முனை, சேனைக்குடியிருப்பு போன்ற கிராமங்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துக் கொண்டனர். இவர்களைக் கண்ட மக்கள் அச்சத்துடன் கூட்டமாய் வீடுகளில் கூடியிருந்தார்கள்.

கிராமங்களைச் சுற்றிவளைத்துக்கொண்ட இராணுவத்தினர், மக்கள் அங்கிருந்து வெளியேறாதவாறு இடையிடையே துப்பாக்கிகளால் எதேச்சையாகச் சுட்டவண்ணமிருந்தனர்.. இளைஞர்கள், யுவதிகள், குடும்பஸ்தர்கள், வயோதிபர்கள், குழந்தைகள் என அனைவரும் நடுநடுங்கிப்போய் குழுமியிருந்தனர். இளைஞர்கள் தமது அடையாள அட்டைகளைக் கையில் எடுத்து வைத்திருந்தனர்.

ஒவ்வொரு கிராமத்திற்குள்ளும் நுழைந்த இராணுவத்தினர் வீடுவீடாக இளைஞர்களைத் தெரிந்தெடுத்தனர். சொந்தபந்தங்கள் கதறி அழுதனர். துப்பாக்கி முனையில் அவர்களின் கதறல்கள் நிறுத்தப்பட்டன. சுமார் 25 வரையான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் கல்முனை நகரத்தின் மத்திக்கு



கொண்டுவரப்பட்டனர். தமது உறவுகள் இராணுவத்தால் பிடித்துச் செல்லப்படுவதைப் பார்த்திருந்த உறவுகள் "என்ரை பிள்ளையை விடுங்கோ ஐயா, அவங்க ஒன்றும் அறியாத அப்பாவிங்க" என்று கத்திக்கொண்டு பின்னால் ஓடினர்.

பின்னால் சென்றவர்களை இராணுவத்தினர் தகாத வார்த்தைகளால் பேசி துப்பாக்கியால் அடித்துக் துரத்தினர். கொளுத்தும் வெயிலிலே தார் வீதியில் பலர் சுருண்டு விழுந்தனர்.

மறுநாள் விடிந்ததும், விடியாததுமாய் தமது பிள்ளைகளுக்கு என்ன? ஏதோ? நடந்தது என்ற அச்சத்துடன் காரைதீவு இராணுவமுகாமை நோக்கி மக்கள் சென்றனர். இச்சம்பவத்தினையடுத்து கல்முனை நகரம், நற்பட்டிமுனை, பாண்டிருப்பு போன்ற கிராமங்கள் சோகம் நிறைந்து வெறிச்சோடிக் காணப்பட்டன. தமது பிள்ளைகளின் நிலைமைகளை அறிவதற்காக காரைதீவு இராணுவமுகாம் நோக்கி ஆண்கள், பெண்கள் என பலர் சென்றுகொண்டிருந்தனர். அப்போது கல்முனை நகரின் மத்தியில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் அவர்களை தடுத்து நிறுத்தி வீதியின் ஒரு பகுதிக்குக் கொண்டுசென்று அனைவரையும் அமரவைத்தனர்.

ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் பிரித்து இருக்கவைத்தனர். நகரின் பல பகுதியில் நின்ற இராணுவத்தினர் அனைவரும் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தனர். மொத்தம் 37 தமிழ் உறவுகளைத் தெரிந்தெடுத்து பட்டப் பகலில் நட்டநடு வெளியிலே தமது இனவெறியாட்டத்தைத் தொடங்கினர். கூட்டத்தில் இருந்த இளம் பெண்களை தெரிந்தெடுத்து பக்கத்திலிருந்த கட்டிடத்திற்குள் கொண்டுசென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர். வீதியில் இருந்தவர்களை பொல்லுகள், இரும்புக் கம்பிகள் கொண்டு தாக்கினர். கையெடுத்துக் கும்பிட்டு காலைப் பிடித்துக் கதறி அழுதனர் மக்கள். அவர்கள் எழுப்பிய அவலக்குரல் துப்பாக்கி வெடியோசையினுள் அடங்கிப் போயிற்று. தமிழ் உறவுகள் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். அத்தனை உறவுகளையும் சித்திரவதைக்கு உள்ளாக்கி கொன்று குவித்தனர். சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் தமது இனவெறியாட்டத்தை நடாத்தி முடித்தனர்.

இச்சம்பவத்தில் குற்றுயிராய்க் கிடந்து உயிர்தப்பிய பாண்டிருப்பைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபாலதிபர் மட்டுமே இக்கொலைகளுக்கு இன்று நேரில் சான்றுபகிருவார். மொத்தம் 37 தமிழ் உயிர்கள் இச்சம்பவத்தில் பலியாகினர். திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட இப்படுகொலை தொடர்பாக இலங்கை அரசிடமிருந்து இதுவரை எதுவித நீதியான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது மட்டுமல்ல, ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு காரைதீவு முகாமிற்கு அழைத்துச்செல்லப்பட்ட 25 இளைஞர்களின் நிலைமை இதுவரை என்னவென்றே அவர்களது உறவுகளுக்குத் தெரியவரவில்லை.

பதின்நான்கு வருடங்கள் கடந்த நிலையில் கல்முனை நகரம் வழமைபோலவே இயங்குகின்றது. அந்த கோரக் கொலைவெறியாட்டத்தின் சுவடுகள் மறைக்கப்பட்டுவிட்டாலும் இன்றும் அந்தக் கொடியநாளின் நினைவுகளை அங்குள்ள மக்கள் பேசிக்கொள்கின்றனர். அந்த ஊரின் முதியவர் ஒருவர் சொன்னார் "இப்படித்தான் தம்பி சிங்களவன் எங்கட எல்லா ஊரையும் அழிச்சவன். அவன் நினைச்சான் நாம ஊரைவிட்டு ஓடுவமெண்டு. ஆனா இன்டைவரை நாம எங்கட ஊரை விடாம இஞ்சதான் இரிக்கம்".

—துஷி—

## (06ம் பக்கத் தொடர்ச்சி)

1977ஆம் ஆண்டு நாலில் மூன்றிற்கு மேற்பட்ட பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்திருந்த ஜே.ஆர்.ஜேவர்த்தன "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற யுத்தப் பிரகடனத்தை தமிழ்மக்கள்மேல் விடுத்தார். இது கண்டிமன்னன் விமல தர்மசூரியன் டச்சுக்காரருக்கெதிராகப் பயன்படுத்திய போர்ப்பிரகடன வாக்கியமாகும்.

அன்னிய, காலனித்துவ எதிரிக்கு எதிராக விமல தர்மசூரியன் பயன்படுத்திய இந்த போர்ப் பிரகடன வாக்கியத்தை சிங்கள ஆட்சியாளராகிய ஜே.ஆர்.ஜேவர்த்தன தமிழ்மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியதன் மூலம் தமிழ்மக்களை அன்னியர்களாகவும் எதிரிகளாகவுமே கருதி நடந்தார் என்பது தெளிவு.

இத்தகைய மனோபாவம்கொண்ட சிங்களத் தலைவர்களை விதிவிலக்கின்றி அனைத்துச் சிங்களத் தலைவர்களையும் தமிழ்மக்கள் நம்பிக்கைக்குரியவராய் பார்க்கமுடியாது. இப்படிப்பட்ட தலைவர்கள் மீது நம்பிக்கையின்மையும் வெறுப்புமிருப்பது இயல்பு. இத்தகைய இயல்பை மாற்றக்கூடிய வகையில் சிங்களத் தலைவர்களின் தற்போதைய நடவடிக்கைகள் கூட அமைவதாயில்லை. இருக்கும் அவநம்பிக்கையின் மீது மேலும் அவநம்பிகை ஏற்படுத்தக்கூடியதாகவே ஜே.வி.பி யினது அறிக்கைகளும், கருத்துக்களும், நடவடிக்கைகளும் அமைகின்றன. பழைய தலைமுறைகளினரின் மேற்படி செயற்பாடுகளுக்கு அப்பால் நம்பிக்கையூட்டவல்ல ஒரு புதிய தலைமுறை வரவுக்குப் பதிலாக புதிய தலைமுறையிலும் கூடிய வகையில் மிக வேகமாக வளர்ந்துவரும் இந்த ஜே.வி.பி எனும் சக்தி முன்னிலும் தமிழர்களுக்கு எதிர்க்கணியமாக நடப்பதுடன் நம்பிக்கையின்மையை அவர்கள் மூலம் வளர்ப்பவர்களாகவே உள்ளனர். இந்த நம்பிக்கையின்மைக்கூடாக தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் சமாதானம் என்பது கண்ணுக்கெட்டாக் கனியாய் உள்ளது.

ஆளும் கட்சி தமிழரின் உரிமையைப்பற்றி அரசாங்கத்தின் தேவைகருதி கதைக்கும்போது எதிர்க்கட்சி அதை எதிர்க்கும். அதனை சாட்டாகக் காட்டி தமிழர்களின் உரிமைகளை ஆளும் கட்சி நிராகரித்துவிடுவது வழக்கம். உண்மையான அர்த்தத்தில் இனவாத தேவையின் பொருட்டு ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சி உதவிசெய்தது என்றே கூறவேண்டும். பின்பு எதிர்க்கட்சி ஆளும் கட்சியாய் வரும்போது ஆளும் கட்சி எதிர்க்கட்சியாக வந்து ஆளும் கட்சி அதை நிறைவேற்றாதுவிட உதவிபுரியும். இதன்படி ஆளும் கட்சி எதிர்கட்சி இரண்டும் நாணயத்தின் எதிர்ப் பக்கங்கள் போல ஒரே இனவாதத்தின் இரு பக்கங்களாகவே உள்ளன. இதனால் இரு கட்சிகளையும் நம்பும் நிலையைத் தமிழ்மக்கள் இழந்தனர்.

ஆனால் இப்போது இதில் இன்னொரு புதிய வளர்ச்சிப்போக்கு ஏற்பட்டிருப்பதைக் காணலாம். அதாவது ஆளும் கூட்டணிக்குள்ளிருந்தே ஒரு பலமான எதிரணியாக ஜே.வி.பி செயற்படுவது. இனவாதத்தின் மேலோங்கிய வளர்ச்சியாக இப்படி ஜே.வி.பி யையும் எதிர்க்கட்சியையும் காரணம் காட்டி ஒருகட்டத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் எல்லா சமாதான முயற்சிகளுக்குமே சமாதி கட்டிவிடமுடியும். அத்தகைய சமாதி கட்டும்வரை தமக்கு தேவையான எல்லா நலன்களையும் திரட்டுவதற்காகத்தான், குறிப்பாக எல்லா வெளிநாட்டுச் சக்திகளையும் தம்பக்கம் திரட்டுவதற்கும் நிதிகளைத் திரட்டுவதற்கும்தான் இவர்கள் சமாதானம்பற்றி பேசுகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதுதான் இனவாதத்தின் தற்போதைய பரிமாணம். சர்வதேச சமூகத்தவரும் வெளிநாட்டவரும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் தமக்கு ஏற்படும் உத்தியோக தோரணையிலான காலபோக அனுபவத்தின் பின்பு தாம் சிங்களத் தலைவர்களிடம் ஏமாந்துபோய் விட்டதாகக் கூறி ஒரு பாவமன்னிப்பைக் கோருவதோடு அவர்களின் கதை முடிந்துவிடுகிறது. ஆனால் தமிழ்மக்களின் கதையோ அவர்கள் ஏமாந்த காலத்திற்குள் தமிழ்மக்கள் அழிவதில் முடிவடைந்து விடுகிறது.

1947ஆம் ஆண்டு அரசியல் யாப்பை இலங்கைக்கு உருவாக்கிக்கொடுத்த சோல்பரி, தான் சிங்களத் தலைவர்களிடம் ஏமாந்துபோய்விட்டதை பி.ஏச்.பாமர் என்பவருக்கு எழுதிய முன்னுரையிலும் சி.சுந்தரலிங்கத்துக்கெழுதிய கடிதங்களிலும் ஒப்புக்கொண்டுள்ளார்.

சோல்பரிக்கு ஒரு பாவமன்னிப்புப் பத்திரத்தோடு அல்லது சாதாரணமாக sorry என்ற சொல்லோடு விடயம் முடிந்துவிட்டது. ஆனால் தமிழ்மக்களைப் பொறுத்தவரை இழப்போ அவர் உருவாக்கிய யாப்பினூடாக வளர்ந்தே சென்றது.

சிங்களத் தலைவர்கள் காட்டும் சமாதானத் தோரணைகள் முன்கூட்டியே புரிந்துகொள்ளப்படுவதில்லை என்பதால் அதுபற்றிய யதார்த்தம் முன்கூட்டியே தெரிந்துகொள்ளப்படுவதுதான் சமாதானத் தீர்வுக்கான வழிகளை யோசிக்கமுடியும். அதனை பலப்படுத்துவதற்கான மார்க்கங்களை கண்டறியமுடியும். ஆதலால் சிங்களத் தலைவர்களின் அணுகுமுறைகளைப் பொறுத்தவரை அரசியலைப் பார்ப்பதை விடவும் அவர்களின் அரசியலின் அரசியலைப் பார்ப்பதுதான் இங்கு முக்கியமானது. தமிழரைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசியலை விடவும் சிங்களத் தலைவர்களின் அரசியலின் அரசியலைப்பற்றி அதிகம் அஞ்சுகிறார்கள். ●



www.eelamview.com

(05ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து காத்தார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

உலகின் பலம்வாய்ந்த சக்திகளின் நலன்களிற்கும் மாறாக விடுதலைப்புலிகளின் இந்த விடாப்பிடியான வளர்ச்சி அதன் தனித்துவத்தை நிலைநாட்டுவதாய் இருந்தது. அது மேலும் மேலும் உறுதிபெற்றுச் செல்லக்கூடிய நிலையை அடையாளப்படுத்தியது. இவ்வளர்ச்சி நிலை தமிழர் விடுதலையை விரும்பாத பெரும் சக்திகளை எதிராக அணிதிரளச் செய்தது.

மீண்டும் ஒரு அமைதி முயற்சியின் பின்னர் மூன்றாம் ஈழப்போர் மூண்டது. தனது அரசியற் தேவைகளுக்கேற்ப அதுவரை காலமும் இருந்துவந்த போர் மூலோபாயத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்து யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றின சிங்களப் படைகள். ஒரு சக்திவாய்ந்த விடுதலைப் பாதைக்குத் தேவையான பெரும் பௌதீக வளங்களைக் கொண்டிருந்த யாழ்.குடாநாட்டை இழந்தமை, விடுதலைப் புலிகளை பலவீனமுறச் செய்து அழிவு நிலையை நோக்கி அவர்களை அழைத்துச்செல்லும் என நம்பப்படும் சூழ்நிலை உருவாக்கியது. "ஐம்பதைந்து வீதத்திற்கும் மேற்பட்ட புலிகளின் பலம் ஒழிக்கப்பட்டு விட்டது. காடுகளுக்குள் விரட்டப்பட்ட ஏனைய புலிகளும் விரைவில் அழிக்கப்பட்டுவிடுவார்கள்" என அரச தரப்பு அடிக்கொரு தடவை பிரகடனம் செய்தது. ஈற்றில் மீதிப்பலமழிக்கவந்த படைகளை ஒருசில நாட்களுக்குள் விரட்டியடித்த போருடனும், அதை முறியடிக்க சிங்களம் செய்த பெரும் படையெடுப்பின் முறியடிப்புடனும் விடுதலைப்புலிகளின் பலம் மீளவும் நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறு, விடுதலைப்புலிகள் அமைப்பை அழிப்பதற்கும், பலவீனமுறச் செய்வதற்குமாகச் செய்யப்பட்ட இராணுவ முன்னெடுப்புகளெல்லாம் அர்த்தமற்றுப் போயின. அவ்வமைப்பே தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தனிப்பெரும் சக்தி என்ற நிலை உருவாக்கப் பட்டுவிட்டது. இந்நிலையில், அவ்வமைப்பிற்குள் பிளவை ஏற்படு



த்தி சக்திவாய்ந்த அதனது இருப்பை அழித்துவிடவும் முயற்சியொன்று எடுக்கப்பட்டது.

"ஒரு முடிவிற்கான ஆரம்பம்" என ஒரு பேரினவாத ஆங்கிலப் பத்திரிகை குறிப்பிடும் அளவிற்கு இம் முயற்சியின் வெற்றியைத் தமிழ்மக்களின் அபிலாசைகளுக்கு விரோதமான சக்திகள் நம்பிக்கைகொண்டு காத்திருந்தன. ஆனால் விரைவிலேயே அது முடிவிற்குக் கொண்டுவரப்பட்டபோது ஒரு பிரபல இந்தியச் சஞ்சிகை இவ்வாறு தனது ஆய்வை வெளியிட்டது. "கிழக்கின் முன்னாள் தளபதி கருணாவை சொற்ப தினங்களுக்குள் இலகுவாகவும் உயிரிழப்பின்றியும் விரட்டியடித்து முறியடித்ததன் மூலம் ஈழத்தமிழரின் தேசியத் தலைவர் தாமே என்பதனை தலைவர் பிரபாகரன் மீண்டும் ஒருதடவை நிரூபித்து விட்டார். அதேநேரம் அவரது இவ்வெற்றி எதிரிகளுக்கும் நல்லதோர் பாடமாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் பிரபாவுக்கு எதிராக சுண்டுவிரலை ஆட்டக்கூடியவர்கள் எவருமே இல்லை"

மொத்தத்தில் எத்தனையோ தடவைகள் இறுதித் திகதி குறிக்கப்பட்டபோதும் மீண்டெழுந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்படமுடியாத உறுதி பெற்ற பலத்தைத் தனது 28வருட வரலாற்றில் நிரூபித்து விட்டது. இத்தகைய பலத்தினூடாக விடுதலைப்புலிகள் அமைப்பு சர்வதேச மட்டத்தில் பிரவேசித்து, அந்நிலையில் வைத்து தனது மக்கள் ஆதரவை நிரூபித்து, இருபத்தோராம் நூற்றாண்டின் நிகரில்லாத விடுதலைப்போராட்ட அமைப்பாகத் திகழ்கின்றது.

**தமிழழகன்**

# அழகழகான, மலைமலையான, அலைஅலையான,



இளைய உறவுகளே...

கண்டிவீதியில்
கண்டபடி
உந்துருளியோடி
உயிரைவிடவா
நீ
உருவெடுத்தாய்

கொள்ளையடித்துக்
குடித்துக்
கும்மாளம் அடித்து
தெருவில் திரியும்
குமருகளுடன்
சொறிந்து
எல்லாளன் படையிடம்
எலும்பு முறியவா
இப்பூமியில் நீ
அவதரித்தாய்

சிந்தனைக்கு
வேலைகொடு...

'கில்லி'யை நான்
நாலுமுறை
பார்த்தேனெனச்
சொல்லித் திரிவதனால்
பூச்சிகளாய்
உமைநினைக்கும்
பல்லிகளே
பலம்பெறும்

தந்தை இழந்த
பிள்ளையென்றும்
கணவன் இழந்த
விதவையென்றும்
கண்ணீர் விட்டுக்
கதிரை ஏறிய
அசுரராணி
ஆட்சியில்தான்
அதிகமாய் நாம்
கண்ணீர்விட்டோம்

இந்தச் சுந்தரியே...

மண்ணிற்குள்ளே
பல கணவர்களையும்
மண்ணின்மேலே
பல விதவைகளையும்
விதைத்துவிட்டவள்
அனாதைகளின்
எண்ணிக்கையை
அதிகமாக்கியவள்

மீண்டும்
சமாதான சங்கீதம்
பாடுகிறாள்

எப்போது
குருதி பிசகுமென்று
இப்போதுகூட
சொல்வதற்கு
யாருமில்லை
ஆகவே...
தப்பாகப் பாடுவதற்காய்
நாக்குத்
தடம் புரளுமென்றால்
வெட்டுவோம் என
வெருட்டுவதற்குக்
கத்தியோடு நாங்கள்
காத்திருக்க வேண்டும்

ஊரடங்குச் சட்டமின்றி
ஊர்முழுதும் சுற்றவும்
கண்டி கொழும்பு
கதிர்காமக் கடலைப்
போகவும்
நைனாபூசனி நேத்திரைய
நல்லபடி முடிக்கவும்
வல்லிபுரத்தான் தீர்த்தம்
வாய்நிறையக் குடிக்கவும்
நல்லூர்க் கந்தன் வாசல்
நள்ளிரவுவரை திறக்கவும்
உங்கள்
இதயவாசல் திறந்து
இயக்கவாசல்
தேடவேண்டும்

கண்ணகி வீட்டுப்
பெருவிழா
இந்தமுறைபோல்
அடுத்தமுறையும்
"அந்த மாதிரி"
வேண்டுமென்றால்
அரியணையில் உள்ள
அக்காச்சிக்கு
நாங்கள்
ஆட்பலத்தை
அதிகமாகக்
காட்டவேண்டும்

கரும்புலிகள்
உதித்த தெருவிலும்
உதிர்ந்த ஊரிலும்தானே
நீ
உலவுகிறாய்

உன்
தங்கையின் குருதி
கரைந்த மண்ணில்தானே
நீ
பாதம் பதிக்கிறாய்

**செந்தோழன்**

உன்
அண்ணன் உயிர்
கலந்த காற்றைத்தானே
நீ சுவாசிக்கிறாய்

உன்
தோழன் செய்த
ஈகத்தில்தானே நீ
நிமிர்ந்து வாழ்கிறாய்

சொல்லு தமிழா
உன்
சோதரர்கள்
சொல்லிவிட்டுப்
போனதென்ன

வாழ்வை அர்ப்பணித்து
அவர்கள் கேட்டது
விடுதலை
சாவை அணைத்தவர்
சொன்னது சுதந்திரம்

வேறெதுவும் வேண்டாம்
அவர்களிற்கு நாங்கள்
அன்பளிக்க வேண்டியது
அது மட்டுமே..

போராளியாய் உமை
அழைப்பது
களம் சென்று
ஆடுவதற்காய் அல்ல
பலம் கொண்டே
உள்ளோம் எனும் முரசு
கொட்டுதற்காய்

உங்கள்
அழகழகான
அணிவகுப்பைக் கண்டு
மலைமலையான
படைபலத்தைக் கண்டு
அலைஅலையான
தமிழுணர்வைக் கண்டு
சிங்கள தேசத்திற்கு...
சீதம் போகட்டும்
சித்தம் கலங்கட்டும்
சத்தம் போடாமல்
சமாதானமே
செய்வோமென
திட்டம் தோன்றட்டும்
யுத்தம் வந்தாலினிச்
செத்தோம் எனச்சொல்லி
கத்தும் நிலைவந்து
கலங்கட்டும்.



www.eelamview.com



**எல்லாளன்**

சந்திரிகா அம்மையார் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார். போர்முரசு கொட்டிவந்த ஒரு இனவாதி திடீரென சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவாளரா கியுள்ளார்.

இது சமாதானத்திற்கான மனமாற்றம் என்று நம்ப பெரும்பாலான தமிழ்மக்கள் தயங்குகின்றனர்.

கடந்த ஒரு மாதம்வரை பகிரங்கமாகவே பேச்சுவார்த்தையை அதில் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடுகளை கடுமையாகக் கண்டித்துவந்த அவர், திடீரென குத்துக்கரணம் அடித்ததை அனைவரும் எச்சரிக்கையுடனேயே நோக்குகின்றனர்.

அம்மையாரின் கடும்போக்கிற்கு இடம்கொடுக்கும் வகையில் கள யதார்த்தமும் இல்லை, உலக சூழலும் இல்லை என்ற பேருண்மையை அவர் உணர்ந்துள்ளார் என்று கொள்ளமுடியுமா!

கடந்த பத்து ஆண்டுகளாக பதவியிலுள்ள ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தமிழரின் நடாத்தப்படவேண்டும் என்பதையும் ஏற்றுள்ளார். போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் அங்கீகரித்துள்ளார்.

இவை அனைத்தும் முன்னர் அம்மையாரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பேச்சுவார்த்தைக்கான அரச குழுவின் தெரிவும் அவரின் மனமாற்றத்திற்கு ஒரு சாட்சியாகத் தென்படுகின்றதா? ஒருஇனத்துரோகியாக தமிழ்மக்களால் வர்ணிக்கப்படும் கதிர்காமரை துயரவரலாறு மீண்டும் நிகழப்போகின்றதா! என்ற அச்சத்தை இந்த இரட்டைநிலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அபாயத்தை மேலும் வலுப்படுத் துவதுபோல அம்மையாரின் அரசில் அங்கம் வகிக்கும் இனவாதக் கூட்டாளிகளான ஜே.வி.பி கட்சியினரும், மாஜன எக்சத் பெரமுன கட்சியினரும்



# சந்திரிக்கா அம்மையாரின் சமாதான விருப்பம்
# மனமாற்றமா? பாசாங்கா?

இனப்பிரச்சினை தொடர்பாக கடும்போக்கையே வெளிப்படுத்திவந்தார். இதில் ஆறு ஆண்டுகளை பெரும் போரிலேயே அவர் செலவிட்டார்.

புலிகளுடனான போர் அவருக்கு பல இராணுவ உண்மைகளை உணர்த்தியிருக்க வேண்டும். புலிகளை போரில் வெல்லமுடியாது என்ற உண்மை அதில் ஒன்று. அம்மையார் இறுதியாக நடாத்திய 'தீச்சுவாலை' நடவடிக்கையை புலிகள் முழுமையாக முறியடித்து அம்மையாருக்கு ஒரு படிப்பினையை கொடுத்திருக்கலாம். எனவே, இராணுவ வழிமுறையில் அல்ல, சமாதான வழியிலேயே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற யதார்த்தத்தை அம்மையார் உணர்ந்துள்ளார் என்று கொள்ளலாம்!

இப்போது, புலிகள் இயக்கத்தை தமிழரின் ஏக பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொண்டுள்ளார். புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை பேச்சிற்கான அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்ற புலிகளின் நிலைப்பாட்டையும் ஏற்றுள்ளார். புலிகளுடன் மட்டும்தான் பேசவேண்டும், பேச்சு மேசையில் அரசும் - புலிகளும் சமபங்காளிகள் என்ற நிலைப்பாட்டையும் அவர் அங்கீகரித்துள்ளார். வெளிநாடொன்றில் பேச்சுக்கள் அரச குழுவில் இருந்து விலக்கிவைத்ததுடன், ஒப்பீட்டளவில் மிதவாதிகளான சிங்கள பிரதிநிதிகளை பேச்சுக் குழுவில் அம்மையார் இணைத்ததும் சந்தேகம் தரும் விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு சமாதானப் பேச்சுக்குச் சார்பானதாக காட்டிக்கொள்ளும் அம்மையாரின் நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்க மறுபுறம் பழைய சந்தேகங்களைக் கிளறக்கூடிய வகையிலும் அவரின் சில நடவடிக்கைகள் உள்ளன.

அம்மையாரின் தீவிர விசுவாசியான லக்ஸ்மன் கதிர்காமர் சமாதானச் சூழலுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய கருத்துக்களை தொடர்ந்தும் வெளியிட்டபடியுள்ளார். இது அம்மையாரின் சமாதான விருப்பை கேள்விக்குள்ளாக்கி வருகின்றது. அவர் இரட்டைவேடம் போடுகின்றாரா! என்ற ஐயத்தையும் எழவைத்துள்ளது.

இதுபோன்றுதான் முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் தான் சமாதானம்பற்றி பேசிக்கொண்டு தனது பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜேவர்த்தனாவை சமாதானத்திற்கு விரோதமாக கதைக்க வைத்தார். இறுதியில் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து போர்மூண்டது வரலாறு.

அத்தகையதொரு கருத்துக்கள் வெளியிட்டு வருகின்றனர்.

அம்மையாரின் அரசாங்கத்தை தாங்கிநிற்கும் ஜே.வி.பி யினரின் கருத்துக்கள் பேச்சுவார்த்தையின் அடிப்படைகளையே நிராகரிக்கும் தன்மை வாய்ந்தவைகளாக உள்ளன. தேர்தலுக்கு முன்னர் அம்மையார் கைக்கொண்ட இனவாதக் கொள்கைகளை தேர்தல் முடிந்த பின்னும் ஜே.வி.பி கைவிடவில்லை. அவர்களை அவ்வாறு செய்விக்கும் திறன் அம்மையாரிடமும் இல்லை. இது ஒரு ஆபத்தான அம்சமாகும்.

இன்றைய நிலையில் சிங்களத்தைப் பொறுத்தவகையில் அது புலிகளுடன் போரை நடாத்தும் நிலையில் இல்லை. அதற்குப் பிரதான காரணம் புலிகளின் இராணுவ பலம்தான். அத்துடன் போருக்கு வேண்டிய பொருண்மிய பலமும் சிங்களத்திடம் போதாதுள்ளது. பேச்சுவார்த்தைகளை காட்டி உலகநாடுகளிடம் உதவிபெற்று போர்ப் பொருளாதாரத்தைச் சேர்க்கும் சிங்களத்தின் முன்னைய தந்திரங்கள் இப்போது எடுபட வாய்ப்பில்லை. சமாதானப் பேச்சுக்களின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே சிறிலங்காவிற்கான உதவிகள் அமையும் என்று உதவிவழங்கும் நாடுகள் தெளிவாக அறிவித்துவிட்டன. இதேவேளை, தனிப்பட்ட முறையில் இராணுவ உதவிகளை வழங்கக்கூடிய நாடுகளாக முன்னர் இருந்த சில உலகநாடுகளும், சிங்களத்திற்கு இராணுவ உதவிவழங்க பின்னடித்துவிட்டன.

இவ்வாறாக சமாதான முயற்சிகளிலும் இரட்டைநிலை, போரை ஆரம்பிப்பதிலும் தயக்கம் என்றொரு குழப்பநிலையில் சிங்களத்து அரசியல் உள்ளது. இது சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியில் முடியும் என்ற கருத்தை பலவீனப்படுத்துவதாகவே உள்ளது.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவகையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை அமைதிவழியில் அரசியல் தீர்வு மூலம் தீர்த்துவைக்க தயாராகவே உள்ளனர். புலிகளின் இந்த சமாதான விருப்பை சர்வதேச சமூகம் சரியாகவே உணர்ந்துவைத்துள்ளது. தேவையான இராணுவ பலத்தையும் வைத்துக்கொண்டு அமைதிப்பேச்சில் பொறுமையும் - நேர்மையும் - விட்டுக்கொடுப்பும் செய்துவருகின்ற புலிகளின் தலைமையை சர்வதேச சமூகம் பாராட்டியே வருகின்றது. கொழும்புக்கு இணையாக கிளிநொச்சியையும் ஒரு அரசியல் மையமாக சர்வதேச இராஜதந்திரிகள் பயன்படுத்துவது புலிகள் இயக்கத்திற்கு கிடைத்த ஒரு அரசியல் கீர்த்தி என்பதில் சந்தேகமில்லை.

இதேவேளை சமாதானப் பேச்சை சந்திரிகா விரும்பினாலும் அவரை ஒரு நம்பகத்தன்மை அற்ற ஆட்சித் தலைவராகவே சர்வதேச சமூகம் பார்க்கின்றது. இது தமிழ்மக்களுக்கு நிம்மதிதரும் விடயமாகும். அதேசமயம் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களை ஒரு நேர்மையான நம்பகத் தன்மைவாய்ந்த தலைவராக சர்வதேசம் நோக்குகின்றது. இது தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும் அம்சமாக உள்ளது.

1994ஆம் ஆண்டு பதவிக்கு வரும்போது சமாதானம் பேசிவந்து பின்னர் போரை நடாத்தினார் அம்மையார்.

2004ஆம் ஆண்டு இனவெறி கக்கி - போர்முரசு கொட்டி ஆட்சியைப் பிடித்தபின் சமாதான அரசியல் நடாத்த விளைகின்றார் அம்மையார்.

தமிழ் - சிங்கள இனப்பிரச்சினையை அமைதி வழியில் தீர்த்துவைக்க விரும்பும் சர்வதேச சமூகத்திற்கு சிங்களத்தின் இந்த கோமாளித்தனமான அரசியல் நன்றாகப் புரிந்திருக்கும். ●



www.eelamview.com

www.eelamview.com



(04ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டுவதை வெளிநாட்டுக் காரணிகள் தடுத்துவிட்டன. அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. புதிய தளங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அந்தத் தளங்களிலிருந்து கிரேக்க சைப்பிரஸ் மக்கள் இறுதி வெற்றியைப் பூரணப்படுத்த அணிவகுத்துச் செல்வார்கள்" என்று கூறினார். (லெவோனைன் ஸ்ராவினிடீசின் "சைப்பிரஸ் முரண்பாடு. தேசிய அடையாளம், தேசியத்தன்மை. 1975) அரசியலமைப்பின் முக்கிய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு மக்காரியோஸ் வற்புறுத்தியதும் 5 மாநகர சபைகள் பற்றிய நீதிமன்றத் தீர்ப்புக்களை அவர் நிராகரித்தும் சைப்பிரசின் உச்ச அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு தலைமை தாங்கிய நடுநிலை மேற்குஜேர்மன் நீதியாளரும் ஹேய்டெல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவருமான பேராசிரியர் கலாநிதி எர்ணஸ் போஸ்ர்ஹொட் 1963ஆம் ஆண்டில் தன் பதவியைத் துறப்பதற்கு காரணமாக அமைந்தன.

துருக்கிய சைப்பிரஸ் சமூகத்துக்கான அரசியலமைப்பு ரீதியான உரிமைகளை குறைக்க அல்லது நீக்கும் விதத்திலான 13 அரசியலமைப்பு திருத்தங்களை உபஜனாதிபதி கலாநிதி கூக்குக்கிடமும் அங்காராவிடமும் மக்காரியோஸ் முன்வைத்தபொழுது அவர்கள் அவற்றை நிராகரித்துவிட்டனர். கிரேக்க சைப்பிரஸ் தலைமைத்துவத்தின் இந்த நகர்வுகள் இரு சமூகங்களுக்குமிடையேயான பதட்டங்களை அதிகரித்துவிட்டது.

1963. டிசம்பர் மாதத்தில் துருக்கிய சைப்பிரஸ்காரர்கள் அரசியலமைப்பு ரீதியான அனைத்து பதவிகளிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்கள். துருக்கிய சைப்பிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபைக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. மக்காரியோஸ் தலைமையிலான EOKA பயங்கரவாத அமைப்பானது 'அக்கிரிட்டாஸ் திட்டம்' ஒன்றை வகுத்து செயற்பட்டது. அதன் இலக்குகளாக சைப்பிரஸ் தீவெங்கும் இருந்த துருக்கிய சைப்பிரஸ் மக்கள் இருந்தனர்.

1963 - 1974வரையான 11 வருடகாலப் பகுதியானது இரத்தக் களரி. துன்பம். வேதனை முதலியவை நிறைந்ததாகவே இருந்தது. 103 கிராமங்களில் இருந்து 30,000 துருக்கியர்கள் வலிந்து விரட்டியடிக்கப்பட்டனர். தீவினுடைய நிலப்பரப்பின் 3%மான பரப்புக்குள் வாழ்ந்த 120,000 துருக்கியர்கள் முற்றுகையிடப்பட்டனர். அட்லிலர்(ATLILAR) முறட்டாகா(MURATAGA). சண்டல்லர் (SANDALLAR) ஆகிய கிராமங்களில் நூற்றுக்கணக்கான துருக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 800க்கு அதிகமான துருக்கிய சைப்பிரஸ் மக்கள் இந்தக் காலப்பகுதியில் காணாமல் போய்விட்டார்கள்.

சுவிஸ் உடன்பாட்டில் தனக்கு அளிக்கப்பட்ட உரிமையின் அடிப்படையில் சைப்பிரஸ் தீவில் 1974ம் ஆண்டில் துருக்கி தலையிட்டது. துருக்கிய சைப்பிரஸ் பகுதியை துருக்கியப் படைகள் ஆக்கிரமித்துக்கொண்டன. இதன் மூலம் துருக்கிய சைப்பிரஸ் மக்கள் முழுமையான இன அழிப்பிலிருந்து காப்பாற்றப்பட்டனர். சைப்பிரசும் பயன் விளைவான முறையில் பிரிவினைக்குட்படுத்தப்பட்டது.

துருக்கியினுடைய பிரமாண்டமான படையெடுப்பினால் 200,000 கிரேக்க சைப்பிரஸ் மக்கள் தங்களுடைய வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இதேவேளை பத்தாயிரக்கணக்கான துருக்கிய சைப்பிரஸ் மக்கள். புரட்சி சதியின் பின்னான விளைவுகளுக்குப் பயந்து. துருக்கிய இராணுவத்தின் பாதுகாப்புக்குள் தப்பியோடினார்கள்.

1974. யூலை 15ஆம் திகதி கிரேக்கத்தில் ஆட்சியிலிருந்த 'இராணுவக் குழு' CIAஇன் ஆதரவுடன் சைப்பிரசில் புரட்சி ஒன்றை நிகழ்த்தி மக்காரியோஸைப் பதவி கவிழ்த்தது. நிக்கோஸ் ஸாம்ப்ஸன் என்ற பொம்மை ஜனாதிபதியை மக்காரியோசின் இடத்துக்கு நியமித்தது.

கிரேக்க சைப்பிரஸ் பகுதியில் புரட்சியை நிகழ்த்திய இராணுவக் குழுவை. கிரேக்க சைப்பிரஸ் மக்களே 5 நாட்களுக்குப்பின் பதவி கவிழ்த்துவிட்டார்கள் அடுத்தநாள் கிரேக்கத்து இராணுவ ஆட்சிக் குழுவும் கவிழ்ந்து போனது. ஆனால் இது துருக்கிய துருப்புக்கள் மீளப் பெறப்படுவதற்கு வழி வகுக்கவில்லை.

மக்காரியோஸ் அரசுடன் முரண்பாடுகளை கொண்டிருந்த அமெரிக்காவே. புரட்சிச் சதிகளுக்கும், படையெடுப்புக்குமான மறைமுக ஆதரவுகளை வழங்கியிருந்தது.

கிரேக்க சைப்பிரஸ். துருக்கிய சைப்பிரஸ் பகுதிகளுக்கிடையே ஐ.நா துருப்புகளின் கண்காணிப்பிலான மோதல் தவிர்ப்பு வலயம் (NUFFER ZOONE) உருவாக்கப்பட்டது.

1974 நிகழ்வுகளுக்குப் பின் மேற்கொள்ளப்படும் சமரச முயற்சிகள் அற்ப அளவிலான முன்னேற்றங்களையே அடைந்தன. 1983ஆம் ஆண்டில் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்த துருக்கிய சைப்பிரஸ் நாட்டின் மீது அதனை அங்கீகரித்த ஒரே நாடான துருக்கியும் துருக்கிய சைப்பிரஸ் பகுதியை ஆக்கிரமித்திருந்த அதன் 35,000 துருப்புகளும் கொண்டிருந்த இரும்புப் பிடியான கட்டுப்பாடே இதற்குக் காரணமாக இருந்தது.

1974 ஆக்கிரமிப்புக்குப் பின். 200,000 துருக்கிய சைப்பிரஸ் மக்கள் வாழ்ந்த துருக்கிய சைப்பிரஸ் பகுதிகளுள் 300,000 துருக்கியர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது. இது உண்மையான துருக்கிய சைப்பிரஸ் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி விட்டது.

1974இல் இருந்து துருக்கிய மற்றும் கிரேக்க சைப்பிரஸ்கள் இணைந்த ஏதோ ஒருவகை சமஷ்டி ஆட்சி அல்லது இணைப்பாட்சி முறையை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தைகள் முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ரோப் டென்க்ராஷ் (RAUF DENK - TASH) தலைமையிலான துருக்கிய சைப்பிரஸ் வாசிகள் முழுத் தீவுரீதியாக தொடர்புபடுத்தப்பட்ட சில அமைப்புகளுடனான இரண்டு மாநிலங்கள் என்ற தீர்வை வலியுறுத்துகின்றனர். கிளப்கோஸ் கிளெறைட்ஸ் (GLAFKOS CLERI - DES) தலைமையிலான கிரேக்க சைப்பிரஸ் பேச்சுவார்த்தையாளர்கள் துருக்கிய சைப்பிரஸ் மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதங்களுடன் கூடிய வலயங்களின் கூட்டாட்சி தீர்வை வலியுறுத்துகின்றனர். வெளித்தோற்றத்துக்கு அமெரிக்கா கிரேக்க சைப்பிரஸ் தரப்பின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக இருப்பதுபோல் தோன்றினாலும் துருக்கியுடன் அது கொண்டிருக்கும் வலுவான கூட்டு காரணமாக அங்காரா மீது அழுத்தங்கள் எதையும் அது பிரயோகிக்காது. இந்த வகையில். பல அரசுகள். அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் பல்வேறு முன்முயல்புகளை மேற்கொண்டன. இவற்றுள் அதிக வெற்றிபெற்றதாக வேர்ஜீனியாவில் உள்ள ஜோர்ஜ் மேஸன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தொடர்பாடல் நிபுணரான பென்புறூமே (BEN BROOME) (இப்போது அரிசோனா மாநில பல்கலைக்கழகம்) யின் முயற்சி இருந்தது. அவர். கிட்டத்தட்ட இரு தரப்புகளையும் சேர்ந்த 200பேர்களை கொண்ட சமூகம் ஒன்றை உருவாக்கி பிரிவினைக் கோட்டுக்கு குறுக்காக உறவுகளை வளர்க்கும் முயற்சிகளில் அவர்களை ஈடுபடச் செய்தார். எனினும் இருதரப்பிலும் உள்ள கடும்போக்கு - கூறுகள் கிரமமான முறையிலே இம்முயற்சிகளில் தலையீடுசெய்து அவற்றைச் செயலறு நிலைக்கு கொண்டுவருகின்றன. இப்போது கிரேக்க சைப்பிரஸ் பகுதியில் வலுவான செல்வாக்கோடு இருக்கின்ற பழமைவாத திருச்சபை கூட்டாட்சி முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றது. "சைப்பிரஸ் முடிவு செய்கிறது" என்ற அனான் திட்டத்தில் பல பயன்விளைவான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த திட்டத்தின் அடிப்படையில் இரு சைப்பிரஸ்களையும் மீள இணைக்கும் திட்டம் பற்றிய பிரச்சாரங்கள் கோபி அனானின் மேற்பார்வையில் இருபதுக்கு மேற்பட்ட ஐ.நா நிபுணர்கள் கிரேக்க சைப்பிரசில் மேற்கொண்டிருந்தனர். அத்தோடு ஐரோப்பிய யூனியனில் சைப்பிரஸ் இணைவதற்கான முன்நிபந்தனையாக மீள் இணைப்பு வலியுறுத்தப்படாவிட்டாலும் அனுசரணையாக இருக்கும் என பரிந்துரைக்கப்பட்டது. எனினும் கிரேக்க சைப்பிரஸ் அரச இணைப்புக்கு எதிராக வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்து வந்தது.

1990. யூலையில் சைப்பிரஸ் குடியரசானது. முழுத் தீவினதும் சார்பில் ஐரோப்பிய யூனியனில் (EU) இணைவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தது. தீவினுடைய 38 வருடகால முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஊக்கியாக இது பயன்படலாம் என பரவலாக கருதப்பட்டது. இதற்கான பேச்சுவார்த்தைகள் 2002ஆம் ஆண்டில் நிறைவுபெறவேண்டும். அப்படி நிறைவுற்றால் 2004ஆம் ஆண்டில் சைப்பிரஸ் குடியரசு EU அங்கத்துவத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஐரோப்பிய யூனியனின் முழுத் தீவும் உறுப்புரிமை பெறும் விதத்தில். மீள் இணைப்புக்கான கருத்துக் கணிப்பு இரண்டு சைப்பிரஸ்களிலும் சமகாலத்தில். அதாவது 2004. ஏப்ரல் 24ஆம் திகதி இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டது.


தன் திட்டத்தின் தலைவிதியினை நிர்ணயிக்கும் விதத்தில் மீள் இணைப்புக்கு ஆதரவாக வாக்களிப்பதன் மூலம் சைப்பிரஸ் மக்கள் தங்கள் 30 வருட பிரிவினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கோபி அனான் சைப்பிரஸ் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

சைபிரஸ் மீள் இணைப்புக்கு ஆதரவாக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ரஷ்யாவால் 'வீட்டோ' (VETO - இரத்துச்செய்யும் உரிமை) செய்யப்பட்டது.

கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி இடம்பெற்ற கருத்துக் கணிப்பில். கிரேக்க சைப்பிரஸ் மக்கள் மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் இணைப்புக்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். இவ்வாறு மக்கள் நிராகரித்ததை தொடர்ந்து சைப்பிரசில் தங்கியிருந்த ஐ.நா பிரச்சாரகர்கள் 20பேர் வரையில் சைப்பிரசைவிட்டு வெளியேறிவிட்டார்கள்.

இனி துருக்கிய சைப்பிரஸ் மக்களை மேம்படுத்துவதில் ஐ.நா கவனம் செலுத்தலாம் என ஐ.நா பேச்சாளர் பிறையன் கெலி ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார்.

சைப்பிரசின் எதிர்காலம் கேள்விக்குறியாகி நிற்கிறது. ●



| | 1881 | 1891 | 1901 | 1911 |
|---|---|---|---|---|
| கிரேக்க சைப்பிரஸ் மக்கள் | 73.9% | 75.8% | 77.1% | 78.2% |
| துருக்கியர் | 24.4% | 22.9% | 21.6% | 20.6% |
| [illegible] | 1.1% | 0.4% | 0.4% | 0.3% |
| [illegible] | 0.1% | 0.1% | 0.2% | 0.2% |

## பகிரப்படாத பக்கங்கள்

அந்தச் செய்தியைக் கேட்டதும் என்னுள் இனம்புரியாத ஒரு அதிர்வு. சண்டைக் களங்களில் இப்படி நடப்பது வழமைதான். ஆனால் அவனுக்கு ஏற்பட்டதுதான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

அவனது கண்கள் காட்சிகளை உள்வாங்க, எண்ணங்கள் எழுச்சியுற, வண்ண ஓவியங்கள் வடிவெடுக்கும். அவனது ஓவியங்களைப் பார்த்ததும் காட்சிகளை நேரில் கண்ட திருப்தி என்னுள் ஏற்படுவதுண்டு.

ஓய்வு நேரத்தில் ஓவியம் வரைவதிலும் ஒப்பற்ற புத்தகங்களைப் படிப்பதிலும் மூழ்கிப்போயிருப்பான். புதிய போராளிகளைப் படம்போடுவதில் அவனுக்கு நிகர் அவனேதான்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓயாத அலைகள் ஒன்றுக்கான ஒத்திகைகள் நடந்துகொண்டிருந்தன. அந்த அலையில் கலக்க அவனுக்கும் அனுமதி கிடைத்தபோது அகமகிழ்ந்து போனான்.

ஓயாத அலை ஓங்கி எழுந்தது.எதிரிகளுக்கு என்ன செய்வதென்று தெரியாத அதிர்ச்சி. அவசர கதியில் அவர்கள் ஏவிய எறிகணை, அவன் நிலையெடுத்திருந்த இடத்திற்கு அருகாமையில் வீழ்ந்து வெடித்தது.

எறிகணைத் துண்டுகளும் மண் துகள்களும் அவனைப் பதம்பார்த்தன. குருதி வெள்ளத்தில் கிடந்தான். மருத்துவ முகாமிற்கு கொண்டுசென்று சிகிச்சையளித்தபோது, காயங்கள் மாறியபோதும் ஒளியிழந்த கண்களை உயிர்ப்பிக்க முடியவில்லை.

அவனால் இனி எப்படி ஓவியம் வரையமுடியும்? எப்படி புத்தகங்களைப் படிக்கமுடியும்? இப்படிப் பல கேள்விகள் என்



மனதில் எழுந்தன. என்னால் விடைகாணமுடியாத வினாக்களாகிப் போயின.

சிறிது காலத்தின் பின் ஒரு நிகழ்வில் கரும்புலிகளின் தியாகம் பற்றிப் பேசினான். அவனால் ஓவியம் வரைய முடியாவிட்டாலும் சொல்லோவியத்தால் கரும்புலிகளின் உணர்வுகளை சிறப்பாக வெளிப்படுத்தினான். மக்களின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

அவன் மீண்டும் பல போராளிகளை வழிநடத்துகின்ற நிலையில் இருப்பதை அறிந்து அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன். சில மாதங்களிக்கு முன்னர் அவனைச் சந்தித்தபோது, எனது குரலை வைத்தே யாரென இனங்கண்டுகொண்டான். இப்போது அவனது கைகளில் புத்தகங்களிக்குப் பதிலாக வானொலிப்பெட்டி இருந்தது. மற்றைய போராளிகளை புத்தகத்தை வாசிக்கச் சொல்லிவிட்டு கேட்டுக்கொண்டிருப்பான். பின்னர் அவைதொடர்பான பல விடயங்களை விளங்கப்படுத்துவான். நடைமுறை விடயங்கள் மற்றவர்களைவிட அவனுக்குக் கூடத் தெரிந்திருந்தன.

என்னுள் எழுந்த கேள்வியை அவனிடம் கேட்டேன்.

"உங்களுக்கு கண்பார்வை இல்லாதது சரியான சிரமமா இருக்குமென்ன?"

"சிரமமென்டு நினைச்சாத்தான் சிரமமாயிருக்கும்"

அவன் புன்னகையோடு பதில் தந்தான். தன்னம்பிக்கைக்கு முன்னால் ஒளியிழந்த கண்கள் தோற்றுப்போனதை, அவனது வார்த்தைகள் சொல்லாத செய்தியாய் சொல்லி நின்றது.



●

ஆ.ந. பொற்கோ



www.eelamview.com

www.eelamview.com



# சந்தேகமும் நம்பிக்கையும் ஒரே தோட்டத்துப் பயிரா!?



உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு நடப்பதற்கு இரு நாட்களின் முன்னர் நோர்வே விசேட தூதுவரின் "சமாதான முன்னெடுப்புக்கள் கடினமாக இருக்கின்றன" என்ற கருத்துக்கு மேற்குலகம் செவிசாய்த்து இந்த அரசாங்கம் எதிர்நோக்கிய முதல் உதவிவழங்கும் மாநாட்டில் மண்ணள்ளிப் போட்டிருக்கிறது.

புலிகள் சற்று நிதானமாக முன்னேற விரும்புகின்றனர். அரசாங்கம் இது விடயத்தில் அவசரத்தனம் காட்டுகிறது என்று இந்தக் கடினத்திற்கு அளித்த வியாக்கியானம் மூலம் இதற்கான பழிக்கு பொறுப்பாளியாக அரசாங்கத்தின் பக்கம் சுட்டுவிரல் நீட்டப்பட்டிருக்கிறது. இதற்கு புலிகளின் பக்கம் மேற்கு நிற்பதுபோலவும் தோற்றமளிக்கும் தன்மையுண்டு. ஏன் இப்படி நடந்தது?

இதே அரசாங்கத்தின் காலத்தில் இதே வெளிவிவகார அமைச்சர் காலத்தில் இதே புலிகளை இதே மேற்குலகத்தின் சக்தி வாய்ந்த நாடுகளில் தடைசெய்விக்க முடிந்தபோது - பயங்கரவாதிகளாக ஆக்க முடிந்தபோது ஏன் இப்பொழுது இப்படி நடக்கிறது?

பெரும்பான்மையற்ற அரசாங்கத்தை காப்பாற்ற சந்திரிகா என்னென்ன வழிகளில் இறங்கக்கூடும். தான் ஆட்சியைப்பிடிக்க கதைத்தவையும் அதற்காகக் கண்ட உடன்பாடுகளும் தனக்குப் பாதுகாப்பானதல்ல என சந்திரிகா உணர்ந்து கொண்டிருக்கும் தருணத்தில் தன்னைப் பாதுகாக்க அவர் என்ன உத்திகளைக் கையாள்வார் என்பது அடுத்து இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்க இருக்கிறது.

இதை ஊகிப்பதில்தான் அவரின் எதிராளிகளும் கூட்டாளிகளும் பங்காளிகளும் விரோதிகளும் அனுசரணையாளர்களும் அதிக அக்கறையுங் கொண்டு நேரத்தையும் செலவிடுகின்றனர்.

இலங்கையில் யுத்தத்தைத் தவிர்ப்பதுதான் மேற்குலகின் அரசியல் ஆர்வம். நோர்வேக்கு வழங்கப்பட்டிருக்கும் மேற்கின் ஒத்துழைப்பென்பதும் இந்தப் பணியை செவ்வனே நிறைவேற்றுவதற்காகத்தான். அவ்வாறாயின் புதிய அரசாங்கம் பொறுப்பேற்று முகங்கொடுத்த முதலாவது உதவிவழங்கும் மாநாட்டில் இப்படியொரு எதிர்நிலை எடுக்கப்பட்டிருக்கிறதென்றால் யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு அது அவசியமானதென அவர்கள் எண்ணுகிறார்களென்றே அர்த்தம்.

மேலும் சமாதானம் முன்னெடுக்கப்படாமல் அளிக்கப்படும் நிதி சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கும் என்ற விடுதலைப்புலிகளின் வேண்டுகோளுக்கு மேற்கு செவிசாய்த்திருப்பதான தோற்றம் சந்திரிகா தனக்கான தெரிவாக யுத்தத்துக்கான தூண்டுதல்களில் இறங்கினாலும் புலிகள் மேற்கின் ஆர்வத்தைப் புரிந்துகொண்டு அதிக பொறுப்புடன் நடக்கவேண்டும் என்பதற்கான மறு வேண்டுகோளாகவே இருக்கிறது. ஆக சந்திரிகா யுத்தத்தின்வழி இறங்கக்கூடுமென்ற ஐயம் அல்லது சமாதானத்தின் யதார்த்தப் பாதையில் பயணிக்கமாட்டார் என்ற ஐயம் ஒன்று சர்வதேசத்திடம் உண்டு.

தனது சிறுபான்மை அரசை தக்கவைக்க சந்திரிகா என்ன செய்யக்கூடுமென்ற கேள்விதான் இந்த ஐயத்தை எழுப்பியது. அவரது பிரதான கூட்டாளிக் கட்சியான ஜே.வி.பி இம்முறை தேர்தலில் தனது எழுச்சிக்கு என்ன காரணம் என்பதையும் அதைத் தக்கவைக்க என்ன காரியம் ஆற்றவேண்டியிருக்கிறது என்பதை கண்டறியாமலிருக்க வாய்ப்பில்லை.

ஜே.வி.பி இதுவரை அரசாங்கத்தில் பங்குகொண்ட கட்சியல்ல. ஆனால் இம்முறைத் தேர்தலோ வெற்றி பெற்றால் ஜே.வி.பி அரசாங்கத்தில் பங்குகொள்ளும் என்று தீர்மானிக்கப்பட்ட தேர்தல். என்னென்ன அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்படும் என்பதுகூட வெளியாகிவிட்ட தேர்தல். எனவே அவர்களின் சிவப்புக் கொள்கைக்கேற்ப காரியமாற்றுவார்கள் என்று அடித்தட்டு சிங்கள மக்கள் அதிகம் நம்பினார்கள். தங்கள் வயிறுகளையும் கைகளையும் நிறைத்துக்கொள்வதற்கு வாய்ப்பான காலமென்று அவர்கள் நம்பினார்கள். இது கருத்துக்கிருந்த கவர்ச்சியைவிட செயலின்மீதான நம்பிக்கைக்கேற்பட்ட கவர்ச்சி. அதுவே ஜே.வி.பியின் வெற்றிக்கான அமோக ஆதரவின் மர்மக் காரணி.

எனவே இதைத் தக்கவைப்பதிலும் வளர்த்தெடுப்பதிலும்தான் ஜே.வி.பிக்கான அரசியல் எதிர்காலம் இருக்கப்போகிறது. தவிரவும் தமிழர் எதிர்ப்புநிலை பற்றிய கருத்துக்கும் பிரதான இரு கட்சிகள்மீது கண்டனம் தெரிவிக்கும் கருத்துக்கும் ஜே.வி.பிக்கு அதிக கவர்ச்சி இனி இருக்கப்போவதில்லை. அதற்கு இதுவிடயத்தில் இவர்களைவிட தீவிரமாக இயங்கமதச் செல்வாக்குடன் ஹெல உறுமய வந்தாகிற்று. ஆக, சிவப்புக் கொள்கையில் கவரப்பட்ட மக்களின் வயிறுகளையும் கைகளையும் நிரப்ப காரியமாற்றுவதில்தான் ஜே.வி.பியின் அரசியல் ஆர்வம் இருக்கும். எனவே நிதிக்காக சமாதானத்தில் முன்னேறவும் ஒத்துழைக்கவும் வேண்டிய தேவையும் ஜே.வி.பிக்கு உண்டு.

அமைச்சுக்களை வைத்து ஜே.வி.பி காரியமாற்றினால் ஜே.வி.பி இருப்பதைவிடவும் எழுச்சியடையப்போவது திண்ணம். அதில் வீழ்ச்சியடையப்போவது சுதந்திரக்கட்சிதான். இது இவ்விரு கட்சிகளுக்குமே தெரியும். எனவே இவ்விரு கட்சிகளுக்குமான உறவு 'அணைத்துக் கெடுக்கும்' தந்திரத்தில் தங்கியிருக்கும்.

சந்திரிகா ஜே.வி.பியின் எழுச்சிக்கு அதிக முட்டுக்கட்டைகளைப் போடவேண்டியது அவரின் எதிர்காலத்திற்கான தேவை. நிகழ்காலத்திலோ ஜே.வி.பியை அணைத்து வைத்திருப்பது அவரின் தேவை. இந்த இரண்டுக்கும் இடையில் எழும் முரணில் ஜே.வி.பி ஒத்துழைப்புக்கு முரண்டுபிடித்தால் புலிகளுடனான யுத்தம் ஒன்றில்தான் அதனைச் சீர்செய்ய முடியுமென்றும் யுத்தத்திற்கெதிராக இயங்கக்கூடிய தளம் ஜே.வி.பியிடம் இல்லையென்றும் சந்திரிகா எண்ணிவைத்திருப்பது போல அவரின் செயல்கள் காட்டுகின்றன.

எனவேதான் சந்திரிகா சமாந்தரமாக இரு முனைகளில் முயற்சிக்கிறார்போல தோன்றுகிறது. ஒன்று நிதியை முதலில் பெறுவதற்காக சமாதானத்தில் நோர்வேயின் பாத்திரத்தை ஏற்றும் சமாதான செயலராக ஜயந்த தனபாலவை நியமித்தும் மேற்கிற்கு நம்பிக்கையூட்டி தனக்கு சமாதான ஆர்வம் இருப்பதாக காட்டுகிறார். மறுவளத்தில் கதிர்காமரையே வெளிவிவகார அமைச்சராக நியமித்து யுத்தம் ஒன்று ஏற்படின் அதற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களைத் திரட்டுவதற்காக இந்தியா, சீனா போன்ற பிராந்திய வல்லரசுகளிடம் தனது உறவை பலப்படுத்தி வருகிறார். மேலும் யுத்தமொன்று ஏற்படின் வடக்கின் நிலைகளைத் தக்கவைத்துக்கொண்டு கிழக்கில் ஒரு வெற்றியைக்காட்டி அதில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முடியுமென்று அவர் நம்புவதாக அவரின் இராணுவ மந்திரிகள் இருக்கின்றனர் என்று தகவல்கள் கிடைக்கின்றன. கருணா விவகாரமும், அதைச்சூழ்ந்து இப்பொழுது இராணுவம் செயற்படுவதன் மூலமும் இதற்கான வாய்ப்பை அதிகம் தருமென்று அவர் நம்புவதாக தெரிகின்றது.

இத்தகைய அரசின் இருமுனை சமாந்தர நகர்விற்கு கிடைத்த மறுத்தானாகவே நிதி வழங்கும் மாநாட்டின் முடிவை கொள்ளலாம். அத்துடன் அரசின் செயலில் ஐயுற்ற புலிகளும் இதற்கு ஈடாக இயங்கிவிட வேண்டாம் என்பதற்கான வேண்டுகோளாகவும் இதனைக் கொள்ளலாம். சர்வதேச சமூகத்தின் இத்தகைய எதிர்பார்ப்பு புலிகளுக்கான ஓர் அங்கீகாரம் என்பதில் சந்தேகமில்லை. இந்த அங்கீகாரத்தைப் பெறுவதன்மூலம் புலிகள் அதற்குப் பொறுப்புடையவர்களாக நடக்கவேண்டும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், வரலாற்றில் கொள்கையளவிலான முடிவுகளை யதார்த்தம் தகர்த்தெறிந்துவிடும் சந்தர்ப்பங்களே அதிகம் உண்டு. இதனை கருத்தில் எடுக்காமல் இருந்துவிட முடியுமா?

**பிரபுத்திரன்**

(03ம் பக்கம் தொடர்ச்சி )

அதே யுத்தியை பயன் படுத்திதாம் வெளியில் வருவோம். ஆனால் ஜே.வி.பி சற்றும் எதிர்பார்க்காத அடுத்த கண்ணி யும் விதைக்கப்பட்டாயிற்று. ஜே.வி.பியின் உடனடி எதிரியாம் இவர்களின் ஆதரவுத் தளத்தினையே அபகரிக்கத்தக்க ஆற்றலுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய இரவோடு இரவாக உருவாகிவிட்டது. உருவாகி ஒரு மாதத்திற்குள் மேல் மாகாண நகர்ப்புற வணிகர் குழாம் விரத்தியடைந்திருக்கும் மத்தியதர வகுப்பு போன்ற தரப்புக்களின் ஆதரவைப்பெற்ற ஜே.எச்.யுவிற்கு ஜே.வி.பியின் கிராமத் தளங்களைக் கைப்பற்ற இவ்வளவு காலம்கூடத் தேவைப்படாது என அறிந்தவர்கள் கூறுகின்றார்கள். அமைதி முயற்சிக்கு சற்று அசைந்து கொடுத்தாலும் 'தேசப் பிரேமிகள்' 'தேசத் துரோகிகளாகி' விடுவர். எங்கு கால்வைத்தாலும் வெடிப்பதற்கு ஆயத்தமாக கண்ணிகள் உள்ளன.

ஏறத்தாழ இதே நிலையில் வேறு பரிமாணத்தில் இந்தியத் தரப்பின் நிலையுமுள்ளது. குறிப்பாக எப்போதுமே டெல்லியின் உயர் மேலாதிக்க அதிகார வருக்கத்தினருக் கும் இவர்கள் பிடியிலே சிக்கி வழி- தவறிப் போகும் இந்தியக் கட்சிகளுக்கும் இம்முறை ஏழை வாக்காளர் கொடுத்த தண்டனை இன்று இப்பிராந்தியம் முழுவதும் எதிரொலிக்கின்றது. பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனிடம் பிரம்படி சிவன் பெற்றபோது அதன் வலி எங்கும் வலித்ததாமே அதுபோல. இந்தியாவின் கல்வியறிவற்ற வாக்காளரின் அரசியல் முதிர்ச்சி எல்லாத் தரப்பிற்குமே அவர்களிட்டிருக்கும் வேகத் தடைகள், உலகத்தையே பிரமிப்பிலாழ்த்தியுள்ளன. கிராமத்தாரின் தீர்ப்பு எனப்படும் இத்தீர்ப்பானது இங்கும் எதிரொலிக்கின்றது. நீண்ட காலத்திற்கு மக்கள் மீது குதிரையோட முடியாது என்பது உணரப்படுவதாலே அம்மையாரும் ஜே.வி.பியினரும் ஏதாவது ஒரு முடிவிற்கு வந்தடைந்து அதனைப் பற்றி நிற்கும் கட்டாயம் உருவாகின்றது. இந்நிலைப்பாடு விரைவில் பல எதிர்பாராத மாற்றங்கள் உருவாக இங்கு வழிவகுக்கும். ஒருமுறை இந்தியப் பாடங்களை நாமும் அறிந்திடுவோம். "இந்து" பார்ப்பனிய மேலாதிக்கத்தின் ஊதுகுழலால் கூட உண்மைகளை மறைக்க முடியவில்லை. முதலாவது பாடம் இந்தியாவின் உயர் ஆளும் குழாம் முதற்தடவையாக பொதுமக்கள் மீதான தமது தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டுவிட்டது உணர நேரிட்டமை. அடுத்த பாடம் ஊடகங்களை கருவிகளாகப் பயன்படுத்தி உருவாக்கப்படும் பெருமெடுப்பிலான அதிநவீன தொழில்நுட்ப தோற்றப்பாடுகள் கருத்துக் கணிப்புக்கள், புள்ளி விபரங்கள் யாவுமே மக்களை திசைதிருப்ப முடியாமல் பரிதாபகரமான படுதோல்வி கண்டமை இதனையே 'இந்துவில்' சைய்னாத் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். இதழியல் தோற்றது - தேர்தல் வென்றது ("THE POLLS SUCCEEDED WHERE JOURNALISM FAILED") சந்திரபாபு நாயுடுவின் பேயறைந்த முகம், வாஜ்பாயின் பரிதாபகர முகம், அத்வானியின் அசடுவழியும் முகம், சோனியாவின் திகைப்பு முகம், மார்க்சிய தலைவர்களின் மலர்ந்த முகம் பிராந்திய கட்சித் தலைவர்களின் தன்னம்பிக்கை முகம். இவை வரலாற்றுப் பதிவுகள் இம்மாற்றங்கள் கல்வியறிவற்ற ஒருவேளை மட்டும் உணவுண்ணும் இருபது கோடி மக்கள் உள்ளடங்கிய தொகுதியின் அறிவின் வெளிப்பாடு. மட்டுப்படுத்தப்பட்ட, (காங்கிரசுக்கு 145 ஆசனங்கள் மட்டுமே) கூட்டாட்சி எனும் நிர்ப்பந்தம் திணிக்கப்பட்ட உறுதியற்ற சூழல் பொதுவில். ஆனால் தமிழ் நாட்டிலோ சிதைவுறாத வரலாறுகாணாத சிக்கலற்ற முடிவு. இதுவுமொரு அதிசயம் தான் இதனாலே இதனையே 'திராவிடத்தின் மீள் எழுச்சி' (உண்மையில் அவ்வாறில்லைத் தான்) என 'இந்தியா டுடே' அழைக்க நேரிட்டது.

இவையாவும் சொல்லும் செய்திகள். கண்ணிகள் இப்போது தமிழீழத்தில் விதைக்கப் படுவதில்லை. விதைத்தவராலும் விதைக்க உதவியோராலுமே அகற்றப்படுகின்றன என்பது தான்.



www.eelamview.com

www.eelamview.com



# அமிலக்கடலும் பவளப் பாறையும்

நேற்றைய காலத்தை நீயே வனைந்தாய்
உன்னைச் சுற்றி ஒளி வட்டம் இருந்தது.
இன்று காலமுன்னை வரையக் கிடக்கிறாய்
ஒளிவட்டம் மறைய இருள்வட்டம் உயர்கிறது.
பாடு பொருளே நீயாயிருந்தாய்
உன்னைப் பாடாத வாயேது?
இன்று எவரெவரோ பல்லக்கின் பின்னே
போற்றிப்பகவல் பாடியபடி போகிறாய்.
கடலில் மிதக்கிறது எம் பவளப்பாறை
நேற்றுவரை அசைக்கமுடியாதென்றிருந்த பாறை
அமிழ்ந்தும், மிதந்தும் அல்லாடுகிறது.
அலையெற்றும் திசைவழியிற்தான்
அதன் பயணமென்றாச்சு.
பலம் கொண்டோர் வந்து உருட்டிப் பார்த்து
தோற்றுத் திரும்பிய வரலாறுண்டு பாறைக்கு.
வெடிவைத்து பிளப்போமென வந்தோர்
உள்ளே தெய்வசொரூபம் தெரிவதாய்ச் சொல்லி
அகங்காரமழிந்து வணங்கிச் சென்றனர்.
இன்று இறகுபோல் மிதக்கிறதே எம் பவளப்பாறை
எவரெவரோ காலாலெற்ற அப்பாவியாய் ஆடுகிறது.

நிகழ்காலத்தை எதிர்கால இருள்சூழக் கிடக்கிறோம்.
கரும்புலிகள் அதிசயம் நிகழ்த்திய தலைநகரில்
கறுப்புப் பட்டியுடன் மௌனமாய் நிற்கும் அவலம்
எதை உணர்த்துகிறது எமக்கு?
ஊருக்குப் போகும் தெருவில் பாடியபடி நடக்கிறாய்
இடையில் தேசம் தடலப் புழுவாய் நெளிகிறாய்
புரியவில்லையா உனக்குன் புன்மை?
போரை நிறுத்தியது நாங்கள்
கண்காணிப்பது யார்?
இடித்துக் கொட்டியது அரச ஆதிக்கம்
கூரை போடுவது யார்?
உள்நோக்கம்மின்றியா உலகம் ஓடிவருகிறது?
ஓடிவருபவரின் வீடுகளில் கூரை ஒழுகிறது.
அவர்கள் எமக்கு ஓலை தருகின்றனர்
சூத்திரத்தை விளங்காமல் விரல் சூப்பிக்கிடக்கிறாய்?
புரிந்து கொள்ள முடியாதவாறு போதையேற்றி
உன்னை வெற்றிகொண்டதா உலகம்.
சமாதானம்
சமரசம்
மனிதாபிமானம்
நவீனத்தை நோக்கிய நகர்வு
உலகுடன் ஒத்தொழுகல் என்று
நீ வெற்றுச் சொற்களின் முன்னே விழுந்து கிடப்பது
கற்பனையில் தாலிகட்டுவது போன்றது.
குதூகலிக்க முடியுமே தவிர குடும்பம் நடத்த முடியாது.
உலகெங்கும் உற்பத்தி வீழ்ச்சி
வல்லரசுகள் புதிய சந்தைகள் தேடுகின்றன.

தோளியேறிக் காதையே கடிக்கின்றன.
வழியாவும் அடைக்கப்பட்டிருந்த நாளில்
எத்தனை வடிவாயிருந்தனை நீ.
பசித்திருந்த காலத்தில் பாலாறாவாயனாய்
தேஜஸ் வழியக் கிடந்தாய்.
தூற்றியோர் காலத்தில் சுழன்று விட்டு
போற்றுவோர் காலத்தில் தொலைந்து போகிறாய்.
ஏ9 வீதி உனக்காகவா திறந்தது
இல்லையடா.
சந்தையில் சாமான்களை விற்கவே தடைகளை எடுத்தனர்.
கப்பலில் கொண்டு போவது காலதாமதமென்பதால்
இப்பாதையை திறந்தனரேயன்றி
இதிலொரு மனிதாபிமானமும் இல்லை.
விடுதலையை உன் வாசலில் விடுவதற்குப் பதிலாக
வெள்ளைக் கலாச்சாரங்களை விடுகின்றனர்.
விடுதலையுணர்வு விசாலித்த விறாந்தையில்
தொலைக்காட்சி பெட்டி வைத்தாய்
பெட்டிக்குள்ளிருந்து கனவாய்க் கூந்தலாய் நீளும் கைகள்
கழுத்தைச் சுற்றி இறுக்கி
உனக்கு மூச்சுத்திணற வைக்கிறது.
பாலுணர்வின் தசைவழித்து விடைக்கும் பரப்பி
விடுதலையுணர்வை வெளியேற்றுகிறது.
தங்கை குளிப்பதை பார்க்க தமையன் ஆசைப்படுமளவுக்கு
'சக்தி' வந்துவிட்டது சகோதரனுக்கு.
உரும்பிராயில் ஒருவன் உரிந்துவிட்டு ஓடினான்
இருட்டிலோடுவது இழிவென எண்ணி
பின்னே ஒளியேற்றிப் போயினராம் நண்பர்.



பாறை மிதப்பது உப்புநீர்க் கடலிலல்ல
அமிலக் கடலில்.
அது கல்லை மிதக்கச்செய்வது மட்டுமல்ல
கரைத்து விடவும் வல்லது.
பாறையறியுமா தன் பரிதாப நிலையை?
கடலிலும் மிதக்கிறேன் நானெனும் களிப்பில்
கிடக்கிறது கரைவதறியாத பாறை.
முன்னரும்பல பாறைகளைக் கரைத்தழித்ததும்
இந்த அமிலக் கடல்தான்.
பாறையறியாமல் வெகுகச்சிதமாய்
கரைத்து விடுவதில் அமிலக் கடல் வெகு கில்லாடி.
குங்குமம் கரைத்துக் குளிப்பாட்டி
மஞ்சள் பூசி
பட்டுக்கட்டிப் பரவசப்படுத்தி
பூச்சூடி புனிதமாக்கி
என்றும் நீயேயென வாழ்த்துப்பாடி
மயிர்சிலிர்க்க வைக்கும் முதலில்.
பின்னர் நோகாமல் மெல்ல உருட்டி உள்வாங்கி
உயிரை வெளியிலெடுத்து உருக்குலைக்கும்.
இப்போ எம்பவளப்பாறைக்கும் இதுதான் நடக்கிறது.
அமிலக்கடலில் கரைவதறியாமல்
உலகை ஏய்க்கும் திருப்பமெனும் நப்பாசையில்

**வியாசன்**

காற்றலைவது போல வெற்றிடங்கள் பார்த்து
அகப்படுமிடங்களில் கூடாரமடித்து
அலங்காரப் பொருட்களின் கடைவிரிக்கின்றன.
சண்டையிருந்தால் சாமான் விற்கமுடியாதென்பதால்
சந்தைகூடுமிடத்தில் அவர்களுக்கு சமாதானம் வேண்டும்
விடுதலை பற்றி அவர்களுக்கென்ன கவலை
விற்பனை ஒன்றே இலக்கு.
எரிமலைக்கருகில் எவர்தான் கடை திறப்பார்?
புயல்மையத்தருகில் எவர்தான் பூச்செடி நடுவார்?
எனவேதான்
எரிமலைகளையும், புயல்மையங்களையும்
இல்லாதழிக்க முயல்கின்றனர்.
வீரியமிக்க விடுதலைப்பாறையே!
நீ எடுப்பாய் நிமிர்ந்திருந்த வரையும்
உன்னைத் தூசியும், பாசியும் தொடப்பயந்தன.
நெருப்பாய் சுடர்ந்த காலத்தில்
அருகாய் நெருங்கவே அச்சமுற்றிருந்தன.
கொஞ்சம் குளிர்ந்ததும் பார்த்தாயா

செய்தி சுந்தர்மடத்துப் பெண்ணொருத்தி காதில்விழுந்தது
"அவன் ஐநூறு ரூபாவுக்கா ஓடினான்
ஐம்பது தந்தால்நானோடுவேன்" என
வீராங்கனை முஷ்டியுயர்த்தி முழங்கினாளாம்.
விடுதலைப்பாறை அமிலக்கடலில் அல்லாடுகிறது
காலம் கரையைக் கரைய பவளப் பாறையும் கரையும்.
உயிருறுஞ்சி இறுகிய பாறை
உணர்விழந்து மரிக்கவும் கூடும்
அமிலக் கடலிறங்கி கரையேற்றும்பணியில்
அவசரம் வேண்டும்
இல்லையெனில் விரைவிலே கரைந்துவிடும்
அது பொல்லாத அமிலக்கடல்.
பாறை கடலிற்தான் கிடக்குமெனில்
அதன்பிறகு என்னவாகும்?
தருவதை வாங்குவதைத் தவிர வழியற்றுப் போக
பழிக்கும் எதிர்காலம்.



www.eelamview.com